# சைவ நெறி

## ஏழாம் வகுப்பு



கல்வி வெளியீ[illegible]

# சைவ நெறி

## ஏழாம் வகுப்பு

கல்வி வெளியீட்டுத் திணைக்களம்

எல்லா உரிமையும் இலங்கை அரசினர்க்கே.

முதற் பதிப்பு 1976
இரண்டாம் பதிப்பு (திருத்தியது) 1981
மூன்ரும் பதிப்பு 1982
நான்காம் பதிப்பு 1985
ஐந்தாம் பதிப்பு 1985
ஆரும் பதிப்பு 1986
ஏழாம் பதிப்பு 1987

இந்நூல் தெகிவளை, திஸர அச்சகத்தில் அச்சிட்டு, கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தால் வெளியிடப்பட்டது.

87/ஒ/104 (20 000)

இலவசக் கல்வியின் முழுப் பயனையும் பெறுதற்குப் பாட நூல்களையும் இலவசமாக வழங்கவேண்டும் என்று, நாற்பது ஆண்டுகளுக்கு முன்னர் சனாதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தன அவர்கள் எடுத்துரைத்த ஆலோசனை 1980 ஆம் ஆண்டிலிருந்து செயலாக மலர்ந்து, இந்நூல் உங்களுக்கு இலவசமாகக் கிடைக்கின்றது.

நல்லன கற்று
நலம் பெறுவீரென
நம்மர சளிக்கும்
நன்கொடை இந்நூல்.

நன்கிதைப் பேணி
நலமே கற்று
நற்குணம் பெற்ற
நற்குடி யாவீர்.

சிங்களர் தமிழர் முஸ்லிம் யாம்
சீருடன் பயின்று இணைந்தாலே
மங்களம் பொங்கும் பொன்னுலகாய்
மாண்புடன் விளங்கும் நம் இலங்கை.

லயனல் ஜயதிலக
கல்விச் சேவைகள் அமைச்சர்

# தேசிய கீதம்

சிறீ லங்கா தாயே — நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ தாயே

1. நல்லெழில் பொலி சீரணி
நலங்கள் யாவும் நிறை வான்மணி லங்கா
ஞாலம் புகழ் வள வயல் நதி மலை மலர்
நறுஞ்சோலை கொள் லங்கா
நமதுறு புகலிடம் என ஒளிர்வாய்
நமதுதி ஏல் தாயே
நம தலை நினதடி மேல் வைத்தோமே
நமதுயிரே தாயே — நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ தாயே

2. நமதாரருள் ஆனாய்
நவை தவிர் உணர்வானாய்
நமதேர் வலியானாய்
நவில் சுதந்திரம் ஆனாய்
நமதிளமையை நாட்டே
நகு மடி தனையோட்டே
அமைவுறும் அறிவுடனே
அடல்செறி துணிவருளே — நம் **சிறீ லங்கா**
நமோ நமோ நமோ தாயே

3. நமதார் ஒளி வளமே
நறிய மலர் என நிலவும் தாயே
யாமெலாம் ஒரு கருணை அனைபயந்த
எழில்கொள் சேய்கள் எனவே
இயலுறு பிளவுகள் தமை அறவே
இழிவென நீக்கிடுவோம்
ஈழ சிரோமணி வாழ்வுறு பூமணி
நமோ நமோ தாயே — நம் சிறீ **லங்கா**
நமோ நமோ நமோ தாயே.

## நூன்முகம்

8 ஆம் ஆண்டுக்கென இந்நூல் மறுபதிப்புச் செய்யப்பட்டுள்ளது.

இதனை மறுபதிப்புச் செய்வதற்குப் பல்வேறு வழிகளில் ஒத்துழைத்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றி.

எம். கே. ஜே. ஏ. அல்விஸ்
ஆணையாளர்.

கல்வி வெளியீட்டுத் திணைக்களம்,
கொழும்பு-10,
1987.3.2.

## முன்னுரை

மாணவர் உள்ளங்களிலே தெய்வ நம்பிக்கை, உயர்ந்த இலட்சியங்கள், பாரம்பரியத்திற் பற்று ஆகியவற்றை வளர்த்தல், நீதியும் நேர்மையும் நிறைந்ததொரு சமுதாயத்தை உருவாக்கல் ஆகிய நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு, சமய பாடத்தை மேலும் அர்த்தமுள்ளதாவும், வாழ்க்கையோடு இணைந்ததாகவும், அதே சமயம் மாணவர் உளங்கொளத் தக்கதாகவும் அமையும்படி செய்வதற்கான ஒழுங்குகளை அரசாங்கம் மேற்கொண்டுள்ளது.

இந்த நோக்கங்களுக்கு இயைய, திருத்தி அமைக்கப்பட்ட பாடத்திட்டத்திற்கு ஏற்ப, பாலர் வகுப்பு முதல் 'சைவ நெறி' பாடநூல்கள் எழுதப்பட்டுள்ளன. இப்பாடநூல்களுள் இது ஏழம் வகுப்பிற் கற்கும் மாணவர்கள் பயன்படுத்துவதற்கு உரியது.

சைவ சமய ஈடுபாடு, சமய ஞானம், ஆசிரிய அனுபவம் ஆகியன கைவரப்பெற்ற எழுத்தாளர்களால், கல்வி அமைச்சின் இந்து சமய ஆலோசனைச் சபையின் நெறிப்படுத்தலுக்கு இயைய, இப்பாடநூல்கள் எழுதப்பட்டுள்ளன.

கல்வி அமைச்சின் இந்து சமய ஆலோசனைக் குழுவுக்கும், இந்த நூல்களை உருவாக்க உதவிய எழுத்தாளர்களுக்கும் ஓவியர்களுக்கும் எனது நன்றி உரித்தாகும்.

எச். ஆர். சந்திரசேகர
ஆணையாளர்

கல்வி வெளியீட்டுத் திணைக்களம்,
புதிய செயலகம்,
கொழும்பு-10,
1986.4.9.

**நூல் வெளியீட்டு உபகுழு:**

திரு. ந. சண்முகரத்தினம்
திரு. செ. வேலாயுதபிள்ளை
திருமதி பாலம் லக்ஷ்மணன்
திரு. பெ. கணநாதபிள்ளை (இணைப்புச் செயலாளர்)
திரு. வே. வல்லிபுரம்

**எழுத்தாளர் குழு:**

திரு. ந. சண்முகரத்தினம்
திருமதி பாலம் லக்ஷ்மணன்
திரு. சி. சிவகுருநாதன்
திரு. மா. க. சிவபாதலிங்கம்
திருமதி இராஜேஸ்வரி பரமேஸ்வரன்

**ஓவியர்:**

திரு. மா. செல்வகுருநாதன்

**பதிப்பாசிரியர்:**

திருமதி சொர்ணவதி மாசிலாமணி

**தமிழ்ப் பகுதிப் பொறுப்பாளர்:**

திரு. வே. வல்லிபுரம்

**ஒளிப்படங்கள் அன்பளிப்பு:**

1. கோணேச்சரம்: திரு. மு. கோ. செல்வராசா, தலைவர் திருக்கோணேச்சரப் புனருத்தாரண மகா கும்பாபிடேக சபை.
2. பொன்னம்பலவாணேச்சரம்: தர்மகர்த்தா சபை.

## கல்வி அமைச்சின் இந்து சமய ஆலோசனைக் குழு
## 1978–1981

1. இளைப்பாறிய நீதியரசர் வி. சிவசுப்பிரமணியம் (தலைவர்)
2. சுவாமி பிரேமாத்மானந்தஜீ
3. கேணல் இரா. சபாநாயகம்
4. பேராசிரியர் கா. கைலாசநாதக் குருக்கள்
5. திரு. கி. லக்ஷ்மண ஐயர்
6. செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி
7. திரு. ப. சந்திரசேகரம்
8. கலாநிதி வே. இராமகிருஷ்ணன்
9. திரு. ந. சண்முகரத்தினம்
10. திரு. கு. பாலசிங்கம்
11. திரு. வே. முருகேசு
12. திரு. டீ. எம். சுவாமிநாதன்
13. பேராசிரியர் த. நடராசா
14. பேராசிரியர் ஆ. சதாசிவம்
15. திரு. சி. சிற்றம்பலம்
16. திரு. உ. சோமசேகரம்
17. திருமதி பராசக்தி சுந்தரலிங்கம்
18. திரு. செ. வேலாயுதபிள்ளை
19. திருமதி பாலம் லக்ஷ்மணன்
20. திரு. பெ. கணநாதபிள்ளை (இணைப்புச் செயலாளர்)

# பொருளடக்கம்


| பாடம் | | பக்கம் |
|---|---|---|
| 1. | எமது சமயம் | 1 |
| 2. | திருக்கோயில் | 6 |
| 3. | ஆலயத் தொண்டு | 10 |
| 4. | கோயிற் பூசை | 13 |
| 5. | திருக்கோணேச்சரம் | 20 |
| 6. | பொன்னம்பலவாணேச்சரம் | 25 |
| 7. | விநாயகர் வழிபாடு | 31 |
| 8. | முருக வழிபாடு | 34 |
| 9. | விரதங்கள் | 37 |
| 10. | சைவப் பண்புகள் | 39 |
| 11. | மெய்ப்பொருள் நாயனர் | 41 |
| 12. | குங்குலியக்கலய நாயனர் | 44 |
| 13. | கந்தபுராண கலாசாரம் | 46 |
| 14. | ஸ்ரீ இராமகிருஷ்ணர் | 54 |
| 15. | யோகர் சுவாமிகள் | 60 |
| 16. | சம்பந்தர் தேவாரம் | 64 |
| 17. | அப்பர் தேவாரம் | 68 |
| 18. | சுந்தரர் தேவாரம் | 72 |
| 19. | திருவாசகம் | 76 |
| 20. | திருவிசைப்பா | 79 |
| 21. | திருப்பல்லாண்டு | 81 |
| 22. | பெரிய புராணம் | 84 |
| 23. | கந்த புராணம் | 90 |
| 24. | திருப்புகழ் | 92 |
| 25. | திருக்குறள் | 94 |


## அநுபந்தம்


| | | |
|---|---|---|
| (அ) | இந்து சமயப் பண்டிகைகள் | 100 |
| (ஆ) | இலங்கையின் பௌத்தப் பெருநாள்கள் | 104 |
| (இ) | முஸ்லிம் பெருநாள்கள் | 109 |
| (ஈ) | கிறிஸ்தவ திருவிழாக்கள் | 113 |

உ

சிவமயம்

## கடவுள் வணக்கம்

திருச்சிற்றம்பலம்

பரிந்துநன் மனத்தால் வழிபடும் மாணி
தன்னுயிர் மேல்வருங் கூற்றைத்
திரிந்திடா வண்ணம் உதைத்தவற் கருளுஞ்
செம்மையார் நம்மையா ளுடையார்
விரிந்துயர் மௌவல் மாதவி புன்னை
வேங்கைவண் செருந்திசெண் பகத்தின்
குருந்தொடு முல்லை கொடிவிடும் பொழில்சூழ்
கோணமா மலையமர்ந் தாரே.

திருச்சிற்றம்பலம்

## குறிக்கோள்கள்

1. அன்றாட வாழ்க்கையில் மாணவர் கடைப்பிடிக்க வேண்டிய சமயாசாரங்களையும் சமய பழக்க வழக்கங்களையும் உணர்த்துதல்.
2. சமய அடிப்படைத் தத்துவங்களைப் பற்றிய அறிவையும் விளக்கத்தையும் போதித்தல்.
3. அனுபூதிமான்களின் தோத்திரப் பாடல்களைப் பண்ணோடு பயிற்றுவதன் மூலம் சமயப் பற்றையும் பத்தியையும் மாணவர் மனத்திற் பதித்தல்.
4. தமது சமய பாரம்பரியச் சிறப்பை மாணவர் உணரச் செய்தல்.
5. கடமையுணர்ச்சி, நேர்மை, தியாகம், பரோபகாரம் ஆகியன போன்ற நற்குணங்களும் நல்லொழுக்கமும் உடைய நன்மக்களை உருவாக்குதல்.

# 1. எமது சமயம்

இந்தியாவின் வடமேற்குப் பகுதியிலே, இமய மலையின் அடிவாரத்திலிருந்து அராபியக் கடலை நோக்கிப் பாய்கிறது சிந்து நதி. இற்றைக்கு ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்னிருந்தே சிந்துநதிப் பள்ளத்தாக்கில் வாழ்ந்த மக்கள் நாகரிகத்திலும் பண்பாட்டிலும் தனி சிறந்து விளங்கினர். உலக வாழ்க்கைக்கு உயிர்நாடியாக ஒரு பரம்பொருள் இருப்பதை அவர்கள் உணர்ந்திருந்தனர். அவர்கள் போற்றிய சமயம் சிவனைப் பரம்பொருளாகக்கொண்ட சைவமாகும். வடமேற்குக் கணவாய் வழியாகப் பின்னர் அங்கு வந்து குடியேறிய ஆரியர், தொடக்கத்திலே இந்திரன், வருணன், அக்கினி முதலான இயற்கைத் தெய்வங்கள் பலவற்றை வழிபட்டு வந்தனர். அவர்களும் காலப்போக்கிற் பரம்பொருள் ஒன்றே என்ற உண்மையை உணர்ந்துகொண்டனர். சைவம், சாக்தம், வைணவம், காணபத்தியம், கௌமாரம், சௌரம் என்னும் சமயப் பிரிவுகள், இந்தியாவின் பல பாகங்களிலே, பரம்பொருளுக்குச் சிவன், சக்தி, விஷ்ணு, கணபதி, குமாரன், சூரியன் என்று மக்கள் இட்டு வழங்கிய பெயர் காரணமாக எழுந்தன. இச் சமயப் பிரிவுகள் எல்லாவற்றையும் அடக்கிய சமயமே 'இந்து சமயம்' என்று சொல்லப்படுகிறது. இந்து சமயம் என்பது இந்திய மக்களின் சமயத்தைக் குறிப்பதற்கு மேனாட்டார் வழங்கிய பெயராகும். பண்டைய இந்தியாவில் இச்சமயம் 'சனாதன தர்மம்' என்றும், 'வைதிக சமயம்' என்றும் வழங்கிவந்தது.

இந்து சமயத்தின் ஒரு பிரிவான 'சைவம்' மிகப் பழைமை வாய்ந்தது. மிகமிகப் பழைய காலத்திலே சிவ வழிபாடு உலகின் பல பாகங்களிலும் பரவியிருந்தது என்று ஆராய்ச்சி வல்லார் கூறுவர். இன்று அது இந்தியாவிற் பரவலாகக் காணப்பட்டாலும், வட இந்தியாவிலுள்ள காசிமீரத்திலும், நேபாளத்திலும், தென்னிந்தியாவிலும், ஈழத்திலும் சிறப்புற்று விளங்கக் காண்கிறோம்.

எமது சமயத்தின் இரு கண்கள்போல விளங்குபவை வடமொழியாகிய சமஸ்கிருதமும் தென்மொழியாகிய தமிழுமாம். இந்த இரு மொழிகளிலும் எமது சமய உண்மைகளைக் கூறும்

பிரமாண நூல்களும் பிற இலக்கியங்களும் உள்ளன. வட மொழியில் உள்ளவை வேதங்கள், உபநிடதங்கள், சிவாகமங்கள் முதலியவை. தமிழில் உள்ளவை பன்னிரு திருமுறைகள், பதினன்கு சித்தாந்த சாத்திரங்கள் முதலியவை.

எமது சமயம் பல கடவுளரைப் பற்றிக் குறிப்பிடுகின்றது என்று பலர் கருதக்கூடும். நாம் திருக்கோணமலை சென்று சிவ பெருமானை வழிபடுகின்ருேம்; நயினைக்குப் போய் நாகபூசணி அம்மனைக் கும்பிடுகிருேம்; கதிர்காமம் சென்று முருகக் கடவுளை வணங்குகின்ருேம். எமது சமயத்தில் எத்தனை கடவுளர் என்று நம்மிற் சிலர் வியப்புறலாம். எல்லாக் கடவுளரும் பரம்பொரு ளுக்கு நாம் இட்டுள்ள பல பெயர்களே. இறைவனைத் தாயாக வழிபட்டவர்கள் அம்பிகை என்று அழைத்து அடிபணிந்தனர். குழந்தையாக வழிப்பட்டவர்கள் குமரனென்று சொல்லிக் கும் பிட்டார்கள். எவர் எவர் எந்த எந்த வடிவில் எண்ணி வணங்கி ுலும், அவரவர்க்கு அந்த அந்த வடிவில் வந்து இறைவன் அருள்புரின்ருன் என்பதை எமது சமயம் வலியுறுத்துகிறது. மேலும், எல்லா நாட்டினரும் இறைவன் என்று போற்றுகின்ற அந்தப் பரம் பொருளையே தென்னுட்டவராகிய சைவசமயிகள் சிவன் என்று போற்றுகின்றனர் என்றும் அது விளக்குகின்றது. அதுமட்டுமா ? இவ்வுலகில் ஓயாது ஒழியாது நிகழும் ஆக்கத் தையும் அழிவையும் நடத்துபவன் இறைவனே என்பதை விளக்க, அவ்விறைவன் ஆனந்தத் தாண்டவமாடும் நடராசப் பெருமானுகவும் காட்டுகின்றது நமது சமயம்.

இந்தக் கடவுட் கொள்கை எவ்வாறு எழுந்தது? இது, இன்றைய விஞ்ஞானத்துக்கு ஒத்துப்போகுமா? என்பன போன்ற வினுக்கள் எம்முடைய மனத்திலே எழக்கூடும். நாம் எமது ஐம்புலன்களினுலும் அறியும் இயற்கையை உற்றுநோக்கிச் சிந்தித்துப் பார்ப்போமானல் ஓர் உண்மையை உணருவோம்; பகலும் இரவும் மாறிமாறி வருகின்றன. சூரியனும் சந்திரனும் மாறி மாறித் தோன்றுகின்றன. பருவ காலங்கள் ஓர் ஒழுங்கிலே வந்து செல்கின்றன. ஓரறிவு உடைய உயிரினங்கள் முதல் ஆற றிவு படைத்த உயிரினங்கள் வரை எண்ணில்லாத உயிர் வருக்கங்கள் தோன்றுகின்றன; அழிகின்றன. நாம் பிறக்கின் ருேம்; இறக்கின்ருேம்; எல்லாம் ஓர் ஒழுங்கில் இயங்குகின்றன. இந்த உலகம் சூரியனைச் சுற்றி வருகின்றது; எமது பூமி மட்டு மன்றி வேறு பல கோள்ளும் சூரியனைச் சுற்றிவருகின்றன. இது ஒரு சூரிய மண்டலம். அண்டவெளியிலே அளப்பரிய சூரிய மண்டலங்கள் பல காணப்படுகின்றன. இவை எல்லாம் ஒரு

நியதியில் நடக்கின்றன. இந்த ஒழுங்குக்கு, இந்த நியதிக்கு மூலகாரணமாயுள்ள பொருள் ஒன்று இருக்கவேண்டுமல்லவா? அந்த மூலகாரணத்தையே பரம்பொருள் என்று சொல்கின்றோம். இத்தகைய பரம்பொருள் ஒன்று உண்டென்பதை இற்றைக்குப் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே எமது முன்னோரான மெய்ஞ்ஞானிகள் தமது உள்ளுணர்வாற் கண்டு கூறியுள்ளனர்.

அந்த மெய்ஞ்ஞானிகள் கண்ட உண்மையை இன்றைய விஞ்ஞானமும் ஒத்துக்கொள்கின்றது. இக்கால விஞ்ஞானியருள்ளே தலைசிறந்தவரான அல்பேட் அயின்ஸ்டீன் என்பவர் இக்கருத்துப்படக் கூறியுள்ளார்; ''தொடக்கமும் முடிவும் இல்லாமல், உணர்வுடைய உயிர்வாழ்க்கையினூடே என்றும் நிலைத்து நிற்கும் மறைபொருளான உண்மை ஒன்று உளது. அதுவே நாம் அனுபவிக்கக் கூடிய அதிசிறந்த அழகாகும். அதுவே கலை, விஞ்ஞானம் அனைத்துக்கும் ஊற்றாய் உள்ளது. அதுவே சமயத்தையும் தோற்றுவித்துள்ளது. அதனை எமது சிற்றறிவால் முற்றும் உணர முடியாதாயினும், எமது அகக் காட்சியால் அதன் ஒரு சிறு பகுதியையேனும் கண்டு அனுபவிக்கலாம்; அவ்வாறு காணும்போது, அது மிகவுயர்ந்த ஞானமாயும் பேரொளி வீசும் அழகாயும் விளங்குவதை உணரலாம். அதன் பெருமையையும் என் சிறுமையையும் எண்ணி, அதன் முன்னிலையில் வியப்போடும் பயபக்தியோடும் அடங்கி நிற்கின்றேன். இந்த அனுபவம் ஒன்றுமே எனக்குப் போதுமானது.''

விஞ்ஞானியான அயின்ஸ்டீன் எந்த உண்மைப் பொருள் பற்றிக் கூறுகின்றாரோ, அந்தப் பொருளையே நாம் பரம்பொருள் என்கின்றோம்; ''பதி'' என்கின்றோம். பதி என்பதற்குத் தலைவன் என்பது பொருள். பதி எல்லாவற்றையும் கடந்து நிற்கும் பொருள்; நமது உயிருக்கு உயிராக உள்ளே இருந்து நம்மை இயக்கும் பொருள்; அவ்வாறே இப்பிரபஞ்சத்துக்குப் புறம்பாயும் உள்ளாயும் இருந்து அனைத்தையும் இயக்கும் பொருள். கடந்தும் உள்ளேயும் இருப்பதாற் 'கடவுள்' என்று அதனைக் குறிப்பிடுகின்றோம். 'கடவுதல்' என்பதற்கு 'இயக்குதல்' என்றும் பொருள் உண்டு. இப்பிரபஞ்சத்தை இயக்கும் பொருளைக் கடவுள் என்று சொல்வதும் பொருந்துவதே.

கடவுள் என்னும் இப்பரம்பொருள் பரிபூரணமானது; நித்தியமானது; எங்கும் நிறைந்தது; எல்லாம் வல்லது; எல்லாம் அறிவது. அப்பரம்பொருளை எமது சமயம் சிவன் என்று பெயரிட்டு வழங்குகின்றது என்பதை முன்னே கண்டோம். வேதங்

கள் அப்பொருளைச் 'சத்து' (உள்ளது) என்றும், 'சித்து' (அறிவது) என்றும், 'ஆனந்தம்' (இன்பமயமானது) என்றும், பெரியவற்றுள் எல்லாம் பெரியது என்றும், சிறியவற்றுள் எல்லாம் சிறியது என்றும், 'பிரமம்' என்றும் பலவாறு கூறும். தமிழிலுள்ள திருமுறைகளும் சித்தாந்த சாத்திரங்களும் பதியாகிய சிவபெருமானின் இயல்புகளை விரிவாக எடுத்துக் கூறுகின்றன.

இப்பதியை உண்டென உணரும் ஆன்மாக்களாகிய நாம் பூரணமில்லாதவர்கள்; சிற்றறிவு படைத்தவர்கள்; அறிவிக்கப்பட்ட வழியே அறிபவர்கள்; உலகிலே உடலெடுத்துப் பிறந்து இன்பதுன்பங்களை அனுபவிப்பவர்கள். இங்கு 'நாம்' என்று கூறும்போது, உடம்புக்குள் இருக்கும் உயிரையே குறிப்பிடுகின்றோம். இந்த உயிர்களைப் 'பசுக்கள்' என்றும் கூறுவதுண்டு. பசுக்கள் என்றால் 'கட்டுண்டவர்கள்' என்பது பொருள். நாம் எவற்றால் கட்டுண்டிருக்கிறோம்? கோபத்தால், துக்கத்தால், மகிழ்ச்சியால், ஆசையால், கவலையால் என்று சொல்லிக் கொண்டே போகலாம். நமக்குக் கோபம் வருகிறது. துக்கம் ஏற்படுகிறது. மகிழ்ச்சி பொங்குகிறது. ஆசை பெருகுகிறது. ஓயாத கவலை உண்டாகிறது. இவற்றுக்கெல்லாம் காரணம் நமது அறியாமையே. இந்த அறியாமைக்கு 'ஆணவம்' என்று பெயர். இதுவே ஆன்மாக்களாகிய நம்மைக் கட்டி வைத்திருக்கிறது. கட்டுவதனால் இதற்குப் 'பாசம்' என்றும் பெயருண்டு. எனவே, எமது சமயம் பதி, பசு, பாசம் என்னும் முப்பொருளைச் சொல்லுகின்றது.

எம்மைப் பற்றி நிற்கும் ஆணவம் எத்தனையோ கோலங்களிலே தன்னைக் காட்டிக்கொள்கிறது. என்னைவிடப் பெரியவன் இல்லை என்ற இறுமாப்புக்கும் ஆணவம் என்று பெயர். என்னை அவன் முந்தி விட்டான் என்ற பொறாமைக்கும் ஆணவம் என்று பெயர். நானே எல்லாவற்றையும் அடையவேண்டும் என்ற ஆசைக்கும் ஆணவம் என்று பெயர். நமது விருப்பங்களையும் ஆசைகளையும் நிறைவேற்றுவதற்கு நாம் செயல்களைச் செய்கின்றோம். செயலுக்கு ''வினை'' என்று பெயர். இந்தச் செயல்களில் நல்லவையும் உண்டு. தீயவையும் உண்டு. இவை முறையே 'நல்வினை' என்றும் 'தீவினை' என்றும் சொல்லப்படும்.

மேற்கூறிய ஆணவத்தின் தன்மைகளும், அவற்றின் தூண்டுதலால் நாம் செய்யும் வினைகளும் எல்லாம் நம்மைச் சூழ்ந்து கொள்ளுகின்றன. சிலையில் அழுக்குப் படிவது போலவும், பித்தளைப் பாத்திரத்திற் பச்சைக் களிம்பு உண்டாவது

போலவும் இவை நம்மை ஒட்டிக்கொள்கின்றன. அழுக்குத் துணிகளைச் சலவை செய்து தூய்மையாக்குகின்றோம். பித்தளைப் பாத்திரத்தை விளக்கிப் பொன்போலப் பிரகாசிக்கச் செய்கிறோம். இவ்வாறே, நம்மைப் பற்றியிருக்கும் ஆணவ அழுக்கைப் போக்கி நம்மைத் தூய்மைப் படுத்தினால் நம்முள்ளே கலந்திருக்கும் இறைவன் வெளிப்பட்டுத் தோற்றுவான். ஆணவத்தை அகற்றுவதற்கு வழி 'சிவ வழிபாடு, ஆகும்.

சிவ வழிபாட்டால் நமது உள்ளத்தில் ஆணவம் தேய்ந்து, அன்பு மலரும். எமது சமயம் அன்பு நெறியையே வலியுறுத்துகின்றது. சிவம் என்பதற்கு அன்பு என்பது பொருள். சைவ சமய உண்மைகளைக் கண்டு நமக்கு உணர்த்திய நம் முன்னோர் உயிர்க்குலம் முழுவதிலும் சிவத்தைக் கண்டனர்; ஒன்றே குலம், ஒருவனே தேவன் எனக் கொண்டனர்.

அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிகிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே

என்று பத்தாம் திருமுறையாகிய திருமந்திரங் கூறுகிறது. அன்பின் அடிப்படையிலே வளர்ந்த எமது சமயம் வாய்மை, தூய்மை, பொறுமை, தியாகம், பத்தி முதலிய உயர் பண்புகளாக மலர்ச்சியடைந்திருக்கின்றது. அன்பே வடிவான சிவத்தை வழிபடுவதனால் எமது உள்ளத்தைப் பற்றி நிற்கும் கோபம், பொறாமை, செருக்கு, பொய்மை, வன்கண்மை போன்ற பொல்லாத குணங்கள் தேய்ந்து போகும். அவற்றின் இடத்தில் அன்பு, பொறுமை, அடக்கம், வாய்மை, அருள் போன்ற அருங்குணங்கள் விருத்தியடையும். அத்தகைய உள்ளத்தில் ஆணவ அழுக்கு நீங்கித் தூய்மை குடிகொள்ளும். 'தூய உள்ளமே இறைவன் எழுந்தருளும் திருக்கோயிலாகும்' என்று எமது சமயம் சொல்லுகின்றது. உள்ளத்தில் இறைவன் எழுந்தருளியிருந்தால் நமக்குத் துன்பம் ஏது? பயம் ஏது? 'நாமார்க்கும் குடியல்லோம்; நமனையஞ்சோம்; நரகத்தில் இடர்ப்படோம்; இன்பமே எந்நாளும்; துன்பமில்லை' என்ற வீர நெஞ்சம் நமக்கு உண்டாகும். இதுவே வாழும் நெறி; இதுவே பெரு நெறி; இதுவே சைவ நெறி.

# 2. திருக்கோயில்

பார்க்குமிடமெங்கும் நீக்கமற நிற்கின்ற பரம்பொரு ளுக்கு உலகமே கோயிலாகும். மெய்யடியார்கள் தம் மனக் கண்களால் வழிபட்டுப் பூசிக்க இறைவன் அவர்களுடைய மனத்திலே கோயில் கொண்டருளுகின்முன். ஆயினும், சாதா ரண மக்கள் தனித்தோ, ஒன்றுகூடியோ அவனை உணர்வொன் றித் துதித்தல் கோயில்களிலேயே முடிகிறது.

தலைமுறை தலைமுறையாகப் பல பத்தர்கள் தவமும், செபமும், தியானமும், பூசையும், பிரார்த்தனையுஞ் செய்த இடங்களே திருக்கோயில்கள். பத்தகோடிகள் விழுந்து புரண்டு வழிபட்ட தலங்களுக்கு ஒரு தனிச் சத்தி உண்டு. அவற்றில் இறைவனை எளிதிற் காணலாம். நிலத்தை அகழ்ந்தால் நீரைப் பெறலாம். ஆனல் சில இடங்களிற் கிணறும் குளமும் நீர்வேட் கை தீர்ப்பதற்குத் தயாராக இருக்கின்றனவே; அவற்றை நாம் அடைந்து சுலபமாகத் தாகந் தணித்துக்கொள்ளலாம் அல்லவா? அவை போன்றவையே கோயில்கள். பத்தித் தாகத்தை அவ்விடங்களிற் சிரமமில்லாது தீர்த்துக்கொள்ளலாம்.

'கோயிலில்லா ஊரிற் குடியிருக்க வேண்டாம்' என்பது முதுமொழி. இதிலிருந்து முக்கியமானதோர் உண்மை புலப் படுகின்றது. அதாவது, என்ன இருந்தாலும், இல்லாவிட்டா லும் ஆலயம் ஒன்று ஊருக்கு இன்றியமையாதது என்பதே அவ்வுண்மை. மக்களுடைய ஆன்ம ஈடேற்றத்துக்கும் நல் வாழ்வுக்கும் ஆதாரமாக இருப்பது ஆலயம் என்பதை நம் முன்னோர்கள் உணர்ந்திருந்தார்கள். அன்றுஞ்சரி இன்றுஞ்சரி, தமிழ்க் கிராமங்கள் ஆலயத்தைச் சூழ்ந்தே அமைந்துள்ளன. எந்த ஊரை எடுத்துக்கொண்டாலும், அதன் நடுவில் ஓர் ஆலயமும் அதனைச் சூழ்ந்து குடிமனைகளும் இருக்கும்.

கடவுட்காட்சி பெற்ற நாயன்மார்கள் ஆலய வழிபாட்டை மறக்கவில்லை. தேவாரம் பாடிய மூவரும் தலங்கள்தோறுஞ் சென்று அங்குள்ள கோயில்களில் எழுந்தருளியுள்ள இறை வனைத் தரிசித்தார்கள். இறைவன் சுந்தரமூர்த்தி நாயனுரைத் தடுத்தாட்கொள்ள முதிய வடிவத்தில் வந்தார். திருவெண்

ணெய் நல்லூரில் வாழ்ந்த மக்கள் அவரிருக்குமிடம் எதுவென்று வினவினார்கள். அவர் 'காட்டுகின்றேன்' என்று கூறி, அவ்வூர் ஆலயத்துட் சென்று மறைந்தார். இந்நிகழ்ச்சி இறைவனது சிறப்பிடமாக ஆலயம் அமைவதைக் காட்டுகின்றது.

பழைய காலத்திலே கோயில்கள் மண்ணினாலும் மரத்தினாலும் கட்டப்பட்டன. இற்றைக்கு ஆயிரத்தைஞ்ஞூறு ஆண்டுகளுக்கு முன் தமிழ் நாட்டை ஆண்ட பல்லவ மன்னர்கள் முதன்முதலாகக் கோயில்களைக் கல்லாற் கட்டி எழுப்பினார்கள். சோழ மன்னர்களுங் கற்கோயில் எழுப்பும் பணியில் ஈடுபட்டுப் பெரிய கோயில்களைக் கட்டினார்கள். அவற்றை இன்றும் காணலாம். இக்கோயில்கள் கட்டடக் கலை, சிற்பக் கலை, ஓவியக் கலை முதலியன சிறந்தோங்க உதவின. இசை நாட்டியம் முதலிய ஏனைய அருங்கலைகளும் வளர வழிவகுத்தன.

கோயில்கள் கட்டும் விதிகள் ஆகமங்களிலே விளக்கப்பட்டுள்ளன. கோயிலிலே மூல விக்கிரகம் எழுந்தருளியிருக்கும் இடம் கருவறை அல்லது கருப்பக்கிரகம் எனப்படும். இது பெரும்பாலும் கிழக்கு நோக்கியதாக இருக்கும். இதன் மேற்கூரை தூபி எனப்படும்; இதனைச் சிகரம் என்றும் விமானம் என்றும் கூறுவர். கருவறையிலே எழுந்தருளியிருக்கும் மூலத்தான மூர்த்தியைக் கொண்டே கோயில் தன் பெயரைப் பெறும். மூலமூர்த்தி சிவலிங்கமானாற் சிவன்கோயில் எனவும், அம்பாள் ஆயின் அம்மன் கோயில் எனவும், பிள்ளையார் ஆயின் பிள்ளையார் கோயில் எனவும் அவை பெயர் பெறும். கருவறைக்கு முன் இருப்பது அர்த்தமண்டபம் எனப்படும். அங்கே சிவாசாரியர்கள் நின்று சுவாமிக்குத் தீபாராதனை, சோடசோபசாரங்கள் முதலியன செய்வர்.

அர்த்த மண்டபத்துக்கு முன் இருப்பது மகா மண்டபம் ஆகும். இங்கே ஐம்பொன்னாலான உற்சவ மூர்த்திகள் எழுந்தருளப்பட்டிருக்கும். பூசைக் காலங்களிலே சுகந்த தூபமிடல், திருமுறை ஓதல் முதலாய தொண்டுகளையும் வழிபாடுகளையும் அடியார்கள் இங்கு நின்றே செய்வார்கள், இம்மண்டபத்துக்குத் தெற்கிலேயும் ஒரு திருவாயிலுண்டு. மகா மண்டபத்துக்கு முன் ஒரு திறந்த மண்டபம் இருக்கும். அதனை நிருத்த மண்டபம் எனக் கூறுவர். இதனைச் சங்காபிடேகம் முதலிய சிறப்புக் கிரியைகள் செய்வதற்கு உபயோகிப்பர்.

இவை நான்கும் ஒன்றோடொன்று இணைந்திருக்கும். இத் தொகுதியைச் சுற்றி நாற்புறமும் (கோயில் சிறிதாயின்) மதில்

களும், (கோயில் பெரிதாயின்) சிறிய தனிக் கோயில்களும் இருக்கும். இம் மதில்களுக்கும் அல்லது தனிக் கோயில்களுக்கும் மண்டபத் தொகுதிக்கும் இடையேயுள்ள வெளியிடம் உள் வீதி என்று பெயர் பெறும். புறத்தே இருப்பது வெளி வீதியாகும்.

நிருத்த மண்டபத்துக்கு முன் தம்ப மண்டபம் உண்டு. அங்கே மூல விக்கிரகத்துக்குரிய வாகனம், பலிபீடம், கொடிமரம் முதலியன இருக்கும். சிவன், விநாயகர், முருகன், விட்டுணு முதலிய தெய்வங்களுக்கு முறையே நந்தி, மூஷிகம் (பெருச்சாளி), மயில், கருடன் முதலியவை உரிய வாகனங்களாகும்.

கருவறை முதலாகிய மண்டபத் தொகுதியைச் சுற்றி இருக்கும் சிறிய கோயில்கள் பரிவார தெய்வங்கள் எழுந்தருளியிருக்கும் தனிக் கருவறைகளாம். தெற்குப் பக்கத்திலேயுள்ள கோயிலிலே சமயகுரவர் நால்வரின் விக்கிரகங்கள் அமைந்திருக்கும். மேற்கிலிருக்கும் கோயில்களிற் பிள்ளையார், சோமாஸ்கந்தர், மகாவிட்டுணு, தண்டாயுதபாணி, பஞ்சலிங்கம், மகாலிங்கம், சுப்பிரமணியர், மகாலட்சுமி முதலிய மூர்த்திகள் எழுந்தருளியிருப்பர். வடக்குப் பக்கத்தில் நடேசரும், கிழக்குப் பக்கத்தில் வைரவர், சந்திரன், சூரியன் முதலியோரும் எழுந்தருளும் தனிக்கோயில்கள் உண்டு. அடியார்கள் செய்யும் வழிபாட்டின் பயனை அவர்களுக்கு வழங்கும் சண்டேசுரமூர்த்தி கருவறையின் வடக்கே, தெற்கு நோக்கிய சிறியதொரு தனிக்கோயிலிலே எழுந்தருளியிருப்பர்.

இவற்றைவிடக் கருப்பக்கிரகத்தின் சுவர்களின் புறத்திலே அமைக்கப்பட்ட மாடங்களிற் சில விக்கிரகங்கள் இடம் பெறும். தெற்குச் சுவரிலே நர்த்தன விநாயகரும், தட்சிணாமூர்த்தியும், மேற்குச் சுவரில் இலிங்கோற்பவரும், வடக்குச் சுவரில் பிரமாவும், துர்க்கையும் எழுந்தருளுவர்.

ஒரு கோயிலுக்குச் சிறப்பும் அழகும் தருவது கோபுரமாகும். இதனைத் தூலலிங்கம் எனவும் வழங்குவர். வெகு தூரத்தில் வருபவர்களும் இதனைக் கண்டவுடனே பத்தி உணர்ச்சி பெறுவர். கோயில் வாயிலின் பக்கத்தில் மணிக்கூட்டுக் கோபுரம் அமைக்கப்பட்டிருக்கும். இங்கே இருக்கும் பெரிய மணி "கண்டாமணி" எனப்படும்.

இயக்கை எழிலில் இறைவனைக் காணலாம். எனவே, நீர்க்கரையிலுள்ள சோலைகளிலே முதலிற் கோயில்கள் தோன்றின. தில்லைக் காட்டிலே தோன்றியது சிதம்பரக் கோயில். கடம்பவனத்திலே தோன்றியது மதுரைக் கோயில். மாணிக்க கங்கைக் கரையில் விளங்குவது கதிர்காமம். பாலாவியின் கரையில் அமைந்தது திருக்கேதீச்சரம். கடலோரத்தில் அமைந்தது கோணேச்சரம். ஒவ்வொரு கோயிலுக்கும் சிறப்பாயமையும் அம்சங்கள் நான்கு. இவை மூர்த்தி, தலம், தீர்த்தம், விருட்சம் என்பன.

# 3. ஆலயத் தொண்டு

இறைவனை அடைவதற்குச் சரியை, கிரியை, யோகம், ஞானம் என நான்கு வழிகள் உண்டு. இவற்றை நாற்பாதங்கள் என்பர். திருநாவுக்கரசர் சரியா பாதத்தினையும், திருஞான சம்பந்தர் கிரியா பாதத்தினையும், சுந்தரர் யோக பாதத்தினையும், மாணிக்கவாசகர் ஞான பாதத்தினையும் தம் வாழ்க்கையினால் விளக்கினர்.

குருவுக்குஞ் சிவனடியார்களுக்குஞ் செய்யும் தொண்டுகளும், சிவாலயத்திற் செய்யுந் திருப்பணிகளுஞ் சரியை நெறியாகும்.

சிவாலயத்திற் செய்யற்பாலனவாகிய தொண்டுகள் பலவுள. அடியார்கள் வந்து அமைதியோடு வழிபடுகின்ற திருக்கோயில் எஞ்ஞான்றும் புனிதமாகத் திகழவேண்டும். விடியுமுன் நித்திரை விட்டெழுந்து, நீராடிக் காலைக் கடன்கள் முடித்துக்கொண்டு, திருக்கோயிலுக்குச் சென்று, மண்டபங்களையும் உள்வீதிகளையுங் கூட்டிக் குப்பைகூளங்களை அகற்றல் வேண்டும். பின்பு செங்கற் பதித்த நிலத்தையும் மண் நிலத்தையும் சாணிகொண்டு மெழுகலாம். கருங்கல் நிலத்தை நீரினாற் கழுவுதல் நன்று. வெளி வீதிகளிலுள்ள புல் பூண்டுகளைச் செதுக்கி, கற்களையும் முட்களையும் பொறுக்கி அகற்றுதல் வேண்டும்.

இத்தகைய தொண்டிற் சிறந்து விளங்கியவர் திருநாவுக்கரசு நாயனார். அவருடைய உருவச் சிலையிற் கையிலே உழவாரப்படை திகழ்வதைப் பார்த்திருப்பீர்கள். இதனால், உழவாரப்படையாளி என்றும் அவருக்கு ஒரு பெயர் உண்டு.

திருக்கோயிலுக்கு அண்மையில் நந்தவனம் அமைத்து அதனை விருத்திசெய்தல் ஒரு சிறந்த திருத்தொண்டு. நந்தவனத்தில் வில்வம், பன்னீர், பாதிரி, பலாசு, கொன்றை, மந்தாரை, செருந்தி, சண்பகம் முதலிய மரங்களையும் அலரி, நந்தியாவர்த்தை, செவ்வந்தி, செவ்வரத்தை, துளசி, நொச்சி முதலிய செடிகளையும் தாமரை, செங்கழுநீர், நீலோற்பலம்

முதலிய நீர்க் கொடிகளையும் வைத்து வளர்க்கலாம். வில்வம், விளாத்தி, நொச்சி, மாவிலங்கை, முட்கிளுவை என்பன பஞ்ச வில்வம் எனப்படும்.

பொழுது புலர்வதன் முன் நந்தவனத்தில் மலர்களும் இலைகளும் பறித்துப் பூசைக்குக் கொடுக்கலாம். இண்டை, கண்ணி, தொடை, பந்து, தண்டு என்பவை சுவாமிக்குச் சாத்தும் பலவகை மாலைகளாம்.

முருகநாயனார், பரவையார், சங்கிலியார் போன்றோர் இவ்வாறு தொண்டியற்றிச் சிவப்பேறு பெற்றனர்.

குங்குலியக்கலய நாயனார் சுவாமி சந்நிதானத்திற் சுகந்த தூபமிட்டுச் சிறப்பெய்தினர். நமிநந்தியடிகளும் கலியநாயனாரும் கணம்புல்லரும் திருவிளக்கேற்றி நற்கதி யெய்தினர். குருடாராயிருந்துந் திருக்குளம் வெட்டிப் பெருமை பெற்றுத் தண்டியடிகள் பேரின்பப் பெருவாழ்வெய்தினர்.

பூசைக்கான பாத்திரங்களையும் கருவிகளையுந் துலக்கிக் கொடுத்தலும், பூசைப் பொருள்கள் அபிஷேகத் திரவியங்கள் பஞ்சாமிர்தம் நைவேத்தியத்திற்கான பதார்த்தங்கள் முதலியவற்றைத் தேடிக் கொடுத்தலும் தொண்டுகளாகும். இன்னும் திருவிழாக் காலங்களில் வாகனந் தாங்குதல், தீவர்த்தி கொடி குடை ஆலவட்டம் பிடித்தல், வெண்சாமரம் வீசுதல், திருமுறை ஓதுதல் முதலியனவுஞ் சிறந்த சிவாலயத் தொண்டுகளாம்.

கணநாத நாயனார் என்ற மெய்யடியார் திருப்பணிகள் செய்வதிற் சிறந்து விளங்கினார். இவர் சரியைத்தொண்டு செய்பவர்களுக்குப் பயிற்சி கொடுத்து அவர்களைச் சிறந்த தொண்டர்களாக்கினார். தம்மை விரும்பி வந்து அடைபவர்களை, நந்தவனம் வைத்தல், பூக்கொய்தல், மாலை கட்டல், திருமஞ்சனநீரெடுத்தல், அலகிடுதல், மெழுக்கிடுதல், விளக்கேற்றல், திருமுறை ஓதுதல் முதலாகிய தொண்டுகளுள் அவரவர்க்கு ஏற்றவற்றைப் பயில்வித்து, அவர்களைச் சிவனடியார்கள் ஆக்கினார்.

சிவாலயத் தொண்டின் சிறப்பினைப் பெரியபுராணத்திலே மெய்யடியார்களின் வரலாறுகளிற் பரக்கக் காணலாம்.

இந்த உடலே இறைவனைத் தொழுவதற்கும் அவனுக்குத் தொண்டு செய்வதற்கும் ஆக்கப்பட்டதென்று அப்பர் சுவாமி கூறுகின்றார். அரிய மானிடப் பிறவியை எடுத்த நாம்,

சிவாலயத்திலே சுவாமி தரிசனஞ் செய்வதோடு நின்றுவிடாது, வாய்ப்புக் கிடைத்த போதெல்லாம் இயன்றவரை தொண்டுகள் செய்து நம் திருக்கோயில்களைச் சிறப்பித்தலோடு நமக்கு நற்கதியையுந் தேடிக்கொள்ளவேண்டும்.

திருச்சிற்றம்பலம்

நிலைபெறுமாறு எண்ணுதியேல் நெஞ்சே நீவா
நித்தலும்எம் பிரானுடைய கோயில் புக்குப்
புலர்வதன்முன் அலகிட்டு மெழுக்கு மிட்டுப்
பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித்
தலையாரக் கும்பிட்டுக் கூத்து மாடிச்
சங்கரா சயபோற்றி போற்றி என்றும்
அலைபுனல்சேர் செஞ்சடைஎம் ஆதி என்றும்
ஆரூரா என்றென்றே அலறு நில்லே.

திருச்சிற்றம்பலம்.

# 4. கோயிற் பூசை

இறைவனை அடைவதற்கான வழிகளில் அறிவு வழியும் உண்டு; செயல் வழியும் உண்டு. பலபல நூல்கள் கற்றுப் பண்டிதராகிப் பேரறிவு பெற்று இறைவனை வழிபாடு செய்தல் அறிவு வழியாகும். இது எல்லோராலும் சாதிக்கக் கூடியதன்று. எல்லோருக்கும் இறை வழிபாட்டை எளிதாக்குவது கிரியை என்ற செயல் வழியேயாகும். சாதாரண வழக்கில் இதைப் பூசை என்று சொல்லுவார்கள். திருக்கோயில்களில் நிகழும் கிரியைகளிற் சிலவற்றையாவது நீங்கள் கண்டிருப்பீர்களல்லவா? இந்தக் கிரியைகள் அபிடேகம், அலங்காரம், நைவேத்தியம், தீபாராதனை, அருச்சனை, வாழ்த்து, தோத்திரம் என்ற ஒழுங்கில் அமையும்.

ஒவ்வொரு கோயிலினுடைய மரபுக்கும் வசதிக்கும் தக்கபடி பூசைகள் நிகழ்வது வழக்கம். பல கோயில்களிற் காலை, மாலை என்று இரண்டு நேரம் மட்டுமே பூசை நிகழ்கின்றது. வேறு பல கோயில்களிற் காலை, நண்பகல், மாலை என மூன்று நேரப் பூசை செய்வர். சில கோயில்களில் அதிகாலை, காலை, நண்பகல், மாலை, இரவு, நள்ளிரவு என்ற ஆறு காலங்களிற் பூசை நடைபெறுகின்றது.

இறைவனை முகமன்கூறி உருவத் திருமேனியில் எழுந்தருளச் செய்து தூபம், தீபம் முதலான உபசாரங்களைச் செய்வதே பூசையாகும். எல்லா மக்களும் வழிபடும் பொது இடமாக ஆலயம் விளங்குகின்றது. இறைவன் அங்கு திருமேனிகொண்டு எழுந்தருளியுள்ளார். அந்தத் திருக்கோலத்தில் யாவருடைய கண்ணும் மனமும் பதியவும், கைகள் அதைத் தொழவும், வாய் ஆண்டவன் புகழ் பாடவும், காது அப்புகழ் கேட்கவும் என நமது புலன்களும் கரணங்களும் ஒன்றுபடும் இடமாகப் பூசைக் காலம் விளங்குகிறது.

திருக்கோயிலில் நடக்கும் பூசைக்குப் பரார்த்த பூசை என்று பெயர். பிற உயிர்களின் நன்மைக்காகச் செய்யப்படும் பூசை என்பதே அதன் பொருள். கோயிலில் வழிபடுவோர் எல்லோருக்குமாகப் பூசகராகிய ஒருவர் பூசை செய்கின்றார்.

பூசை முதலில் விநாயகருக்குச் செய்யப்பட்டுப் பின்பே மூலத்தான மூர்த்திக்குச் செய்யப்படும். பின்னர் ஏனைய மூர்த்திகளுக்கும் செய்யப்படும். மூர்த்திகளுக்கு ஆராதனை முடித்ததன் பின் நந்திக்கும் பலி பீடத்துக்கும் பூசை நடக்கும். அதன் பின் சண்டேசுரர் பூசை நிகழும்.

பூசையின் முதல் அங்கம் அபிடேகமாகும். அதற்கு வேண்டியது பரிசுத்தமான நீர். இதைத் தீர்த்தம் என்று சொல்லுவார்கள். சில கோயில்களில் அபிடேகத்தின் பொருட்டு ஆற்றுக்குச் சென்று, குடத்தை நிரப்பி, அதனை யானைமீதேற்றிக் கொடி, குடை, ஆலவட்டம் முதலிய விருதுகளுடன் தினந்தோறும் கோயிலுக்குக் கொண்டு வருவது வழக்கம். இவ்வாறு ஆற்றுநீர் கிடைக்காத இடத்தில் வேறு நீர்நிலைகளிலிருந்து நீர் சேகரித்து வருவர். அதனை மந்திர உச்சரிப்பின் மூலம் புனிதமாக்கிப் பூசைக்குப் பயன்படுத்துவது மரபு. புனித நதிகள் எல்லாம் இந்த நீரில் வந்து சேர்ந்து புனிதம் ஊட்ட வேண்டும் என்ற வேண்டுகோளாக அம்மந்திரம் அமைந்திருக்கிறது. அபிடேக நீரில் தாமரை, அலரி முதலிய நறுமலர்களை இடுவார்கள். அவற்றால் அந்தத் தீர்த்தம் குளிர்ச்சி பொருந்தியதாகிறது; நறுமணம் ஊட்டப்பெறுகிறது.

பால், இளநீர் முதலியனவும் அபிடேகத்துக்கு உரிய திரவியங்கள். விசேட பூசைக் காலங்களிற் பஞ்சாமிர்தம், பால், தயிர், நெய், தேன், திருநீறு, குங்குமம், சந்தனம், பன்னீர், கும்ப நீர், கங்கை முதலிய புண்ணிய நதித் தீர்த்தம் என்பனவற்றால் அபிடேகம் செய்வார்கள்.


அபிடேகத்துக்குப் பின்ஆடை அணிகலன்களாலும் பூமாலைகளாலும் ஆண்டவனை அலங்கரிப்பார்கள். அலங்கரித்த பின் தூப தீபம் காட்டி, நைவேத்தியம் ஆண்டவனுக்குச் சமர்ப்பிக்கப்படும். தீப ஆராதனை என்பதன் பொருள் தீபத்தால் இறைவனை வழிபடுதல் என்பது. நீங்கள் தீபாராதனையைக் காணத் தவறுவதில்லை அல்லவா? அச்சமயந்தான் இறைவனது திருக்கோலத்தை நன்கு தரிசிப்பீர்கள். தீபங்கள் மூன்று முறை ஓங்கார வடிவிற் காட்டப்படுகின்றன. முதலிற் காட்டுவது உலக நன்மைக்காகவும் இரண்டாவது முறை காட்டுவது நாட்டு நன்மைக்காகவும் மூன்றாவது முறை காட்டுவது எல்லா உயிர்களினதும் நன்மைக்காகவும் என்று ஆகமங்கள் கூறுகின்றன.



1. தூபம்



2. ஒற்றைத் தீபம்



3. அடுக்குத் தீபம்



4. நாகதீபம்



5. இடபதீபம்




6. அன்னதீபம்



7. கும்பதீபம்



8. கர்ப்பூரதீபம்




9. கண்ணாடி



10. குடை



11. சாமரை



12. விசிறி



13. கொடி



14. ஆலவட்டம்



15. பஞ்சாரத்தி


தீபாராதனையில் இடம்பெறும் தீபங்கள் பல வகையின. அடுக்குத்தீபம், ஒற்றைத்தீபம், கும்பதீபம், நாகதீபம், இடபதீபம், வில்வதீபம் எனப் பலவித தீபங்கள் காட்டப்படுகின்றன. இவை விசேட தினத்துக்கேற்றபடி எண்ணிக்கையிற் கூடும். இறுதியிற் காட்டப்படுவது கர்ப்பூரம். அதன்பின் திருநீறு சாத்தப்படும். இதன்பின் கண்ணாடி, குடை, சாமரை, விசிறி, கொடி, ஆலவட்டம் என்ற உபசாரப் பொருள்களைத் தீபங்கள் போலக் காட்டி உபசரிப்பதைக் காணலாம்.

தீபாராதனை நடக்கும்போது மங்கல வாத்தியங்கள் ஒலிக்கும். வசதியுள்ள கோயில்களில் ஒவ்வொரு பூசை வேளையிலும் மேளம் வாசிக்கும் நியதி உண்டு. இது தவறாமல் நடப்பதற்காகவே பல கோயில்களுக்குத் தருமச் சொத்துக்கள் விடப்பட்டுள்ளன.

தீபாராதனையின் பின் நிகழ்வது அருச்சனை. இறைவனது திருநாமங்களை ஒவ்வொன்றாகக் கூறி மலர் தூவி அருச்சிப்பார்கள். அருச்சனைக்குப் பின் பஞ்சபுராணம் ஓதுவார்கள். தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, பெரிய புராணம் என்பவற்றைப் பஞ்சபுராணம் என்பார்கள். பூசை முடிந்ததும் வழிபட வந்தோருக்குப் பூசகர் விபூதி, தீர்த்தம், சந்தனம், குங்குமம் என்பனவற்றைப் பிரசாதமாக வழங்குவர். இதுவே ஆகம விதிப்படி ஆலயங்களில் நடக்கும் நித்திய பூசை நியதியாகும்.

# 5. திருக்கோணேச்சரம்


இயற்கை எழிலில் இறைவனைக் காணலாம் என்று படித்தோமல்லவா? நெடிதோங்கிய குன்றம், அதன் அடிவாரத்தை மோதி வருடுங் கடல், மேலே பரந்திருக்கும் நீலவானம், நறுமணஞ் சுமந்து வருந் தென்றற் காற்று என்ற இவையெல்லாம் ஒருங்கு சேர்ந்து எமது உள்ளத்தில் இறையுணர்வை எழுப்புகின்றன; பத்தியுணர்வு மேலிடுகிறது. இந்த உணர்ச்சிதான் நம் மூதாதையர் திருக்கோணேச்சரம் என்ற கோயிலைக் கட்டி எழுப்பக் காரணமாய் இருந்திருக்க வேண்டும்.



படம் 16. திருக்கோணேச்சரர் ஆலயம்

சரித்திர காலத்திற்கு முற்பட்ட காலத்தில் ஈழத்தில் ஐந்து ஈச்சரங்கள் பொலிவுற்று விளங்கின என்பது கலாநிதி பவுல் பீரிஸ் என்ற வரலாற்றுப் பேரறிஞரின் ஆராய்ச்சி முடிபாகும். அவ்வீச்சரங்களில் கோணேச்சரமும் ஒன்று.


இலங்கையின் கிழக்குக் கரையில் அமைந்துள்ள எழில்மிகு நகரம் திருக்கோணமலை. அந்நகரிற் சுவாமிமலை என்ற உயர்ந்த குன்றம் கொட்டியார விரிகுடாவை எதிர்நோக்கி நிற்கிறது. குன்றத்தின் உச்சியிலுள்ள கோயிலே திருக்கோணேச்சரம். இலங்கை அரசனாகிய இராவணன் கோணமாமலை அமர்ந்த பெருமானை வழிபட்டுவந்தான் என்பது செவிவழக்காக வந்த கதை.



படம் 17. கோணமாமலையமர்ந்தார்

சோழ நாட்டரசனாகிய வரராமதேவன் கோணேசருக்குக் கோயில் எடுத்தான். அவனுடைய மகன் குளக்கோட்டு மகாராசன் குளம் தொட்டு வளம் பெருக்கித் திருப்பணிகள் பல செய்தான் என்று நமக்குத் தெரியவருகிறது. ஏழாம் நூற்றாண்


டில் வாழ்ந்த சமயகுரவராகிய திருஞானசம்பந்தராற் பாடப் பட்டமை இத்தலத்திற்குப் பெருமை கொடுக்கின்றது. ''கோயி லுஞ் சுனையுங் கடலுடன் சூழ்ந்த கோணமா மலையமர்ந்தாரே'' என்று சம்பந்தப் பெருமான் பாடுகின்றார். இன்னும் அருண கிரிநாதரும் திருப்புகழ் பாடிக் கோணேச்சரத்தைப் போற்றி யிருக்கின்றார்.



படம் 18. மாதுமையாள் சமேத கோணேச்சரநாதர்

மிகப் பெரிய கோயிலாக இது முற்காலத்தில் விளங்கியி ருக்க வேண்டும். ஆயிரந் தூண்கள் அணி செய்யும் கோயில் என்று போர்த்துக்கேயன் ஒருவன் இதனைப் புகழ்ந்துள்ளான். போர்த்துக்கேயர் பதினாறும் நூற்றாண்டில் நமது நாட்டுக்கு வந்தார்கள். நமது நாட்டில் விளங்கிய கோயில்களையெல்லாம் நிர்மூலமாக்கினார்கள். கோணேச்சரமும் அவர்களது கொடு மைக்குள்ளாயிற்று. *1624* ஆம் ஆண்டு புதுவருடப் பிறப்புக்குக் கோணேசர் கோயிலில் விசேட பூசை நடைபெற்றுக் கொண்டி ருந்தபோது போர்த்துக்கேயர் வந்து கோயிலைத் தாக்கித் தரை மட்டமாக்கினார்கள். விக்கிரகங்கள் அவசர அவசரமாக இயன்ற வரை அப்புறப்படுத்தப்பட்டன. விக்கிரகங்களிற் சில வற்றைத் தம்பலகாமத்திற்கு மேற்கேயுள்ள ''சுவாமிமலை''

என்னும் இடத்தில் ஒளித்து வைத்து வழிபட்டனர். தம்பல காமத்து மக்கள் தம் ஊரில் ஒரு கோயில் கட்டி, அங்கு இவ்விக் கிரகங்களைப் பிரதிட்டை செய்தனர். கோணேசர் குடிகொண்ட மை காரணமாக அவ்விடங் ''கோயிற் குடியிருப்பு'' என்று வழங்குகின்றது



படம் 19. தம்பலகாமத்திலுள்ள ஆதிகோணநாயகர் கோயிலின் இராசகோபுரம்

இப்பொழுது நாம் திருக்கோணமலைக்குச் சென்றால், அங் குக் கோட்டைவாயிலில் உள்ள கதவு நிலையிற் பழைய கல் வெட்டு ஒன்றைக் காணலாம். அது பின்வருமாறு :

''முன்னே குளக்கோட்டன் மூட்டு திருப்பணியைப்
பின்னே பறங்கி பிரிக்கவே—மன்னவபின்
பொண்ணு ததனை யியற்றவழித் தேவைத்து
எண்ணுரே பின்னரசர் கள்.''

கோயில் இருந்த இடத்துக்குச் சென்று பூசை செய்யப்படா தென்று போர்த்துக்கேய அதிகாரிகள் நிட்டூரமான கட்டளை இட்டிருந்தார்கள். ஆயினும் இரகசியமாகவாவது பூசை நடைபெற்றுக்கொண்டே வந்தது.

இங்ஙனம் முந்நூறு ஆண்டுகள் கழிந்தன. 1950 இல் தான் அங்கு ஓர் ஆலயம் பழையபடி கட்டவேண்டுமென்று சைவமக்கள் தீவிரமாகத் தீர்மானித்தார்கள். தெய்வ சித்தம் போலச் சில பழைய விக்கிரகங்கள் அகப்பட்டன. திருக்கோண மலையிலுள்ள வட கடற்கரைத் தெருவினிற் சிறு குடிசைகளில் வசிப்பவர்களின் உபயோகத்துக்கான ஒரு கிணறு வெட்டும் போது இவை கிடைத்தன. சோமாஸ்கந்தர், பார்வதி, சந்திர சேகரர், விக்கிரகங்கள் இவ்வாறு கிடைத்தன.

இவை தவிர வேறு சிலைகளும் ஏலவே கண்டெடுக்கப்பட் டிருந்தன. அவையாவன: கணேசர் விக்கிரகம், பார்வதி விக்கிரகம், திரிசூலம், அன்னப்பறவை என்பன. நிற்கும் வடிவ மாக அமைந்துள்ள பார்வதி விக்கிரகம் வெண்கலத்தில் அமைக் கப்பெற்ற சத்தி விக்கிரகங்களிலே தலைசிறந்ததாக விளங்குகிறது. இவையும் திருக்கோணமலையிலுள்ள வட கடற்கரைத் தெருவி லுள்ள ஒரு தென்னமரத்து அடி வேரினுள் மறைந்துகிடந்து கண்டெடுக்கப்பட்டவை.


முந்நூறு வருடங்களுக்குப் பின் தரிசனம் தந்தார் கோ ணேசர் என்று மக்களிடையே பத்தியுணர்வு பெருகிற்று. திருக் கோணமலையிற் பழம் பெருங் கோயில்கள் இருந்த இடத்தில் ஓர் ஆலயம் உருவாயிற்று. 1952 ஆம் ஆண்டு மாசி மாதம் 23 ஆம் திகதி விக்கிரகங்கள் பிரதிட்டை செய்யப்பட்டன.

மாதுமை அம்பாள் சகிதம் கடலோரத்தில் வீற்றிருந்து நம்மையெல்லாம் தாயினும் நல்ல தலைவராகப் பாதுகாத்து அருள்புரிகின்றார் கோணேசப் பெருமான்.

## 6. பொன்னம்பலவாணேச்சரம்

இலங்கையிலே கொழும்பு நகரை அணிசெய்யுந் தனிப் பெருஞ் சிறப்புவாய்ந்த சிவன் கோயில் பொன்னம்பலவாணேச்சரம். இது கொச்சிக்கடைப் பகுதியில் அமைந்துள்ளது. தமிழகத்திற் பண்டைத் தமிழ் மன்னர்கள் எழுப்பிய பெருங் கற்கோயில்களின் பாணியில் இது கட்டப்பட்டுள்ளது. கருங்கல்லிற் பொளிந்த சிற்பங்கள் நிறைந்த தூண்கள் கோயிலின் உள்ளே இலங்குகின்றன. கருவறையுங் கருங்கல்லாற் கட்டப்பட்டிருக்கின்றது. உட்பிரகாரக் கூரை கருங்கல்லாலே தளம் போட்டு மூடப்பட்டுள்ளது.


இந்தக் கோயிலைக் கற்றளி ஆக்கிய பெருமை நமது நாட்டுப் பெருமக்களில் ஒருவரான சேர் பொன்னம்பலம் இராமநாதன் அவர்களையே சாரும். தென்னிந்தியாவிற் பழைய பல்லவ மன்னர்களும் சோழ மன்னர்களும் நாயக்க மன்னர்களும் கட்டிய கற்கோயில்களையும் பொலனறுவையிற் காணப்படும் சோழக் கற் கோயில்களையும் கண்ணுற்றதன் விளைவாக, கற்கோயிலெழுப்பும் பேரார்வம் மீதுரப்பெற்றவரானார் இராமநாதன். இவருக்கு ஆதரவு கொடுக்க எவரும் முன்வரவில்லை; அரசர்கள் பல தலைமுறைகளிற் கட்டிய கோயில்களைப் போலக் கட்ட நினைப்பது பைத்தியக்கார வேலை என்று எள்ளி நகையாடினார்கள். கருமமே கண்ணான இராமநாதன் அவர்கள் மறுப்பைப் பொருட்படுத்தாது இப்பெரும் பணியைத் தொடங்கினார். தென்னிந்தியா சென்று சிறந்த கோயிற் சிற்பக் கலைஞர்களை அழைத்து வந்தார். வேயங்கொடையிலிருந்து கற்கள் கொண்டு வரப்பட்டன. 1907 இல் கருங்கல் வேலை ஆரம்பமாயிற்று; 1912 இல் முற்றுப் பெற்றது. இருபது இலட்சம் ரூபாவிற்கு மேற் செலவாயிற்று. இராமநாதன் சிற்பிகளின் வேலை முழுவதையும் தாமே நின்று மேற்பார்வை செய்தார். உள்ளமுருக்கும் தேவாரங்களை எடுத்துச் சொல்லி, அவர்கள் செய்வது சிவப்பணி என்று மனத்திற் பதியும்படி விளக்குவர். இங்ஙனம் செலவையோ, சிரமத்தையோ பாராமற் கட்டப்பட்ட சிறந்ததொரு கோயிலாகத் திகழ்கின்றது பொன்னம்பலவாணேச்சரம்.



படம் 20. பொன்னம்பலவாணேச்சர இராசகோபுரம்

கற்றளியாவதற்கு முன்பும் இவ்விடத்தில் கோயில் இருந்தது. இந்தக் கோயிலே முதன்முதலிற் கட்டியவர் இராமநாதன் அவர்களுடைய தந்தையாரான பொன்னம்பல முதலியாராவார். 1857 இல் கும்பாபிஷேகம் நடத்தி வைத்தவரும் இவரே.

இவர் பெருஞ் செல்வர்; சிறந்த சைவர். அவர் விசேடமாக ஒரு பூசை செய்து வந்தார். அதற்கு ஸ்ரீ சக்கர பூசை என்று பெயர். பொன்னாலோ, வேறு உலோகத்தாலோ செய்த தகட்டில் அம்பாள் மந்திரங்களை (ரேகாவடிவிற்) பொறித்து வைத்து அதற்குப் பூசை செய்வதே ஸ்ரீசக்கர பூசை என்பது. இந்த மந்திர பூர்வமான உலோகத் தகட்டுக்கு யந்திரம் என்று பெயர். பொன்னம்பல முதலியார் தமது இல்லத்தில் பாலயந்திரம் வைத்துப் பூசை செய்து வந்தார்.



படம் 21. பொன்னம்பலவாணேச்சரர்

சமயப் பற்று மிகுந்த முதலியார் சைவத்துக்கு நிலைத்த பணிகள் செய்ய விரும்பினார். அக்காலத்திற் கொழும்பில் வாழ்ந்த சைவ மக்களுக்கு முறையான கோயில் இல்லாத குறையை உணர்ந்தார். அதனால் சிவன் கோவில் ஒன்று கட்டும் எண்ணம் சிந்தையிற் குடிகொண்டது. இறைவனது சித்தம் எப்படியோ என்று நினைத்தார். அப்பொழுது அவருக்குக் கனவொன்றின் மூலம் தெய்வக் குறிப்புத் தெரியவந்தது.



படம் 22. ஸ்ரீ சிவகாம சௌந்தரி

அவர் கண்ட கனவென்ன? 'கொழும்புத் துறைமுகத்தில் அவர் நிற்கிறார். கப்பல் ஒன்று அப்பொழுதுதான் வந்துள்ளது. எல்லோரும் வந்து இறங்குகிறார்கள். வந்தவர்களில் ஓர் அந்தணரும் அவரது மனைவியாரும் இருக்கிறார்கள். அவர்களை முதலியார் தமது இல்லத்துக்கு அழைத்துச் செல்கிறார். விருந்தோம்பி உபசரிக்கிறார். அந்தணர் அவர் கையில் மாதுளம் பழம் ஒன்றைக் கொடுத்துச் செல்கிறார். பழத்தை உடைத்துப் பார்த்தால், சிவன் உமை உருவங்கள் காணப்படுகின்றன. இது தான் முதலியார் கண்ட கனவு.

அதன்பின் முதலியாரது கோயில் கட்டும் ஆர்வம் தடுக்க முடியாத பேரார்வமாயிற்று. கொச்சிக்கடையில் ஐந்து ஏக்கர் நிலம் வாங்கினார். இந்தியாவிலிருந்து கோயில் கட்டும் கட்டடக் கலைஞரை வரவழைத்தார். இரண்டு வருடம் ஓயாது ஒழியாது வேலை நடந்தது. அழகிய ஆலயம் ஒன்று உருவாகியது. மூலத் தானத்தில் மகாலிங்கம் பிரதிட்டை செய்யப்பட்டது. தமது இல்லத்தில் தாம் நித்தியம் பூசித்துவந்த பால யந்திரத்தை அம்மன் சந்நிதியில் அம்மன் திருவுருவுக்கடியிற் பிரதிட்டை செய்வித்தார். இவ்வாறாகப் பொன்னம்பலவாணேச்சரம் எழுந்தது.



படம் 23. மகாமண்டபத்திலுள்ள நித்தியாக்கினி குண்டமும் பலிபீடமும். பிரதம குரு நித்தியாக்கினி வளர்க்கின்றார்.

இக்கோயில் பூசைச் சிறப்பு, வழிபாட்டுச் சிறப்பு ஆகிய இரண்டும் உடையது. இங்கு தினமும் ஆறுகாலப் பூசை நடைபெறுகின்றது. இந்தக் கோயிலின் இன்னொரு சிறப்பு இதன் மகா மண்டபத்திற் காணப்படுகின்ற நித்தியாக்கினிக் குண்டமாகும். ஞானசம்பந்தர் சிதம்பரத்தைப் பாடும்பொழுது,

''கற்றாங்கு எரியோம்பிக் கலியை வாராமே
செற்றார் வாழ்தில்லை.''

என்று வருணிக்கின்றார். எரியோம்புதல் என்பது நித்தியாக்கினியைக் குறிக்கும். எப்பொழுதும் அக்குண்டத்தில் நெருப்பு இருப்பதனால் அது 'நித்திய அக்கினி' எனப் பெயர் பெறுகின்றது. இக்கோயிலிற் காலை ஏழு மணிக்கும் மாலை ஏழு மணிக்கும் நடைபெறும் பூசைகளில் நித்தியாக்கினி வளர்க்கப்படும். அதன் பின்னர் சுவாமி, அம்பாள் சமேதராக, சிறிய தேர் ஒன்றின் மீது உள்வீதி வலம் வருவார். இது 'நித்திய உற்சவம்' எனப்படும்.

பிரதோஷ தினங்களில் இங்கு பிரதோஷ உற்சவம் நடைபெறுகின்றது. மாதப் பிறப்பு அன்று சங்கிராந்தித் தீர்த்த விழா இடம்பெறும். ஒவ்வொரு மாதமும் பௌர்ணமி அன்று ஸ்ரீசக்கர பூசையுடன் இராசராசேசுவரி உற்சவம் நடைபெறும்.

இக்கோயிலின் மகோற்சவம் பங்குனி மாதத்திற் 10 நாட்களுக்கு நடைபெறும். கொழும்பில் இக்கோயிலில் மட்டுமே ஐந்து தேர்கள் இழுக்கப்படும். விநாயகர், சோமாஸ்கந்தர், அம்பாள், சுப்பிரமணியர், சண்டேசுவரர் ஆகிய மூர்த்திகள் தேர்களில் உலாவருவர். அம்பாள் தேரைப் பெண்கள் மட்டுமே இழுத்து வருதல் சிறப்பாகக் குறிப்பிட வேண்டியதொன்று. பங்குனி உத்தரத்தன்று தீர்த்தத் திருவிழாவுடன் மகோற்சவம் நிறைவெய்தும்.

ஆடிப் பூரத்துக்கு முந்திய ஒன்பது தினங்களும் ஸ்ரீ சிவகாம சௌந்தரி அம்பாளுக்குத் தினமும் அபிடேகம், பூசை, யந்திர பூசை, இலட்சார்ச்சனை, ஓமம், உற்சவம் ஆகியன இடம்பெறும். இறுதி நாளான ஆடிப் பூரத்தன்று அம்பாளுக்குத் திருவுலாவுஞ் சிறப்பாக நடைபெறும்.

கந்தசட்டிக் காலத்திலே தினமும் அபிடேக, யாக பூசை, திருவுலா ஆகியன இடம்பெறும். தைப்பூசம், மகாசிவராத்திரி, ஆவணி மூலம், நவராத்திரி, திருவெம்பாவை, நடேசர் அபிடேக தினங்கள் ஆகியனவும் முக்கியமானவை. நடேசர் அபிடேக தினங்களுள் மார்கழித் திருவாதிரையும் ஆனி உத்தரமும் இங்கு மிகச் சிறப்பானவை.

# 7. விநாயகர் வழிபாடு

மந்திரம் எல்லாவற்றுக்கும் முதலாய் அமைவது பிரணவ மந்திரம். 'பிரணவத்தின் பொருள் என்ன ?' என்று முருகன் பிரமனைக் கேட்டார் என்பதனை நீங்கள் முன்னே படித்தீர்கள் அல்லவா? பிரணவப் பொருளாய் அமைபவர் பிள்ளையார். 'ஓம்' என்பது பிரணவ மந்திரம். இது ஓங்காரம் எனப்படும். இந்த ஓங்காரத்தின் உருவமே பிள்ளையாரின் வடிவம். மூன்றும் வகுப்புச் சைவ நெறியில் முதலாம் பாடம் விநாயகர் வணக்க மாகும். அங்கு இம்மந்திரம் வரையப்பட்டுள்ளது. 'ஓ' என்ற எழுத்தை நீங்கள் எழுதுங்கள். பின்னர் இதனைக் கூர்ந்து நோக்குங்கள். துதிக்கையுடன் சேர்ந்த பிள்ளையாரின் முகத்தை இதனுடன் ஒப்பிட்டுப் பாருங்கள். அப்பொழுது ஓர் ஒற்றுமை காணப்படும்.

பிள்ளையாரைக் குறிப்பதற்கு எழுதுவது பிள்ளையார் சுழி. இதுவும் இந்த 'ஓ' என்ற எழுத்திலிருந்து தோன்றியது என்பர் அறிஞர். எக்கருமத்தைச் செய்வதற்கும் முதலிற் பிள்ளையார் வணக்கம் இன்றியமையாதது.

பிள்ளையாரின் உருவத்தைக் கருங்கல்லிற் பொளிந்து எடுப் பர் சிலர். வேறு சிலர் அதனை ஐம்பொன்னல் அமைப்பர். பிரதிட்டை செய்கின்ற விக்கிரகங் கருங்கல்லாற் செய்யப்படும். எழுந்தருளி விக்கிரகம் ஐம்பொன்னல் அமைக்கப்படும். தற் காலிகமாக மஞ்சள், சந்தனம், சாணம், மண் என்பவற்ருலும் பிள்ளையார் பிடித்து வைப்பது உண்டு. நம்பி என்ற சிறுவன் வணங்கிய திருநாரையூர்ப் பொள்ளாப் பிள்ளையார் பற்றி நீங் கள் இரண்டாம் வகுப்பிற் படித்தீர்கள். இந்தப் பிள்ளையார் விக்கிரகம் சிற்பியின் உளியாற் பொள்ளாது உண்டானது. இது தானே தோன்றியது என்பதனுற் சுயம்பு மூர்த்தி எனப்படும்.

மார்கழி மாசத்தில் வீட்டு வாசலிற் பிள்ளையாரை மஞ்சளி னுல் அல்லது சாணத்தினுற் பிடித்து (சிறப்பாகப் பூசணி) பூ வைத்து வணங்குவதை நீங்கள் கண்டிருப்பீர்கள். பிள்ளையார் பிடிப்பதற்கு எப்பொருளும் இல்லாதபொழுது அறுகம் புல்லை

அவருக்கு அறிகுறியாக வைத்து வணங்குவார்கள். இவ்வாறாக விநாயகர் வழிபாடு எல்லோருக்கும் எளிதாக அமைகின்றது.

பிள்ளையாருக்குக் கணபதி, விக்கினேசுவரர், விநாயகர் என்ற பிற பெயர்களும் உண்டு. பூத கணங்களுக்குத் தலைவர் என்பதனால் கணபதி என்று பெயர் பெறுவர். அடியார்களின் விக்கினங்களை (இடையூறுகளை) விலக்குவதனால் அவரை விக்கினேசுவரர் என்பர். தமக்கு மேலே தலைவர் இல்லாதவர் என்பதனால் அவரை விநாயகர் என்று கூறுவர்.

கணபதிக்கு ஏகதந்தன் என்று ஒரு பெயர் உண்டு; ஒற்றைக் கொம்பன் என்பது அதன் கருத்து. வியாச முனிவர் மகாபாரதத்தைச் சொல்லிக்கொண்டு போக, கணபதி அதை எழுதினார். இடையில் எழுத்தாணி உடைந்துவிட்டது. ஆனால் கணபதி எழுதுவதை நிறுத்தவில்லை. தமது தந்தத்தில் ஒன்றை ஒடித்து அதனைத் தொடர்ந்து எழுதி முடித்தார். முறித்தெடுத்த தந்தத்தை வலக்கரத்திற் பிடித்துள்ளார். ஒரு நல்ல காரியத்தைச் செய்வதற்காகத் தம்மிடம் உள்ள சிறந்த ஒன்றைத் தியாகம் செய்தார். தியாகத்தின் மூலமே செயற்கரியதைச் செய்து சாதிக்க முடியும். தியாகம் செய்யாது யாரும் மேலோர் ஆனது கிடையாது. ஓர் உயர்ந்த காரியத்தின் பொருட்டு ஏகதந்தன் ஆனார் கணபதி.

இந்து மதத்தின் தாயகமாகிய பரத கண்டம் எங்கணும் விநாயகர் வணக்கம் பரவியிருப்பினும் மகாராட்டிரப் பிரதேசத்து மக்களுக்கு இவரில் நிரம்பிய ஈடுபாடு உண்டு. அவர்கள் விநாயகப் பெருமானுக்கு இன்று விழாக்கள் வெகு ஆடம்பரமாக எடுத்து வருகின்றனர்.

கணபதியை முழுமுதற் கடவுளாகக் கருதி வழிபடும் மதத்திற்குக் காணபத்தியம் என்று பெயர். இக்காலத்தில் இம்மதம் சைவத்தினுள் அடங்கிவிட்டது. கணபதிக்கு விருப்பமான நிவேதனம் மோதகம். மோதகம் என்றால் மகிழ்ச்சி. அவர் எல்லோருக்கும் இன்ப மயமாக இருக்கிறார் என்பதுதான் மோதகத்தின் தத்துவம்.

பிள்ளைகளுக்கு உரிய கடவுள் பிள்ளையார். இதனாலேயே பிள்ளையாருக்கு அடிக்குஞ் சிதறுதேங்காயை அவர்கள் உரிமையோடு பொறுக்கி எடுக்கின்றனர். அத்துடன் ஐந்து தேர்கள் இழுக்கப்படுங் கோயில்களிற் பிள்ளையார் தேரைப் பிள்ளைகளே இழுப்பது வழக்கம்.

விநாயகரைப் பற்றிப் புராணக் கதைகள் பல உண்டு. பார்வதி பரமேசுவரனின் மூத்த திருக்குமாரனென்று உலகம் அவரை உபசாரத்திஞல் சொல்லுகிறது. ஆஞல் முழுமுதற் கடவுளாகிய சிவபெருமாஞக்கும் விக்கினேஸ்வரருக்கும் பேதமில்லை. இருவரும் ஒருவரே. இருவரையும் முக்கண்ணர் என்று அழைப்பர்.

விநாயகப் பெருமானின் அருட்செயல்கள் பலவற்றைப் புராணங்கள் கூறுகின்றன. அகத்தியரது கமண்டல நீரைக் காக வடிவில் வந்து கவிழ்த்துக் காவிரி நதியை உண்டாக்கிஞர்; அம்மை அப்பனை வலம் வந்து மாங்கனி பெற்ருர்; கயமுகன் என்னும் அசுரனைக் கொன்று அவனைத் தம் வாகனமாக்கிஞர்; திருமாலுக்கு உண்டான சாபத்தைப் போக்கியருளிஞர்; ஔவையாரை ''விநாயகர் அகவல்'' பாடச்செய்து கயிலை சேர்ப்பித்தார். இன்னும் தக்கன், இந்திரன், மன்மதன், சந்திரன், இராவணன், பாண்டவர்கள், விக்கிரமாதித்தன் மனைவி இலக்கணசுந்தரி, மெய்கண்டதேவர், நம்பியாண்டார் நம்பி முதலியோர் அவரை வழிபட்டு இட்ட சித்திகளைப் பெற்றனர்.

# 8. முருக வழிபாடு

முருக வழிபாடு தமிழ் மக்களிடையே தொன்றுதொட்டு வழங்கிவருகிறது. முருகு என்பதற்கு இளமை, இனிமை, அழகு என்ற பலகருத்துக்கள் உண்டு. இளமையே வடிவானபடியால் முருகனைக் குமரக் கடவுள் என்று வழிபடுகிறோம். யாவருக்கும் நன்மை செய்பவன், இனியவன் என்றபடியால் சுப்பிரமணியன் என்று அவனை அழைக்கின்றோம். இயற்கை அழகில் இறைவனைக் கண்ட மக்கள், அவ்வழகை முருகனாக வழிபட்டனர். திருமுருகனின் ஆறு படை வீடுகளையும் நான்காம் வகுப்புப் புத்தகத்திற் பார்த்திருப்பீர்கள். திருச்செந்தூர், திருவேரகம், பழநி, திருப்பரங்குன்றம், பழமுதிர்சோலை என்பன முதல் ஐந்து படை வீடுகளாகும். இவை தென்னிந்தியாவில் உள்ளவை. ஆறுவது படைவீடு குன்றுதோறாடல் என்று குறிப்பிடப்படுகிறது. குன்றங்களெல்லாம் அவன் வதியுமிடங்கள் என்பதே இதன் பொருள். இக்காரணம் பற்றியே குறிஞ்சிக் கடவுள் என்று அவனுக்குப் பெயர்.

ஆறுபடை வீடுகளையும் பற்றித் திருமுருகாற்றுப்படையிலே விபரமாக அறியலாம். இது முருகனிடத்தே நம்மை வழிப்படுத்துகின்ற ஒரு தோத்திர நூலாகும்; காலத்தால் மிகவும் பழமையானது. நக்கீரர் என்ற புலவர் இந்நூலைப் பாடிப் பேரின்னலிலிருந்து முருகன் அருளாலே தப்பிப் பிழைத்தார். இந்நூலைக் கிரமமாகப் பாராயணம் பண்ணுவோரை இடர் எதுவும் அணுகாது என்று பத்தர்கள் திடமாக நம்புகிறார்கள்.

முருகனது திருநாமங்கள் அவனது பெருமையை நமக்கு உணர்த்துகின்றன. அவன் சரவணப் பொய்கையிலே வளர்ந்தவன்; பெண்கள் வளர்த்தபடியால் கார்த்திகேயன் என்று அவனை வணங்குகின்றோம். தேவர்தம் சேனைத் தலைவனாக நின்று சூரனை அழித்தமையால் தேவசேனாபதி என்று வழிபடுகிறோம். அவனை வழிபடும் அடியார்களுடைய உள்ளக் குகையில் அவன் என்றுமகலாது வீற்றிருந்து அருளுகின்றான்; இதனால் குகன் என்று அழைக்கப்படுகிறான்.

சிவபெருமானுக்கு வேதத்தின் பொருளை உணர்த்தியவன் என்ற பொருள்பட ஞானபண்டிதன் என்றும் சுவாமிநாதன் என்றும் அவனுக்குப் பெயர்கள் உண்டு. இக்கலியுகத்திலும் வேண்டுவார் வேண்டுவன எல்லாம் முருகன் அருளி வருவது நாம் கண்கண்ட உண்மை. இதனால் அவனைக் 'கலியுக வரதன்' எனப் போற்றுகின்றோம்.

நமது நாட்டிலும் முருக வழிபாடு தொன்றுதொட்டு நிலவி வருகிறது. கதிர்காமத்திற் கலியுக வரதனாக முருகன் அடியார்க்கு அருள் புரிகின்றான். கீழ் மாகாணத்திலே திருக் கோயிலிலும் மண்டூரிலும் சிற்றாண்டியிலும் அவன் கோயில் கொண்டு எழுந்தருளியுள்ளான். யாழ்ப்பாணத்தில் நல்லூர், மாவிட்டபுரம், கந்தவனக்கடவை, செல்வச்சந்நிதி என்பன பழம்பெரும் முருகன் தலங்களாகும்.

கதிர்காமத்தில் முருகனுக்குப் பூசை செய்பவர்கள் கப் புறாளைமார் என்று அழைக்கப்படுகின்றனர். இவர்கள் பூசை செய்யும் முறை சைவ ஆலயங்களிற் பூசை செய்யும் முறைக்கு வேறுபட்டதாகும்; இவர்கள் தம் வாயை மஞ்சள் நிறத் துணி யினாற் கட்டிக்கொண்டு தீபாராதனை செய்து வழிபாடியற்றுவர். இவ்வாறே மண்டூர்க் கந்தசுவாமி கோயிலிலும் செல்வச் சந்நிதி யிலும் வழிபாடு செய்யப்பட்டு வருகின்றது. இவ்வழக்கத் தைக் கேரள தேசத்திலும் பல கோவில்களிற் காணலாம். இது ஆகம வழிபாட்டிற்கு முற்பட்ட வழக்கமென்று கூறுவதற்கு இடமுண்டு.

நல்லூரும் மாவிட்டபுரமும் சரித்திரப் பெருமை வாய்ந்த தலங்கள். நல்லூரிலே முருகன் கோவில் ஆதியிற் கோட்டை அரசன் ஆறும் புவனேகபாகுவினாற் கட்டப்பட்டது. இக்கோ யில் போர்த்துக்கேயராலே தரைமட்டமாக்கப்பட்டது. இன்றும் விழாக் காலங்களிற் கட்டியங்கூறும்பொழுது ஆதியிற் கோவில் எடுத்த புவனேகபாகு ஆசீர்வதிக்கப்படுகிறார்.

மாவிட்டபுரம், குதிரைமுகம் படைத்த மாருதப்புரவீக வல்லி என்ற அரசிளங் குமாரி முருகன் அருளாற் குதிரை முகம் மாறப்பெற்ற தலம். ஆதலால் மாவிட்டபுரம் (மா-விட்ட-புரம்) என்பது காரணப் பெயராகும். இங்கு கோயில்கொண்டிருக்கும் முருகப் பெருமான் ஆடி அமாவாசையன்று தீர்த்த உற்சவத்திற் குக் கீரிமலைக் கடற்கரைக்குப் பல்லாயிரக் கணக்கான பத்தர்கள் புடைசூழ எழுந்தருளுவது கண்கொள்ளாக் காட்சி.

முருகனது திவ்விய சரிதம் கூறும் அருள் நூல் கந்த புராணமாகும். அந்தக் கந்த புராண படனம் யாழ்ப்பாணத்துக் கோயில்களில் மிகப்பழைய காலந்தொட்டு நடந்து வருகிறது. அந்நியர்தம் ஆட்சிக் காலத்திலே தமது சமயத்தை அழிந்தொழியாமற் பேணி வைத்தது இந்த முருக வழிபாட்டு நெறியேயாகும்.

# 9. விரதங்கள்

சமயங்கள் எல்லாவற்றிலுங் கடவுள் வழிபாட்டைச் சிறக்கச் செய்வன விரதங்களே. விரதம், நோன்பு என்பன ஒரு பொருட்சொற்கள். சிவபெருமானைக் குறித்து அனுட்டிக்கும் விரதங்கள் பேரின்பம் பயப்பன. உமாதேவியார், பிள்ளையார், சுப்பிரமணியர் ஆகிய கடவுளரின் விரதங்கள் உலகியற் சிறப்பினைத் தருவன.

விரதம் அனுட்டிக்கும்பொழுது ஒரு நாளில் ஒரு பொழுதேனும் இரு பொழுதேனும் முப்பொழுதேனும் உணவு உண்ணுதிருத்தல் வேண்டும். மூன்று பொழுதும் உண்ணுதிருத்தல் உபவாசம் எனப்படும். உணவைச் சுருக்கும்பொழுது அல்லது உண்ணுது விடும்பொழுது மனம் வாக்குக் காயம் ஆகிய மூன்றிஞலுங் கடவுளை விதிப்படி மெய்யன்போடு வழிபடுதலே விரதமாகும்.

ஆரும் வகுப்பிற் படித்த சிவராத்திரி, திருவாதிரை, பிரதோஷம் என்பன சிவ விரதங்கள். விநாயக சதுர்த்தி, விநாயக சட்டி முதலியன விநாயக விரதங்கள். திருக்கார்த்திகை, கந்தசட்டி முதலியன கந்த விரதங்கள். இவற்றுள் விநாயக சதுர்த்தி, திருக்கார்த்திகை, கந்தசட்டி ஆகியவற்றை இங்கு கற்போம்.

## (அ) விநாயக சதுர்த்தி

இது ஆவணி மாதத்துச் சுக்கில பட்சச் சதுர்த்தசியிலே (அதாவது வளர்பிறை நாலாம் நாள் அன்று) விநாயகக் கடவுளை நினைந்து மேற்கொள்ளும் விரதமாகும். சதுர்த்தி அன்று கணபதிக்கு இரட்டை அறுகம் புல்லாற் பூசை செய்தல் சிறப்பு. இவ்விரதத்தை அனுட்டிப்போர், பகலிலே ஒரு பொழுது மட்டும் போசனஞ் செய்தல் வேண்டும்.

## (ஆ) திருக்கார்த்திகை

இது கார்த்திகை மாசத்துக் கார்த்திகை நட்சத்திரத்தன்று முருகப் பெருமானைக் குறித்து அனுட்டிக்கும் விரதமாகும்.

இதில் உபவாசம் இருத்தல் உத்தமம். அவ்வாறு செய்ய முடியாதவர்கள் பழம் முதலியன உண்ணலாம். இவ்விரதம் பன்னிரண்டு வருடகாலம் அனுட்டிக்க வேண்டியது.

இது சரவணப் பொய்கையிற் கந்தன் தோன்றியதை நினைவூட்டுவதாக அமைகின்றது. அப்பொய்கையிற் கந்தன் தோன்றிய போது, கார்த்திகைப் பெண்கள் அவனைப் பாலூட்டி வளர்த்தனர். சிவபெருமான் தம் திருக்குமாரனை வளர்த்த அப்பெண்களுக்கு அருள்புரியத் திருவுளங் கொண்டார். ''நம்முடைய மகன் உங்களால் வளர்க்கப்பட்டமையாற் கார்த்திகேயன் என்ற பெயரைப் பெறக் கடவன். இன்னும், கார்த்திகையாகிய உங்கள் நாளிலே என் குமாரனை வழிபடுவோர்க்கு மேன்மைகளைக் கொடுப்போம்'' என்று சிவபெருமான் அவர்களுக்கு அருள் புரிந்தார்.

## (இ) கந்த சட்டி

இது ஐப்பசி மாதத்திலே அமாவாசையை அடுத்து வரும் பிரதமை முதல், சட்டி ஈருக ஆறு தினங்கள் கந்தசுவாமியாரைக் குறித்து அனுட்டிக்கும் விரதமாகும். இந்த ஆறு தினங்களும் உபவாசம் இருத்தல் வழக்கம். அவ்வாறு செய்ய இயலாதவர்கள் முதல் ஐந்து நாளும் ஒவ்வொரு பொழுது உணவு அருந்தி, சட்டி அன்று உபவாசஞ் செய்வர். இவ்விரதம் ஆறு வருட காலம் அனுட்டிக்க வேண்டியது.

முருகப் பெருமான் சூரனைச் சங்கரித்து, அவனுக்கு அருள் புரிந்த தினத்தை இவ்விரதம் நினைவூட்டுகின்றது. சட்டி என்பது அமாவாசை அல்லது பூரணைக்குப் பின் வருகின்ற ஆறுவது திதி அல்லது நாளாகும். தேவர்களின் துயரைத் தீர்த்தற் பொருட்டு முருகப் பெருமான் சூரனோடு போர் செய்தார்; ஆறும் நாள் அன்று தம் வேலினால் அவனைப் பிளந்து இரு கூறுக்கினர். அவருடைய அருளினால் அந்த இரு கூறுகளுஞ் சேவலும் மயிலுமாக மாறின. அப்பொழுது சேவலைக் கொடியாகவும் மயிலை வாகனமாகவும் அவர் ஏற்றருளினர். தம் துயர் தீர்ந்த தேவர்கள் எம்பெருமானைப் போற்றித் துதித்து நற்பேறு அடைந்தனர் என்பது புராணக் கதை.

# 10. சைவப் பண்புகள்

வாழ்க்கை வேறு, சமயம் வேறு என்று கருதுதல் தவறு. வாழ்க்கையோடு இயைந்ததுதான் சமயம். இயைந்தது மட்டு மன்றி அதனை வழிப்படுத்துவதும் சமயமே என்பதை நம் பெரியார்கள் வலியுறுத்தி வந்துள்ளார்கள். ''மனமே நான் உனக்குச் செய்யும் உபதேசம் இதுதான்'' என்று பட்டினத் தார் சொல்லுவது எல்லோரின் வாழ்வுக்கும் வழிகாட்ட வல்ல அருளுரையாகும்.

அந்த அருளுரை என்ன? தெய்வம் ஒன்றுதான் என்று முதலிற் பட்டினத்தார் கூறுகிறார். அந்தத் தெய்வம் பக்தர் களின் விருப்பப்படி பலப்பல வடிவங்களில் அருள்புரிகின்றது. அம்பிகையாக, விநாயகராக, முருகனாக நாம் வழிபடுவதெல் லாம் மாதொருபாகனாகிய சிவபெருமானையே அன்பே உரு வானவர் அவர். ''அன்பே சிவம்'' என்று திருமந்திரம் சொல்லு கின்றது. இதனைக் குறிக்குந் திருமந்திரப் பாடல் முதலாம் அத்தி யாயத்திலே தரப்பட்டுள்ளது.

இந்த அன்புத் தெய்வத்தை வழிபட்டு அன்பைப் பெருக் கிக்கொள்வதுதான் நமது வாழ்வை நிறைவுபடுத்தும் செல்வ மாகும். மாடமாளிகை, கூடகோபுரம், சுகபோகம் நிறைந்த வாழ்வு ஆகியவையெல்லாம் நிலையற்றவை. அரசன் ஆண்டி யாகிறான். ஆண்டி அரசனாகிறான். எது நிலையான செல்வம்? அன்புதான் என்றும் நமக்குச் செல்வமாக விளங்குவது. அன் போடு உருகி அகம் குழைவார்க்குத்தான் தெய்வீகம் நிரம்பிய சிறப்பான வாழ்வு சித்திக்கும்.

இந்த அன்பை வளர்ப்பது எப்படி என்று பட்டினத்தார் கூறுகிறார்; அன்பு வாழ்க்கைக்கு வழிகள் சொல்லித் தருகிறார். அவை எவை என்று பார்ப்போம்.

ஒன்றென்றிரு தெய்வம் உண்டென்றிரு உயர் செல்வமெல்லாம்
அன்றென்றிரு பசித்தோர் முகம்பார் பல் அறமும் நட்பும்
நன்றென்றிரு நடு நீங்காமலே நமக்கிட்டபடி
என்றென்றிரு மனமே உனக்கே உபதேசமிதே

— பட்டினத்தார்

**பசித்தோர் முகம் பார்க்கவேண்டும்.** வறுமைப்பட்டவரது துன்பத்தை விரைந்து துடைக்கவேண்டும்.

''அற்ருர் அழிபசி தீர்த்தல் அஃதொருவன்
பெற்ருன் பொருள்வைப் புழி''

என்பது திருவள்ளுவர் வாசகம். வறியவர்களின் பசியைத் தீர்க்க வேண்டும். அதுவே பொருள் பெற்ற ஒருவன் அப்பொருளைத் தனக்குப் பிற்காலத்தில் உதவுமாறு சேர்த்து வைக்கும் இடமாகும் என்பது இக்குறளின் பொருள்.

அடுத்தபடியாகப் பட்டினத்தார் வலியுறுத்துவது **அறங்கள் செய்ய வேண்டும்** என்பதாகும். அறங்கள் என்பவை எவை? பொருமை கொள்ளாதிருத்தல், பிறர் பொருளுக்கு ஆசைப் படாதிருத்தல், சினத்தைத் தவிர்த்தல், இனிய வார்த்தை களைச் சொல்லுதல் என்பனவே அந்த அறங்கள்.

''அழுக்காறு அவாவெகுளி இன்னுச்சொல் நான்கும்
இழுக்கா இயன்றது அறம்''

என்கிறது திருக்குறள்.

வேறு என்ன நமக்கு வேண்டும்? **அருமையான நண்பர்கள் வேண்டும்.** சிரித்து மகிழ்தல் மட்டும் நட்பன்று. பிழை செய் யும்போது இடித்து உரைப்பதும் துன்பம் நேரும்போது உதவி செய்வதும் நட்புக்கு இலக்கணமாகும்.

''நகுதற் பொருட்டன்று நட்டல் மிகுதிக்கண்
மேற்சென்று இடித்தற் பொருட்டு''

என்றும்,

''உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே
இடுக்கண் களைவதாம் நட்பு''

என்றும் பொய்யாமொழி இதனையே வலியுறுத்துகின்றது.

இன்னும் என்ன பண்பு நமக்குத் தேவைப்படுகிறது? **நடுவு நிலைமை நீங்காத நேர்மைத் திறம் வேண்டும்.** சிந்தனையிலும் சொல்லிலும் செயலிலும் கோணுதல் இல்லாமல் இருக்கும் உறுதி நமக்கு வேண்டும். இக்குணங்களை நமது வாழ்வில் வளர்த்துக்கொள்ளுவோமானல் நாம் சமய வாழ்க்கை வாழ்ப வர்கள் ஆவோம்.

# 11. மெய்ப்பொருள் நாயனார்

## "வெல்லுமா மிகவல்ல மெய்ப்பொருளுக்கு அடியேன்"

சேதி நாடு என்றொரு நாடுண்டு. அதன் தலைநகர் திருக் கோவலூர் எனப்படுவது. அந்நாட்டை அறநெறி தவறாமல் ஆட்சிபுரிந்து வந்த மன்னர் ஒருவர் இருந்தார். அவர் வீரத் திற் சிறந்தவர். பகையரசர்களைப் புறமுதுகிட்டோடச் செய் யும் ஆற்றல் படைத்தவர். இவற்றையெல்லாம் விட அவருக் குச் சிறப்புத் தந்தது அவரது ஆழ்ந்த சிவபத்தி. சிவனடியார் களைக் கண்டதும் அவர்களைச் சிவனெனவே போற்றுவார். அத னால் மெய்ப்பொருள் நாயனார் என்ற பெயரைப் பெற்றார்.

அவரது ஆட்சியிலே, கோயில்களிற் பூசைகளும், திரு விழாக்களும் குறைவின்றி நடந்தன. தாம் பெற்ற செல்வம் அனைத்தும் இறைவனது அடியார்களுக்கு உரியது என்ற எண்ண மே அவர் மனத்திற் குடிகொண்டிருந்தது. சிவனடியார்களுக்கு அவரது அரமனைக் கதவு எப்பொழுதும் திறந்திருக்கும். அவர் களுக்கு வேண்டிய பொருளை அவர் வரையாது வழங்கி வந்தார்.

நாயனாரைப் பலமுறை எதிர்த்த பகைவன் முத்தநாதன் என்பவன். அவன் ஒவ்வொரு முறையும் படைகளெல்லாம் அழிக் கப்பட்டுத் தோல்வியுற்றான். போர் தொடுத்து வெல்லமுடி யாது; சூழ்ச்சியாலேதான் இவரை வெல்ல வேண்டுமென்ற கபட எண்ணம் அவனுக்குத் தோன்றிற்று. சிவவேடத்துக்கு மெய்ப் பொருள் நாயனார் காட்டும் பத்தியை முத்தநாதனும் அறிந் திருந்தான். 'சிவவேடம் பூண்டு இவரை வெல்லுவேன்' என்று அந்த வஞ்சகன் சிவவேடம் தரித்துக்கொண்டான். மேலெல் லாம் திருநீறு, சடைமுடி, கையில் ஒரு புத்தகப் பை, அந்தப் பைக்குள் ஒரு கத்தி என்று இப்படியாக முத்தநாதன் திருக் கோவலூருக்கு வந்து, அரமனை வாயிலை அடைந்தான். மை பொதி விளக்குப்போல மனத்தினிற் கறுப்பு வைத்தவன் என்று வாயிற் காவலருக்குத் தெரியுமா? வேடமோ சிவ வேடம். சிவ

னடியார்களைத் தடையின்றி உள்ளே விடவேண்டும் என்பது அரசரது ஆணை. எனவே, அவனை வணங்கி உள்ளே செல்ல விட்டனர்.

முத்தநாதன் அரசர் இருக்கும் உள்வாயிலை அடைந்தான். அங்கு அரசனது மெய்க்காப்பாளனுக நின்ற தத்தன் முத்தநாதனை மறித்தான். ''அரசர் நித்திரை செய்கிருர். சற்றே இருங்கள். நான் பார்த்து வருகிறேன்'' என்ருன் தத்தன். ''அரசருக்கு முக்கியமான ஒன்றை நான் உபதேசிக்க வந்துள்ளேன். நீ பேசாமல் நில்'' என்று கூறி உள்ளே சென்ருன் அந்த வேடதாரி.

உள்ளே அரசர் உறங்குகின்ருர். பக்கத்தில் அரசி இருக்கிருள். சிவனடியாரைக் கண்டதும் அரசி எழுந்து அரசரை எழுப்பினுள். விழித்தார் அரசர். பார்த்தார் அடியாரை. உடனே எழுந்து அவரை வணங்கி நின்ருர். ''உமது கடவுள் முன்பு செய்த அற்புதமான ஆகமம் ஒன்று எம்மிடம் உள்ளது. உமக்கு உபதேசிக்கக் கொண்டு வந்தேன். நீரும் நானும் மட்டுமே இருக்கவேண்டும்'' என்ருன் முத்தநாதன். அரசியை அந்தப் புரம் செல்லுமாறு பணித்தார் மெய்ப்பொருள் நாயனுர்; முத்தநாதனை ஆசனத்தில் அமரச் செய்தார். தாம் நிலத்தில் இருந்தார். புத்தகம் எடுப்பான் போலப் பையைத் திறந்த அந்தக் கயவன், பையில் மறைத்து வைத்திருந்த கத்தியை எடுத்து தலைவணங்கி அமர்ந்து இருந்த நாயனுரைக் குத்தினுன்.

தவ வேடத்தான் தன்னையும் நிறுத்தி உள்ளே புகுந்த போதே, தத்தனுக்குச் சிறிது சந்தேகம் ஏற்பட்டது. உள்ளே ஓடிவந்தான். இரத்தம் சோர மெய்ப்பொருள் குத்தப்பட்டு விழுங் காட்சியைக் கண்டான் ; தன் வாளை உருவினுன். ''தத்தா இவர் நமர்'' என்ற அரசர் குரல் அவனைத் தடுத்தது. தாங்க முடியாத துக்கத்துடன் தத்தன் அவரைத் தாங்கிக்கொண்டான். ''அரசே எனக்கென்ன கட்டளை இடுகிறீர்கள்'' என்ருன். ''இவருக்கு ஒருவித இடையூறும் நேராமல் பாதுகாப்புடன் ஊர் எல்லையிற் கொண்டுபோய் விடு'' என்ருர் அரசர்.

அந்த வேடதாரியை அழைத்துக்கொண்டு தத்தன் செல்லுவானுயினுன். இதற்குள் செய்தி பரவிட்டது. கொதித்தெழுந்தனர் மக்கள்; இவனைக் கொல்லுவோம் என்று சூழ்ந்துகொண்டனர். ''இவர் ஒருவித அபாயமுமின்றித் தமது ஊர் செல்ல வேண்டும்; இது அரசரது ஆணை'' என்ருன் தத்தன். அரச ஆணை என்றதும் மக்கள் வழிவிட்டனர். முத்தநாதனைக் கொண்டு

போய் விட்டுவிட்டுத் தத்தன் அரசர் பக்கம் விரைந்தான். ''பொய்த் தவ வேடங்கொண்டு உங்களை வென்றவனை, உங்கள் ஆணையின்படி கொண்டு போய்விட்டு வந்தேன்'' என்றான் தத்தன். குற்றுயிராகக் கிடந்த அரசர் ''நீ செய்த நன்றி பெரியது'' என்று சொல்லி ஆறுதல் அடைந்தார்.

அரசாயத்தார், பட்டத்திளவரசன், உடன்பிறந்தோர் எல்லாரும் கூடினர். உயிர் பிரியும் நேரம் அவர்களுக்கு நாயனார் சொல்லிய இறுதி வார்த்தை என்ன? ''திருநீற்றில் அன்பு வையுங்கள். அதற்கு ஒரு குறையும் வாராமல் அரசு புரியுங்கள்'' என்பதே அது.

உயிர் பிரியும் நேரத்திலே, அவர் எந்த வேடத்தை மெய்ப் பொருளாக வாழ்க்கை முழுவதும் எண்ணி வழிபட்டாரோ, எந்த வேடத்துக்காக உயிரையே கொடுத்தாரோ, வஞ்சகன் என்று தெரிந்தும் வேடத்தால் 'நம்மவர்' என்றாரோ அந்த வேடத்திலேயே இறைவன் காட்சி தந்து அவருக்குச் சிவப் பேற்றை அளித்தார்.

தேவாரத்திற் சுந்தரமூர்த்தி சுவாமிகள் ''வெல்லுமா மிக வல்ல மெய்ப்பொருளுக்கு அடியேன்'' என்று பாடுகிறார். செயற்கரிய செய்த சிவப்பெரியார்கள் அறுபத்துமூவரில் மெய்ப்பொருள் நாயனாரும் ஒருவர்.

# 12. குங்குலியக் கலய நாயனர்

தமது உடம்பாற் பல பணிகள் செய்து அதையே இறைவழி பாடாகக் கொண்டு வாழ்ந்தவர்கள் பலர். இப்பணிக்குச் சரியைத் தொண்டு என்று பெயர். திருக்கோவிலுக்காகப் பூந்தோட்டம் அமைத்தல், பூமாலை புனைதல், அலகிடுதல், மெழுக்கிடுதல், விளக்கேற்றல், தூபமிடுதல் என்பனவெல்லாம் சரியைத் தொண்டுகளாகும்.

இறைவன் கோயிலிலே தூபமிடும் பணியையே தமது வாழ்வின் இலட்சியமாகக் கொண்டு வாழ்ந்த ஒரு பெரியார் குங்குலியக் கலய நாயனர். கலயர் என்பது இவரது இயற்பெயர். குங்குலியம் வாங்கிக் கோயிலிலே தூபமிடும் பணியை இவர் செய்து வந்தபடியால் இவரைக் 'குங்குலியக் கலயர்' என்று எல்லோரும் அழைத்தனர்.

இவர் வாழ்ந்த ஊர் அட்டவீரட்டத் தலங்களில் ஒன்ருகிய திருக்கடவூராகும். அங்கு எழுந்தருளியுள்ள இறைவனது திருநாமம் அமிர்தகடேசுவரர். இந்தத் திருவீரட்டானக் கோயிலிற் குங்குலியப் புகையிடும் திருப்பணியைச் செய்துவந்த கலயருக்கு, இறைவன் சோதனை போல வறுமை வந்து சேர்ந்தது. அந்த நிலையிலும் அவர் குங்குலியம் வாங்கித் தூபமிடலைத் தொடர்ந்து செய்து வந்தார். அதற்காகத் தமது நிலபுலம், பொருள் பண்டம் எல்லாவற்றையும் விற்கவேண்டியதாயிற்று. கொடிய வறுமை அவரை வாட்டிற்று. அவரும் அவர் தம் சுற்றமும் பசிக் கொடுமையால் வருந்தினர். விற்பதற்கு ஒன்றுமே இல்லை. கலயருடைய மனைவியின் கழுத்திலிருந்த திருமாங்கலயத்தைத் தவிரப் பொருள் என்று ஒன்றுமில்லை.

பட்டினி கிடக்கும் முகங்களைப் பார்த்தார் கலயருடைய மனைவியார். அத்துன்பத்தை அவராற் பொறுக்க முடியவில்லை. தமது திருமாங்கலியத்தைக் கழற்றிக் கணவரிடம் கொடுத்தார்; ''இதை விற்று நெல் வாங்கி வாருங்கள். இவர்களுக்கு உணவு அளிக்கலாம்'' என்ருர்.

கையிலே திருமாங்கலியத்துடன் கலயனர் கடை வீதி வழியே செல்லுவாராயினர். பொதி ஒன்றுடன் வியாபாரி

ஒருவன் எதிரே வந்தான். ''என்ன பொதி அது'' என்றார் கலயர். ''குங்குலியம்'' என்றான் வியாபாரி. அது கேட்ட கலயர் எல்லாம் மறந்தார்; கையிலிருந்த பொன்னைக் கொடுத்தார்; அப்பொதியை வாங்கினார்; நேரே ஆலயத்துக்குச் சென்றார்; களஞ்சியத்திலே குங்குலியப் பொதியை வைத்தார். தாம் நேசம் வைத்த நிமலனது தூபப் பணிக்கு இடையூறு இனி ஏற்படாது என்ற ஆனந்தம் அவர் உள்ளத்தில் நிரம்பிற்று. வேறு நினைவுகளுக்கு அங்கு இடமேது? அவர் சிவத் தியானத்தில் இறைவன் சந்நிதியில் இருந்தார்; தம்மை மறந்தார்.

கலயர் வீட்டில் நெல் வரும் என்று எல்லோரும் பார்த்திருந்தனர்; களைப்பாற் சோர்ந்தனர்; நித்திரையில் ஆழ்ந்தனர்; கலயரின் மனைவி அப்பொழுது ஒரு கனவு கண்டார். அவர் கண்டது, வீடு நிறைய நெல்லும் பொருளும் நிறைந்திருக்கும் ஒரு காட்சி. உடனே எழுந்தார். என்ன அதிசயம்! கண்ட காட்சி கனவன்றி, நனவாகவே இருந்தது. ஆண்டவனது அருள் என்று அம்மையார் இறைவனை வணங்கினார்; எல்லோருடைய பசியையுந் தீர்க்கலாம் என்று சமையல் செய்ய ஆரம்பித்தார்.

ஆலயத்தில் அமர்ந்திருந்த கலயனுருக்கு இறைவன் காட்சி கிடைத்தது. ''பசியுடன் இருக்கின்றீர், வீடு சென்று உணவு அருந்தும்'' என்று இறைவன் ஆணை பிறந்தது. கலயர் வீட்டுக்குச் சென்றார். நடந்த விந்தை கண்டு அதுவும் திருவருளின் செயல் என்று தெளிந்தார். பெற்ற செல்வத்தாலே தூபம் இடுவதோடு சிவனடியார்களுக்கு அமுது செய்விக்கும் திருப்பணியையுஞ் செய்து வந்தார்.

அங்கிருந்து சில மைல் தொலைவிலுள்ள தலம் திருப்பனந்தாள். அங்குள்ள திருக்கோயிலிற் சிவலிங்கம் சரிந்திருந்தது. சோழமன்னன் அது கண்டு மனம் வருந்தினான். தன் ஆட்களுடன் யானைகளைக் கொண்டு அதனை நிமிர்த்த முயன்றான். சரிந்த சிவலிங்கம் நிமிரவில்லை. இச்செய்தியைக் கேட்டார் கலயர். ''இந்தப் பணியில் நானும் பங்கு கொள்ளுவேன்'' என்று சிவலிங்கத்திற் கட்டிய கயிற்றைத் தம் கழுத்திலே மாட்டிக் கொண்டு இழுத்தார். என்ன ஆச்சரியம்! சரிந்திருந்த சிவலிங்கம் நிமிர்ந்தது. அடியார் அன்புக்கு ஆண்டவன் இரங்குவான் என்பதை எல்லோரும் தம் கண்முன்னே கண்டு அதிசயித்தனர்.

இங்ஙனம் சிவப் பணியையே வாழ்வின் நோக்காகக் கொண்டு வாழ்ந்து இறுதியிற் சிவ சாயுச்சியம் அடைந்த பெரியார் குங்குலியக் கலயனார்.

# 13. கந்தபுராண கலாசாரம்

## (1) புராண படனம்

நமது சமய வாழ்க்கையை வளம்பெறச் செய்யும் ஓர் அரிய சாதனமாகக் கந்தபுராணம் விளங்குகிறது. முருகப் பெருமானது பெருமையைப் போற்றும் இந்நூல் கோயில்களி லுஞ் சைவ மடங்களிலுந் தொன்றுதொட்டுப் படிக்கப்பட்டு வருகிறது. இப்படிப்பைப் புராண படனம் என்று சொல்லு வார்கள்.

புராண படனம் நமது நாட்டிற்கே உரியதொரு தனிச் சிறப்பு. கோயில் மண்டபங்களிலும் மடங்களிலும் ஒருவர் புரா ணத்தைப் படிக்க, மற்றொருவர் பயன் சொல்லுவார். பத்தர் கள் கூடியிருந்து அதனைக் கேட்பார்கள். படித்தலும் பயன் சொல்லலும் இசையோடு கூடியனவாக இருக்கும்.

புராண படனத்தின் மூலம் நாட்டிற் சைவம் வளர்ந்து வந்தது. ஆயினும், போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் ஆகிய அந்நியர் நமது நாட்டின் கரையோரப் பகுதிகளைக் கைப்பற்றிய காலத்தில் எமது சமயத்திற்குப் பெரியதோர் ஆபத்து ஏற் பட்டது. சைவ ஆலயங்கள் எல்லாந் தரைமட்டமாக்கப்பட் டன. திருக்கோணமலை, திருக்கேதீச்சரம் போன்ற தேவாரம் பெற்ற தலங்கள்கூடத் தப்பவில்லை. இந்நிலையிற் சைவ ஆலயங்களில் ஆரம்பித்து வைத்த கந்தபுராண கலாசாரமே சம யம் அழிந்தொழியாமல் நிலவச் செய்தது. கோவில்கள் இல் லாத போதிலும் வீட்டுத் திண்ணைகளிலாவது புராண படனஞ் செய்து சைவச் சான்றோர் சமயத்தைப் பாதுகாத்து வந்தனர்.

கந்த புராண கலாசாரம் வீறுபெற்று வளர வழிசெய்த பெருமக்களில் நாம் ஞானப்பிரகாசரையும் அவரின் வழித்தோன் றலாகிய ஆறுமுக நாவலரையும் மறக்கமுடியாது.

## (2) கச்சியப்ப சிவாசாரியார்

திருமுருகன் திவ்விய சரிதத்தைச் செந்தமிழிலே நமக்குத் தந்த சைவப் பெரியார் கச்சியப்ப சிவாசாரியார் ஆவர். இவர்

தென்னிந்தியாவிலுள்ள காஞ்சிபுரத்தைச் சேர்ந்தவர். சமயச் சிறப்பு வாய்ந்தது காஞ்சிநகரம். பெரிய கோயில்கள் பல அங்கு உண்டு. அவற்றிற் குமரகோட்டம் என்ற முருகன் கோயிலுக்குப் பூசகராகக் காளத்தியப்ப சிவாசாரியார் பணியாற்றி வந்தார். அவருடைய தவக் குழந்தையே கச்சியப்பர்; தந்தைக்குப் பின் குமரகோட்டத்து அர்ச்சகராகப் பணிபுரிந்து வந்தார்.

இந்நிலையில் ஒருநாள் கனவில் முருகனது காட்சி அவருக்குக் கிடைத்தது. கனவில் வந்த முருகனிடமிருந்து ஒரு தெய்வக் கட்டளை பிறந்தது. திருமுருகன் திவ்விய சரிதத்தைச் செந் தமிழிலே பாட வேண்டும் என்பதே அது. அது மட்டுமன்று. முருகப் பெருமானே அடியெடுத்துக் கொடுத்து அப்பெரும் பணியைத் தொடக்கியும் வைத்தார். ''திகட சக்கர'' என்பதே அப்பெருமான் எடுத்துக் கொடுத்த அடி.

முருகன் தந்த காட்சியும், விடுத்த ஆணையும், அருளிய சொற்களும் கச்சியப்பரை ஆனந்தப் பரவசராக்கின. இறைவனது கருணையை நினைத்து நினைத்து இறும்பூதெய்தினர். இறைவன் பணித்த வண்ணம் தமிழிலே முருக சரிதத்தைப் பாடத் தொடங்கினர். ஒரு நாளைக்கு நூறு பாடல்கள் வீதம் பாடி வந்தார். தினமும் பாடிய பாடல்களைக் கோயிற் படியில் வைத்துவிட்டுச் செல்வார். முதல் நாட் பாடிய பாடல்களை மறுநாள் எடுத்துப் பார்த்தால் முறையான பல திருத்தங்கள் காணப்படும். முருகனது திருவிளையாட்டு இது என்று அகம் பூரிப்பர் அந்த முருக பத்தர்.

இங்ஙனம் பதினோராயிரம் பாடல்களுடன் புராணம் முடிவுற்றது. அரங்கேற்றத்துக்கு நாள் வைக்கப்பட்டது. குமர கோட்டத்தை மக்கள் அலங்கரித்தனர். அறிஞர் பெருந்திரளாக வந்து கூடினர். கச்சியப்பர் கந்தபுராணத்தைப் படிக்க ஆரம்பித்தார். முதற் செய்யுள் விநாயகர் காப்பு. இறைவனே அடியெடுத்துக் கொடுத்த பாட்டு முதல் வரியைச் சொல்லி முடித்தவுடன், கூட்டத்தில் ஓர் ஆட்சேபனைக் குரல் கிளம்பிற்று. ஒருவர் முதல் வரியே பிழையென்றார். ''இறைவனது வாக்கிற் பிழையா? இதென்ன சோதனை?'' என்று கச்சியப்பர் திடுக்குற்றார்; மனம் வெதும்பினர். மேலே தொடர அவர் மனம் ஒருப்படவில்லை. புராண ஏடுகளைக் கட்டி முருகன் சந்நிதியிலே வைத்தார்; ''நாளை வந்து சமாதானம் சொல்லுவேன்'' என்று சொல்லி எழுந்து சென்று விட்டார். வேதனையுடன் அன்றிரவு நித்திரைக்குச் சென்றார். அன்றிரவும் அவருக்கு முருக தரிசனம் கிடைத்தது; ஆறுதல் ஏற்பட்டது.

மறுநாள் பழையபடி அரங்கு கூடிற்று. கச்சியப்பர் வந்து தமது ஆசனத்தில் அமர்ந்தார். அப்பொழுது உள்ளே ஒருவர் நுழைந்தார். வேற்றூரார் போலக் காணப்பட்டார். அவரது தோற்றப் பொலிவு கண்டு அவருக்கு முன் வரிசையில் இடம் தந்தனர். அவர் கையில் ஒரு புத்தகம் ஏந்தியிருந்தார்.

முதல் நாள் ஆட்சேபம் தெரிவித்தவருக்கு உற்சாகம் கிளம்பிற்று. படித்தவர் ஒருவர் வந்துள்ளார்; அவர் முன் தமது புலமையைக் காட்டவேண்டும் என்று அவர் எழுந்து நின்று கச்சியப்பரைப் பார்த்து ''நேற்று நான் எழுப்பிய மறுப் புக்குச் சமாதானம் தெரிவித்து மேலே தொடரவேண்டும்'' என்றார். ''என்ன மறுப்பு அது? '' என்று புதிதாக வந்தவர் கேட்டார். அங்கிருந்தவர்கள் ''திகழ்தச'' என்பது ''திகடச'' என்றாகும் எனல் பிழையென்று அவர் ஆட்சேபித்ததை எடுத் துக் கூறினார்கள். ''அதிற் பிழையொன்றும் இல்லையே'' என்றார் வந்தவர். ஆட்சேபித்தவருக்குச் சினம் மூண்டது. ''ஆதாரம் காட்ட முடியுமா ?'' என்று சிறிது உரத்தே கேட்டார். புதிதாக வந்தவர் புன்முறுவல் பூத்தார்; ''முடியும், வீரசோழியம் என்ற இலக்கண நூல் அதற்கு விதி கூறுகிறது'' என்றார். கேள்விப் படாத ஒரு புத்தகம் பற்றி இவர் குறிப்பிடுகிறாரே என்று ஆட்சேபித்தவருக்குச் சுருதி இறங்கிற்று. சபையோர் அப்புத்த கம் பற்றி அறிய ஆவற்பட்டனர். ''இதோ இருக்கிறது வீர சோழியம்'' என்று புதியவர் தம் கையிலிருந்த புத்தகத்தைக் கச்சியப்பர் கையிற் கொடுத்தார். சபையில் ஒரே ஆரவாரம். அது அடங்கச் சில நிமிடங்கள் சென்றன. வீரசோழியம் கொண்டு வந்த விந்தை மனிதரைப் பார்க்க ஆவல் கொண்டனர் எல்லோரும். ''என்ன ஆச்சரியம்! அவரைக் காணோமே! இங் கேயிருந்தவர் எப்படி மறைந்தார்'' என்று ஒரே திகைப்பு. ''கந்த பிரானே கச்சியப்பருக்காக இங்ஙனம் வந்தாரோ'' என்று வியந்தனர். கச்சியப்பரும் முருகப் பெருமானது பெருங் கருணைத் திறத்தை நினைந்து உருகி, பத்திப் பரவசராகிக் கந்த புராணம் முழுவதையும் படித்தார். சொற்சுவை, பொருட் சுவை, பத்திச்சுவை மூன்றும் நிரம்பிய கந்தபுராணத்தைச் சபை யோர் சிரத்தையுடன் கேட்டனர். அரங்கேற்றம் ஓராண்டு நடந்து இனிது முடிவெய்தியது.

கச்சியப்ப சிவாசாரியாரையும் கந்தபுராணத்தையும் பல்லக்கில் ஏற்றி, வாத்தியங்கள் முழங்க ஊர்வலம் செய் வித்து மக்கள் மகிழ்ந்தனர். கச்சியப்பர் தமது வாழ்நாள் முழுவதும் குமரகோட்டத்து முருகனை முழுமனத்துடன் வணங்கி

வழிபட்டு வந்தனர். இவர் 14 ஆம் நூற்றாண்டின் இறுதியில் வாழ்ந்தவரெனத் தெரியவருகிறது.

கடவுட் கொள்கைகளைக் கதை மூலம் சொல்லி விளங்க வைப்பது புராணம். புராண படனத்தின் மூலம் ஈழத்துக்கே உரிய கந்தபுராண கலாசாரம் வளர்ந்தது; வளர்ந்து வருகிறது. இலங்கைச் சைவர்களாகிய நாம் இப்பாரம்பரியத்துக்கு உரிய வர்கள் என்பது நமக்குப் பெருமை தருவதொன்று.

## (3) ஞானப்பிரகாசர்

மார்கழி மாசத்தில் வருகின்ற பெருவிழா ஆருத்திரா (ஆதிரை நாள்) தரிசனமாகும். இது மிகவும் சிறப்பாகச் சிதம் பரத்திற் கொண்டாடப்படுகின்றது. இந்தத் திருவிழாவைக் கண்டு கூத்தப் பெருமானைத் தரிசிக்கச் சைவர்கள் பலரும் சிதம்பரஞ் செல்கின்றனர். சிதம்பரம் செல்பவர்கள் நடராசப் பெருமான் கோயிலுக்கு அண்மையில் உள்ள ஞானப்பிரகாசம் என்னுங் குளத்தையும் அதனை அடுத்துள்ள மடத்தையுங் காணத் தவறமாட்டார்கள். இவற்றை ஆக்கியவர் ஞானப்பிரகாசரே.

யார் இந்த ஞானப்பிரகாசர்? இவர் நமது நாட்டவர். யாழ்ப்பாணத்திலுள்ள திருநெல்வேலியே இவரது பிறப்பிடம். நமது சமயத்தின் பாதுகாவலர் என்று போற்றப்படும் நாவலர் பெருமானின் மூதாதை. போர்த்துக்கேயர் ஆட்சியின் கீழ் யாழ்ப்பாண இராச்சியமும் கோட்டை இராச்சியமும் அடிமைப் பட்டுக் கிடந்த காலத்தில் வாழ்ந்தவர். போர்த்துக்கேயரு டைய சட்டத்தின் கொடுமையைப் பொறுக்க முடியாமல் இந்தியா சென்று வசித்தவர்.

என்ன சட்டம் அது? 'ஒவ்வொரு வீட்டினரும் ஓர் ஒழுங்கு முறையாக ஒவ்வொரு பசுவைப் பறங்கியர் உணவிற்குக் கொடுத்து வரல் வேண்டும்' என்பதே அந்தச் சட்டம். பசுக்கொலை மாபாதகம் அன்றோ? இளைஞரான ஞானப்பிரகாசர் சைவ மர பில் ஊறியவர்; ஈர நெஞ்சம் படைத்தவர் ; இறை பத்தர். அவருக்குப் பசுவைக் கொடுக்க வேண்டிய சட்டத்துக்குப் பணிவது இயலாததாயிற்று. எனவே, தாம் பசுக் கொடுக்கும் முறை வந்ததும் இரவோடிரவாக நம் நாட்டை விட்டு அகன்றார்; தமிழ்நாட்டைத் தமது தாயகமாகக் கொண்டார்; நடராசப் பெருமானிடம் ஆரா அன்பு கொண்டவர் ; எனவே, சிதம்பரமே அவரது இருப்பிடமாயிற்று.

ஒருபொழுது தமிழ்நாட்டுக்கு வடக்கே பிரயாணம் செய்த போது குரு உபதேசமும் கைவரப்பெற்ருர். குழுவின் ஆணைப் படி திருவண்ணுமலை ஆதீனத்தை அடைந்து துறவற வாழ்க்கையை மேற்கொண்டார். திருவண்ணுமலையிலிருந்து சிதம்பரம் திரும்பிய ஞானப்பிரகாசர் அங்கே ஞானப்பிரகாசத்தை வெட்டுவித்து, அதனருகில் ஆச்சிரமம் அமைத்துத் தமது எஞ்சிய வாழ்நாளை இறை பணியிலும், சமய நூல்களுக்கு உரை காண்பதிலும், மாணவர்களுக்கு மெய்யறிவு புகட்டுவதிலும் கழித்தார்.

## (4) ஆறுமுக நாவலர்

திருவாவடுதுறை ஆதீனத்தின் கொலு மண்டபத்தில் ஆதீனகர்த்தாவாகிய ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர் வீற்றிருக்கின்ருர். இளைய பட்டமாகிய அம்பலவாண தேசிகர் அருகில் அமர்ந்திருக்கிருர். தம்பிரான் கூட்டமும் அறிஞர் குழாமும் சபையை அணிசெய்கின்றன. எல்லோருடைய கண்ணுஞ் சிந்தனையும் அன்று பிரசங்கஞ் செய்ய வந்துள்ள பெரியாரை விட்டு அகலவில்லை. அவரது தோற்றப் பொலிவு பெருமதிப்பை ஊட்டிற்று. வெண்ணீறு பூசிய மேனி, உருத்திராக்கம் அணிசெய்யுங் கழுத்து, பட்டுப் பீதாம்பர உடை, இவை யாவும் பார்ப்போர் உள்ளத்தை ஈர்த்தன. பிரசங்கம் ஆரம்பித்தது. மடை திறந்தாற்போலச் சொல் பெருக்கெடுத்தோடுகிறது. இனிய குரலிலே திருமுறைப் பாடல்களுஞ் சமய உண்மைகளும் விரவி வருகின்றன. மகிழ்ச்சியால் மனம் பூரித்த ஆதீனகர்த்தா பிரசங்கஞ் செய்தவருக்கு ''நாவலர்'' என்ற பட்டம் வழங்கி மரியாதைகள் பலவுஞ் செய்கிருர். இச்சம்பவம் நடந்தது 1849 ஆம் ஆண்டு. ஆதீனகர்த்தா வழங்கிய மரியாதைகளுக்குப் பாத்திரமாயிருந்தவர் ஈழத்தின் தவப் புதல்வராகிய நல்லூர் ஆறுமுக நாவலராவர்.

ஆறுமுக நாவலர் 1822 ஆம் ஆண்டு நல்லூரிற் பிறந்தார்; அவர் வாழ்ந்தது 57 ஆண்டுகளேதான். அக்காலத்துக்குள் அவர் சாதித்த சாதனைகளோ மிகப் பல. அவர் வாழ்ந்த காலத்தில் ஈழ நாடும் இந்திய நாடும் அந்நியராகிய ஆங்கிலேயர் ஆட்சியில் அடிமைப்பட்டுக் கிடந்தன. சைவ சமயமுந் தாழ்வுற்று வலியிழந்து கிடந்தது. ஆங்கிலேயரது ஆதரவினுற் கிறித்தவ மதத்தின் ஆதிக்கம் ஓங்கியிருந்தது. சைவ சமயத்தவர்கள் தமது சமயத்தின் பெருமைகளை அறியாதவராய்க் காலங் கழித்

தனர். அவர்களுள் ஆங்கில மோகம் கொண்ட சிலர் பிற சமயம் புகுந்தனர்.

நாவலர் இவற்றையெல்லாம் கண்ணுற்ருர்; மனம் வெதும்பினர். சைவத்தை அதன் பழைய நிலைக்கு உயர்த்தவேண்டுமென்ற சிந்தனையே அவரது உள்ளத்தை நிறைத்து நின்றது. அதனுலே தமது வாழ்நாள் முழுவதையும் சமயத்துக்காக உழைப்பதற்கு அர்ப்பணித்தார்.

'விளையும் பயிரை முளையிலே தெரியும்' என்பதற்கிணங்க அமைத்திருந்தது நாவலர் பெருமானின் இளமைப் பராயம். நாவலரது ஒன்பதாவது வயதிலே அவரது தந்தையார் காலமானுர். அவர் எழுதிய நாடகமொன்று முடிக்கப்படாமற் கிடந்தது. இந்தச் சிறுவர் அதைப்பாடி நிறைவாக்கினுர். இவரது சகோதரர்கள் இவரைத் தமிழ்க் கல்விகற்க அனுப்பினுர்கள். இவர் தமிழ்க் கல்வி கற்றது சரவணமுத்துப் புலவர், சேனுதிராய முதலியார் என்போரிடம். ஆசிரியர்கள் சொல்லித் தரும் பாடத்தோடு திருப்தியடைந்துவிடும் பழக்கம் அவருக்கில்லை. மேலும் பல நூல்களைத் தேடிக் கற்பார். அக்காலத்தில் அச்சுப் புத்தகங்கள் இல்லை; ஏடுகளிலிருந்தே கற்கவேண்டும். அவ்வேடுகளைப் பெறுவதும் கடினம்.

கோயில்களிற் புராணம் படிக்கப்படும்போது இலக்கணப் பிழையாக அர்த்தம் சொல்பவர்களோடும், தவருன அர்த்தம் சொல்பவர்களோடும் இவர் பிழைகளைச் சுட்டிக்காட்டித் தர்க்கிப்பார். தமிழில் இவரது திறமையைக் கண்டு இவரது தமையன்மார் இவரைப் பேசிவல் பாதிரியாரின் ஆங்கிலப் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பினுர்கள். அங்கு ஆங்கிலம் கற்று, அப்பாதிரியாருடைய தமிழ்ப் பண்டிதராகவும் சொற்ப காலம் இருந்து, விவிலிய நூலைத் தமிழில் மொழிபெயர்த்துக் கொடுத்தார். அது சிறந்த மொழிபெயர்ப்பென மதிக்கப்பட்டது. தாம் சைவராக இருந்தும் விவிலிய நூலைத் திறம்படத் தமிழ்ப்படுத்திக் கொடுத்த அவருடைய பரந்த நோக்குப் போற்றுதற்குரியது.

சமய விருத்தியே அவரது ஓயாத சிந்தனையாக இருந்து வந்தது. வித்தியாசாலைகள் தாபிக்கவேண்டும்; வேதனம் வாங்காமற் பிள்ளைகளுக்குக் கல்வி கற்பிக்க வேண்டும்; ஏட்டிலே உள்ள நூல்களை எல்லோரும் எளிதிற் பெறும்படி அச்சிற் பதிப்பிக்கவேண்டும்; இவையே இவருடைய அபிலாசைகள்.

அதனுல் யாழ்ப்பாணத்திலே வண்ணுர்பண்ணையிலும், இந்தியாவிலே சிதம்பரத்திலும், சைவப்பிரகாச வித்தியாசாலை

என்ற பெயரிற் கல்விக் கூடங்கள் நிறுவினுர். இவர் காட்டிய வழிநின்றே சைவ மக்கள் காலக்கிரமத்தில் நூற்றுக் கணக்கான சைவப் பள்ளிக்கூடங்கள் நிறுவினர்.

இனி, நூல்கள் வெளியிடவேண்டும் என்பதற்காக வித்தியாநு பாலன யந்திரசாலே என்ற பெயரிற் சென்னேயிலும்; யாழ்ப்பாணத்திலும் அச்சகங்களேத் தாபித்து நூல்கள் வெளியிட ஆரம்பித்தார். சைவத்தின் உயிர் நாடியாக விளங்கும் பெரிய புராணம், கந்தபுராணம், திருவிளேயாடற் புராணம் என்பவற்றை வசன நடையில் எழுதி வெளியிட்டார். சிறுவர்களுக்குச் சமயத்தைப் பற்றிய விளக்கமான அறிவு தருவதற்காக எளிய இனிய நடையிற் பாலபாடங்கள் எழுதினுர். சைவசமயிகளுக்கான விதி நூலாகச் சைவ விஞவிடைகள் எழுதி வெளியிட்டார். வேறும் பல நூல்கள் அச்சு வாகனம் ஏற்றப்பட்டன. நாவலர் அச்சிட்ட பதிப்பு என்றுல் அதற்கொரு தனி மதிப்பு; குறியீடுகள் செவ்வையாக இடப்பட்டு, அதிக கல்வி இல்லாதவர்கள் தாமும் வாசித்து விளங்குவதற்கு இலகுவான முறையிற் சொற்கள் பிரிக்கப்பட்டு இருந்ததும், பிழையின்றி இருந்ததும் இவர் தம் பதிப்புக்களின் சிறப்பாகும்.

சைவ சமயிகள் தமது சமயப் பெருமையை உணரச் செய்வதற்காக நாவலர் பெருமான் பிரசங்கங்கள் செய்தார். வண்ணுர்பண்ணேச் சிவன் கோயிலில் வெள்ளிக்கிழமை இரவுகளில் வசந்த மண்டபத்தில் நெடுநேரம் நின்று சொன்மாரி பொழிவார். ஒருமுறை இன்னெருவர் பிரசங்கம் செய்யும் நாள். நாவலரும் கேட்க வந்திருந்தார். பிரசங்கியாருக்கு வரவியலாமற் போயிற்று. அப்பொழுது நாவலர் பெருமானே உரை நிகழ்த்த வேண்டும் என்று சபையோர் வேண்டிக் கொண்டனர். அவர் ''ஆயத்தமில்லே'' என்றுர். அங்கிருந்த சிலர் அதைக்கேட்டு நகைத்தார்கள். ''ஆயத்தமில்லே'' என்பதையே தலேப்பாகக் கொண்டு சொன்மாரி பெய்தார் நாவலர். நகைத்தவர்கள் திகைத்தார்கள்.

ஆங்கிலப் பள்ளியிலே தமது ஆசிரியப் பதவியைத் துறந்து விட்டு முழு நேரமுஞ் சைவத்துக்கே உழைக்க ஆரம்பித்தார் நாவலர். இவரது சமயப் பேச்சுக்கள் ஈழத்திற் சைவம் காக்கும் சஞ்சீவி மருந்தாக அமைந்தன. கேட்பாரைப் பிணிக்கும் தகையன அவருடைய பேச்சுக்கள். அவற்றைக் கேட்ட மக்களிடம் பெரிய மாறுதல்கள் ஏற்பட்டன. மாமிச போசனஞ் செய்தோர் அதனேக் கைவிட்டனர். மதுபானம் செய்த அநேகர் அதனேச் செய்யாதிருந்தனர். திருநீறு அணியாதோர் அதனே அணிய

ஆரம்பித்தனர். பலர் உருத்திராக்கம் தரிக்கத் தொடங்கினர். எல்லோருந் தேவாரப் பாடல்களை நெட்டுருப் பண்ணினர். மக்கள் ஒழுங்காக ஆலய வழிபாடு செய்ய ஆரம்பித்தனர். சைவ சமயத்தில் நம்பிக்கையும் மதிப்பும் அபிமானமும் உண்டாயின.

சமய அனுட்டானங்களிலே தமது காலத்துக்கேற்ற மாற்றங்களைச் செய்த பெருமை நாவலருக்கே உரியதொன்று. வசன நடை கைவந்த வல்லாளர் என்றும், நமது சமய காவலர் என்றும், சைவமும் தமிழும் வளர்த்த பெருமகன் என்றும் புகழ்ந்து நமது தவப் புதல்வருக்கு ஈழ மக்களாகிய நாம் **1969** இல் சிலை எழுப்பி மண்டபம் அமைத்துத் தேசியப் பெருவிழா எடுத்தோமல்லவா? தலைநகராகிய கொழும்பிலிருந்து நாவலர் பெருமானின் சிலை ஊர்வலமாக யாழ்நகரத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டது. ஆயிரக் கணக்கான மக்கள் அணிவகுத்துச் சென்றனர். நல்லூருக்கு நீங்கள் சென்றால் நாவலர் சிலையைக் கோயிலின் தெற்கு வீதியிற் காண்பீர்கள்.

நாவலர் பெருமான் நமக்கு அளித்த நல்ல உபதேசங்கள் எவை. ''உள்ளும் புறமும் ஒத்த நல்ல குணங்களை வளர்ப்பவனே உண்மையான சைவ சமயி ஆவான். விபூதி தரிப்பது மட்டுமே சைவ சமயிகட்கு இலக்கணம் என்று நினைக்க வேண்டாம்; கொலை, களவு, பொய் முதலியவற்றையுந் தவிர்க்க வேண்டும். உயிர்களுக்கு இரங்க வேண்டும். வறியவர்களுக்கு ஒரு பிடி அன்னமாவது கொடுக்க வேண்டும்? செய்ந்நன்றி அறிய வேண்டும். பெரியோரிடம் மரியாதையுடன் நடந்துகொள்ள வேண்டும். கடவுள் பத்தி உடையவராக இருத்தல் வேண்டும்.'' இவற்றை எல்லாம் நாவலர் பெருமான் எழுதியுள்ள பால பாடங்களில் நீங்கள் விரிவாக அறிந்துகொள்ளலாம்.

## 14. ஸ்ரீ இராமகிருஷ்ணர்

காலந்தோறும் மெய்யடியார்கள் தோன்றி இந்து மதத்தின் உயிராற்றலே உறுதிப்படுத்தி வந்துள்ளனர். அந்த மெய்யடியார் பரம்பரையில் வந்த ஞானியே ஸ்ரீ இராமகிருஷ்ணர்; சென்ற நூற்முண்டில் வாழ்ந்தவர். கடவுளின் அமிசமாக விளங்கும் எல்லாச் சீவராசிகளுக்கும் தொண்டு செய்வதுதான் தெய்வத் தொண்டு; அங்ஙனம் செய்பவனே உண்மையான பத்தன்; ஆண்டவனுக்கு உவந்தவன் என்ற உண்மையைக் கடைப் பிடித்து வாழ்ந்தவர் இப்பெரியார். இவர் வாழ்ந்து காட்டிய நெறியின் விளக்கமாக விளங்குபவையே உலகின் எல்லாப் பகுதிகளிலும் நாம் இன்று காணும் **இராமகிருஷ்ண மடங்கள்.**

இராமகிருஷ்ணர் பிறந்தது வட இந்தியாவில், வங்க மாகாணத்தில் உள்ள காமர்புகூர் என்ற கிராமத்தில். இவரது தந்தையார் க்ஷுதிராம் சட்டர்ஜி என்ற அந்தணர். தாயார். பெயர் சந்திரமணி அம்மை. க்ஷுதிராம் சட்டர்ஜி பிதிர்க் கடன் முடிப்பதற்காகக் 'காயா' என்ற தலத்துக்குச் சென்றிருந்தார். அங்கு அவருக்குக் கனவிலே கதாதரப் பெருமானின் தரிசனம் கிடைத்தது. அன்று காமர்புகூரிலும் சிவாலயத்திலுள்ள ஜோதிர்லிங்கத்தை வழிபட்ட சந்திரமணிக்கு, அதிலிருந்து ஓர் ஒளிக்கதிர் தம் உடலிற் புகுவது போன்ற அனுபவம் ஏற்பட்டடது. இதற்குப் பின் பிறந்த குழந்தையே இராமகிருஷ்ணர். இவர் பிறந்த வருடம் 1836 ஆகும்.

பிறந்தவுடனேயே மருத்துவப் பெண் தாயைக் கவனித்து விட்டுக் குழந்தையை எடுக்கத் திரும்பினுள். குழந்தை புரண்டிருக்க வேண்டும். பக்கத்திலே கணப்புக் காயும் அடுப்பின் சாம்பல் அவ்வளவும் குழந்தையின் மேலே விபூதிப் பூச்சுப் போலக் காணப்பட்டது. அது கருவிலே திருவுடைய குழந்தை யல்லவா! அக்குழந்தைக்குப் பெற்ருேர் கதாதரப் பெருமானின் பெயரையே இட்டனர். கதாதரரின் பிள்ளைப் பருவம் அவரது எதிர்காலச் சிறப்பையும் பெருமையையுஞ் சுட்டும் அறிகுறிகள் நிறைந்ததாகக் காணப்பட்டது.



படம் 24. ஸ்ரீ இராமகிருஷ்ணர்

இளமையிலேயே தமக்கு நன்மையென்று தோன்றிய உண்மையிலிருந்து சிறிதும் பிறழாத தன்மை இவரிற் காணப்பட்டது. இவரது ஏழாம் வயதில் இவருக்கு உபநயனச் சடங்கு

நிகழ்ந்தது. பிரமாசரிய ஆச்சிரமத்தில் நுழைவதற்கான சடங்கு இது. பூணூல் அணிந்தவுடன், வயதில் மூத்தவரும், தமது குலத்தைச் சேர்ந்தவரும், எல்லோராலும் மதிக்கப்படுபவருமான ஒரு மாதினிடம் பிச்சை வாங்க வேண்டும். இவர் தமது தாயுடன் நெருங்கிப் பழகியவரும், தமக்கு இரண்டாவது அன்னையாக அன்பு காட்டியவருமான ''தனி'' என்ற கொல்லர் குல மாதினிடம் ''பிச்சைக்குப் போவேன்'' என்று பிடிவாதம் பிடித்தார். வந்திருந்த புரோகிதர், உற்றார், உறவினர் யாவரும் இவரது எண்ணத்துக்கு விட்டுக்கொடுக்க வேண்டியதாயிற்று. சாதி பற்றிய உயர்வு தாழ்வுகள் கடுமையாகவிருந்த அக்காலத்தில் வாழ்ந்த இவர் இத்தகைய செயலின் மூலம் ஒரு புரட்சியை அக்கிராமத்தில் ஏற்படுத்தினர்.

கதாதரருக்கு இயல்பாகவே இறையுணர்வு நிறைந்திருந்தது. வட இந்தியாவின் பிரசித்தி பெற்ற யாத்திரைத் தலமாகிய பூரியிலுள்ள ஜகந்நாதர் ஆலயத்துக்குச் செல்லும் சாதுக்கள் தங்கிச் செல்வதற்காகக் காமர்புகூரில் ஒரு மடம் இருந்தது. கதாதரர் அந்த மடத்துக்கு அடிக்கடி செல்வதுண்டு. வருகின்ற சாதுக்களிடம் அவரை அறியாமல் ஓர் அன்பு ஈர்த்தது. அவர்கள்தம் பத்தி நிறைந்த உரையாடல்களைச் செவிமடுப்பார்; அவர்களுக்குக் குற்றேவல் செய்து மகிழ்வார். அவர்களுடைய எளிய தூய வாழ்க்கை, கிடைத்ததிலே திருப்தி காண்கின்ற மனப்பான்மை ஆகிய யாவும் கதாதரரது மனத்திலே நன்கு பதிந்துவிட்டன. ஒரு நாள் அவர் அந்த மடத்துக்குச் சென்றபோது கோவண ஆண்டிகளான அச்சாதுக்களைக் கண்டதும் என்ன தோன்றிற்றோ தெரியவில்லை. தாம் இடுப்பிற் கட்டியிருந்த துணியை இரண்டாகக் கிழித்து அவர்களைப்போல் உடுத்துக்கொண்டார். தாயிடம் ஓடிச்சென்று '' அம்மா நான் சந்நியாசியாகி விட்டேன்'' என்றார். உவகைபொங்க அன்றுதான் அன்னை வாங்கிக் கொடுத்த புத்தம் புதிய விலையுயர்ந்த வேட்டி அது. மகனின் துறவிக் கோலம் கண்டு அவளது கண் கலங்கிற்று.

இயற்கை அழகில் ஈடுபட்டுப் பரவசமடையும் பக்குவம் இவருக்கு இயல்பாகவே அமைந்திருந்தது. சிறுவராக இருந்தபொழுது ஒரு நாள் பொரியைக் கொறித்துக்கொண்டு அவர் வயல் வரம்பு வழியே நடந்து சென்றார். கறுப்பு விதானம் இட்டாற்போல வானம் முழுவதும் மழை முகில்களின் கூட்டம்; அதன்கீழ் வெண்ணிறக் கொக்குக் கூட்டம் பறந்தது. கருமையும் வெண்மையும் கண்ட அழகில் இவர் சொக்கினர்; மூர்ச்சையாகிவிட்டார். நினைவு வர நெடுநேரமாயிற்று.

அருட்பாடல்களும் இப்பிள்ளையை ஆனந்தத்தில் ஆழ்த்தின. தாயுடன் ஒருநாள் விசாலாட்சி அம்மன் கோயிலுக்குச் சென்ருர். பெண்மணிகள் கூட்டம் ஒன்று பஜனை செய்து கொண்டு சென்றது. கதாதரர் ஆனந்தப் பரவசராகி மயக்கம் போட்டு விழுந்துவிட்டார். தாயார் பதறிப்போனுர். அங்கு வந்த அருள் மூதாட்டி ஒருவர் கதாதரரின் காதில் அம்பிகையின் திருநாமங்களை உச்சரித்துக் கொண்டே இருந்தார். நினைவு பெற்று எழுந்தார் கதாதரர்.

கதாதரருக்கு நல்ல கைத்திறன் உண்டு. மண்ணைக் குழைத்து அழகிய தெய்வ உருவங்களைச் செய்வார். பார்ப்பவர்கள் உடனே அவற்றை விலைக்கு வாங்கி விடுவார்கள். அந்தக் காசைக்கொண்டு தம் ஏழைத் தோழர்களுக்கு இனிப்பு வாங்கித் தருவார். அவருக்கு இனிய குரல் அமைந்திருந்தது. அருட்பாடல்களைக் கேட்டவுடன் அவை அவருக்குப் பாடமாகிவிடும். நன்ருகப் பாடுவார்; நடிப்பார். கிராமத்துப் பிள்ளைகளைக்கொண்டு நாடகம் போடுவார். ஒரு நாள் நாடகத்திற் கதாதரருக்குச் சிவபெருமான் வேடம் தரப்பட்டது. மேலெல்லாம் திருநீறு பூசி, அரையிற் புலித்தோல் கட்டி, கையிலே திரிசூலம் தாங்கி, முகத்திலே தெய்வக் களை வீசச் சிவனைப் போல மேடையிலே வந்து நின்ருர். பார்த்தவர்கள் பிரமித்துப் போனுர்கள். வந்து நின்றவுடன் சிவவுணர்வு நிரம்பிச் சிவ சிந்தனையில் இலயித்தார். நாடகம் நடக்கவில்லை. சுயநினைவு வர மூன்று நாட்கள் ஆயின. இங்ஙனம் இவரது இளமைப் பருவம் கழிந்தது. பதினேழு வயதானபோது, கல்கத்தாவுக்கு அருகிலுள்ள தட்சிணேச்சரத்துக்கு வந்து அங்குள்ள காளி கோயில் அர்ச்சகரானுர். இனி, இவரை இராமகிருஷ்ணர் என்றே அழைப்போம்.

இராமகிருஷ்ணர் காளி கோயிலிலுள்ள திருமேனியை வெறும் சிலையாகக் கருதவில்லை; சகல சீவராசிகளையுங் காக்கும் உலக அன்னையாகவே கண்டார்; பத்தியோடு பணிவிடைகள் செய்தார்; வெயில் அதிகமானுல் விசிறி எடுத்து வீசுவார்; தாம்பூலம் மடித்துக் கொடுப்பார்; நல்ல தின்பண்டங்கள் படைப்பார்; தம்மை மறந்து ஆடுவார். புற உலக நினைவு அற்றுப்போய்விடும். இவரது வீட்டார் ''இவருக்குப் பைத்தியம் பிடித்திருக்கிறது'' என்று எண்ணினுர்கள். அது தெளிய மருந்து திருமணமே என்று நினைத்து இவருக்குப் பொருத்தமான ஒரு பெண்ணைத் தேடினுர்கள். யாவரும் வியப்புற இராமகிருஷ்ணரே தாம் மணக்கப்போகும் பெண்ணைத் தேர்ந்தெடுத்

தார். அப்பொழுது ஐந்து வயது நிரம்பிய பெண்மணியே 'தூய' அன்னை என்று உலகம் போற்றும் சாரதாமணி தேவியார்.

திருமணத்தின் பின் தம் மனைவியாரை அவரது பெற்றோரின் வீட்டில் விட்டுத் திரும்பவும் தட்சிணேச்சரம் சென்று விட்டார் இராமகிருஷ்ணர். அம்பிகையின் தரிசனம் பெற வேண்டுமென்று அல்லும் பகலும் அதே சிந்தனையாகி நின்றார். இவருக்குப் பைரவிப் பிராம்மணி என்ற அம்மையாரும் தோதாபுரி என்ற சாதுவும் குருவாக வந்து உபதேசம் செய்தார்கள். அதன் பின் மற்ற மதங்களும் இறைவனை அடையும் வழிகளே என்பதை அனுபவ மூலம் உணர்ந்தார்.

இவரது வாழ்க்கைத் துணைவியாரே இவரது முதற்சீடரானார். இவரது மற்றச் சீடர்களில் முதன்மை பெற்றவர் சுவாமி விவேகானந்தர். இவரே இந்து மதத்தை உலக முழுவதும் அறியச் செய்தவர். இராமகிருஷ்ணர் 1886 ஆம் ஆண்டு தமது பூதவுடலை நீத்தார்.

இந்து மதத்தின் சாரமும் இராமகிருஷ்ணர் போதித்ததும் ஒன்றே. சமயம் மனிதனில் உள்ள தெய்வத் தன்மையைத் தூண்டிவிடவேண்டும்; அவனைச் சன்மார்க்கத்திற் செலுத்த வேண்டும்; சகோதரத் தன்மையை வளர்க்க வேண்டும். பிற மதங்களிடம் வெறுப்பு ஏற்படக்கூடாது. அவற்றை மதிக்கப் பழகிக்கொள்ள வேண்டும். ''உண்மை ஒன்றே. அதை மேலோர் பல பெயரிட்டு வழங்குகின்றனர்.'' இதையே தாரக மந்திரமாகக் கொண்டு, இராமகிருஷ்ண மடங்கள் இன்று உலகின் பல பாகங்களிற் சேவை செய்து வருகின்றன.

எமது ஈழத்தில் இராமகிருஷ்ண மடத்தினர் செய்யும் தொண்டுகள் பற்றி அறிந்துகொள்வது எம்மையும் தன்னலமற்ற நற்பணி செய்ய வழிநடத்துவதாக அமையும். கொழும்பில் வெள்ளவத்தையில் அமைந்துள்ள தலைமைப் பீடம் ஞாயிறுதோறும் சிறுவர் சிறுமியரின் ஆன்மீக வளர்ச்சி கருதிச் சமய பாட வகுப்புக்களும் வளர்ந்தோருக்குச் சனி, ஞாயிறு தினங்களிலே தத்துவஞான வளர்ச்சிக்கான வகுப்புகளும் நடத்துகின்றது. மேலைத் தேச, கீழைத் தேச அறிஞரினதும், பல்வேறு சமூகத்தினரதும் கலாசார பரிமாற்றத்துக்கு உவந்த கலாசார நிலையம் ஒன்றும் விருந்தினர் விடுதி ஒன்றும் அமைதியான, ஆன்மிக அலை வீசுகின்ற சூழலில் நடத்தப்பட்டு வருகின்றன. பொது நிகழ்ச்சிகளை மேடையேற்றக் கூடிய பெரிய மண்டபம் ஒன்றும் நியாயமான கட்டணத்திற் பொதுமக்கள் உபயோ

கத்துக்கு விடப்படுகிறது. பொதுநூல் நிலையமும் சிறுவர் விளையாடி மகிழ உதவும் பூங்காவும் இருக்கின்றன. இறைவன் குரு மூர்த்தமாக வந்து அடியார்களை ஆட்கொள்ளுவதால் ஸ்ரீராமகிருஷ்ண குரு மூர்த்தத்துக்கு நாள்தோறும் பூசை பிரார்த்தனைகள் நடைபெறுவது ஆன்மீக நாட்டமுடையோருக்குப் பெரிய வரப்பிரசாதமாக அமைந்துள்ளது.

இவற்றைவிட, கிழக்கிலங்கையில் இந்த மடத்தினர் ஆற்றும் பணி மிகப் பெரியது. ஆதரவற்ற சிறுவர் சிறுமியர்க்கு உணவு, உடை, உறையுள், நூற்கல்வி, தொழிற்கல்வி, ஆன்மஞானம் யாவுமே அன்போடு சேர்த்துக்கொடுத்து அவர்கள் உலகில் வாழ்வாங்கு வாழவேண்டிய முறையெல்லாம் கற்றுக் கொடுத்து நாட்டுக்கே நற்பிரசைகளை உருவாக்கித் தரும் தலைசிறந்த பணியினை இந்த மடத்தினர் ஆற்றி வருகின்றனர்; சைவச் சூழ்நிலையிற் சிறுவர் கற்று வளர்வதற்கான பல பாடசாலைகளை நிறுவிப் பரிபாலித்து வந்தனர். அவை இப்போது அரசாங்கத்தாற் பொறுப்பேற்கப்பட்டுவிட்டன.

கதிர்காமத்தில் யாத்திரிகர் தங்கிச் செல்வதற்காக அமைந்திருந்த இராமகிருஷ்ண மடம் 1977 ஆம் ஆண்டு வரை ஆற்றி வந்த பணியின் சிறப்பு யாவரும் அறிந்ததே. சாதி மத பேதமின்றி அங்கு வருகை தந்த ஆயிரக் கணக்கான யாத்திரிகர்கள் அனைவருக்கும் உண்டியும் தங்கும் வசதியுஞ் செய்து உபசரித்தனுப்பிய சிறப்பினைப் பாராட்டாதாரில்லை. இத்தகைய தொண்டுகளுக்கு ஆதரவு நல்குவதோடமையாது நாமும் சுயநலமற்ற சிறந்த தொண்டர்களாகச் சேவை ஆற்றுவோமாக.

''என் கடன் பணி செய்து கிடப்பதே.''

# 15. யோகர் சுவாமிகள்

சித்தர்கள் சித்தி பெற்றவர்கள். இம்மையிலும் மறுமையிலும் இன்பமாக வாழத் தெரிந்தவர்கள். அவர்களைத் துன்பம் ஒரு பொழுதும் வருத்தாது. அவர்கள் எப்பொழுதும் இன்பம் நிறைந்த இனிய முகத்தோடு காட்சியளிப்பர். அவர்களைக் காண்பதே இன்பம். அவர்களோடு கூடிப் பழகுதல் அதனிலும் இன்பம். பலர் அவர்களிடஞ் சென்று தம் துன்பங் களைந்து இன்பம் பெறுவர்.

தமிழ் நாட்டிலே வாழையடி வாழையாகச் சித்தர்கள் பலர் தோன்றி வாழ்ந்து வந்துள்ளனர். அவர்களுட் பலரின் மகிமையைச் சாதாரண மக்கள் அறிந்திருக்கவில்லை. எமக்குத் தெரிந்த வரையில் முன் நாளில் வாழ்ந்த மிகப் பெரிய சித்தர் திருமூலர். அவர் திருமந்திரம் என்ற ஞானநூலை எமக்குத் தந்துள்ளார். பல சித்தர்கள் வைத்தியம், சோதிடம், காயகற்பம் முதலிய வித்தைகள் கைவந்தவர்கள். அவற்றை அவர்கள் மக்களின் நன்மைக்காகவே பயன்படுத்தினர்.

நம் ஈழ நாட்டிலும் சித்தர்கள் தோன்றியிருக்கின்றனர். அவர்களுள் ஒருவர் செல்லப்பாச் சுவாமி என்பவர். செல்லப்பாச் சுவாமியார் நல்லூர்க் கந்தசுவாமி கோயிலின் தேரடியைத் தமது இருப்பிடமாகக் கொண்டிருந்தார்; தேர் முட்டிப் படிகளில் நீண்டநேரம் தியானத்தில் இருப்பார்; எந்நேரமும் ஏதோ முணுமுணுத்துக்கொண்டு இருப்பார்; இருக்கும் போது வெறித்த பார்வையோடு இருப்பார். இதனால் மக்கள் இவரை ''விசர்ச் செல்லப்பா'' என்று அழைக்கலாயினர்.

ஒருநாள், தேரடியிலுள்ள வில்வ மர நிழலிலே ''விசர்ச் செல்லப்பர்'' வழக்கம் போலத் தியானத்தில் இருந்தார். அப்பொழுது ஓர் அன்பர் அவரிடஞ் சென்றார். சென்றவர் சுவாமிகளைக் கண்ட மாத்திரத்திலேயே தம்மை மறந்து பரவச நிலையில் ஆழ்ந்தார்.

சுவாமி அன்பரைப் பார்த்து என்றுமில்லா உணர்வோடு ''யாரடா நீ'' என்று அதட்டினார். பின்பு ''உன்னுள்ளே பாரடா'' என்றார். சில விநாடிகள் கழித்து ''பற்றெல்லாந்

தீரடா'' என்றுங் கட்டளையிட்டார். அந்தக் கணமே அன்பருக்கு ஞானங் கிட்டியது. இவ்வன்பரே மிக அண்மைக் காலம் வரை நம் மத்தியில் வாழ்ந்த யோகர் சுவாமியாராவார்.



படம் 25. யோகர் சுவாமிகள்

யோகர் சுவாமிகளுடைய வரலாறு சுவையானது. யாழ்ப்பாணத்திலே மாவிட்டபுரம் எனும் ஊரிலே 1872 ஆம் ஆண்டு 29 ஆந் தேதி யோகர் சுவாமிகள் தோன்றினர். அவருடைய பிள்ளைத் திருநாமம் 'சதாசிவன்' என்பது.

சதாசிவன் சிறுவயதிலேயே பெற்றோரை இழந்தான்; அதனால் மாமியார் ஒருவருடைய அரவணைப்பில் வளர்ந்து வந்தான். உரிய காலத்தில் ஊரிலிருந்த தமிழ்ப் பாடசாலையிற் கல்வி கற்கத் தொடங்கினன். பின்னர் சம்பத்திசிரியார் கல்லூரியில் ஆங்கிலங் கற்று அரச சேவையிற் சேர்ந்தான்.

கிளிநொச்சிப் பகுதியில் நீர்ப்பாசன அலுவலகத்திலே சதாசிவன் பொருள் காப்பாளராகக் கடமை புரிந்து வந்தான்.

பண்டை நற்றவம்போலும் திருமுறைகளும் புராணங்களும் கீதையும் உப நிடதங்களும் அவனுடைய மனத்தைக் கவர்ந் தன. ஓய்வு நேரங்களில் அவற்றை ஓதியுணர்ந்தான். ஆன்மீக விடுதலையை நாடினன். அவனுடைய மனம் ஒரு நற்குருவைத் தேடியது. இந்நிலையிற்றான் அவன் ''விசர்ச் செல்லப்பா'' வைக் காண நேர்ந்தது. அக்கணமே செல்லப்பாச் சுவாமிகள் குருவாய் நின்று அவனுக்குத் தீட்சையும் உபதேசமுஞ் செய் தார்.

நற்குருவின் தீட்சையும் உபதேசமும் சதாசிவனின் வாழ்க்கையிற் பெரு மாற்றத்தை உண்டாக்கின. அன்றே சதாசிவனார் அரச சேவையை விட்டார்; இனசன பந்தத்தைத் துறந்தார்; செல்லப்பாச் சுவாமியையே தம் தாய் தந்தை குரு தெய்வம் எல்லாமாகக் கொண்டார். சுவாமிகளைக் கணப் பொழுதும் விட்டுப்பிரியாது, அவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றித் திரிந்தார். சுவாமிகளும் சீடரைப் பலவகைச் சோதனைகளுக்கு உள்ளாக்கிப் பதப்படுத்தினர்.

ஒருநாள் சீடர் தம் குருவைத் தரிசித்த பின் தேர்முட்டி யின் மேற்படியிலிருந்து நாற்பது நாள் இரவுபகலாக நிட்டை யிலிருந்தார். அதன் பின் குருவின் கட்டளைப்படி பிச்சை யெடுத்து உண்ணத் தொடங்கினர். அன்றுதொட்டு அவரை மக்கள் ''யோகர் சுவாமிகள்'' என்று அழைக்கலாயினர்.

செல்லப்பாச் சுவாமியார் சமாதியடைந்த பின்னர், யோகர் கொழும்புத்துறைக்கு அடிக்கடி சென்று அங்கு இன்றும் ஓங்கி வளர்ந்திருக்கும் இலுப்பை மரம் ஒன்றின் அடியில் அமர்ந் திருப்பார். நாளடைவில் அயலிலே குடிசை ஒன்று அமைத்து, அங்கே வாழ்ந்து வந்தார். இவரின் பெருமைகளைக் கேள்விப் பட்ட மக்கள் இவரிடஞ் செல்லத் தலைப்பட்டனர். தஞ்சமென வந்தவர்களுக்கு இவர் உய்யும் நெறிகளை வகுத்தளித்தார்.

யோகர் தம் அன்பர்களுக்குக் கவிதையிலும் உரையிலும் கூறிய உபதேசங்கள் ''நற்சிந்தனை'' எனப்படும். இது பல்வகைச் சுவைகள் கொண்டு மிளிர்கின்றன. யோகர் சுவாமிகள் தாம் செல்லப்பாச் சுவாமியைச் சந்தித்தமையையும் அப்போது தமக்கு ஏற்பட்ட ஆன்ம அனுபவங்களையுங் கூறும் செய்யுள்கள் நற்சிந்தனையிலே சிறந்த பகுதிகளாகும். தம் அடியார்களின் நன்மைக்காக அவர் ''சிவதொண்டன்'' என்ற மாத இதழைத் தொடங்கியதோடு அமையாது, ''சிவதொண்டன் நிலையங்களை'' யாழ்ப்பாணத்திலும் செங்கலடியிலும் நிறுவினர்.

சிவதொண்டன் நிலையங்கள், அடியார் தம் ஆன்ம ஈடேற்றத்திற்காகச் சுவாமிகள் வகுத்த நெறி வழியே இயங்கி வருகின்றன. ஒவ்வொரு நிலையத்திலுமுள்ள தியான மண்டபத்தில் எழுந்தருளப்பெற்ற திருவடிக்குத் தினமும் பூசனை மௌனமாக நடைபெற்று வருகின்றது.

ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக மக்கள் இம்மை, மறுமை இன்பங்களைப் பெறும்பொருட்டு வேண்டியவற்றைப் போதித்துப் பல்லாயிரக்கணக்கானவர்களைச் சுவாமிகள் நல்வழிப் படுத்தினர். இவ்வாறு சமயப் பணியும் சமூகப் பணியும் புரிந்த யோகர் சுவாமிகள் 1964 ஆம் ஆண்டு பங்குனி மாதம் 23 ஆம் திகதி ஆயிலிய நாளன்று சிவனடி சேர்ந்தார். அன்று முதல் ஒவ்வொரு மாதமும் ஆயிலிய நாளன்று நல்லூர்த் தேரடியிற் சிவதொண்டன் சபையார் மாகேசுர பூசை செய்து வருகின்றனர்.

தோன்றாத் துணையை என்றுந் துதிப்போம்
தூய திருப்பதத்தைப் பதிப்போம்
ஈன்றாளையும் அப்பனையும் மதிப்போம்
எல்லாம் சிவன்செயல் என்றிருப்போம்
ஆன்றோர் விதிப்படி நடப்போம்
அந்திசந்தி மந்திரத்தைப் படிப்போம்
நான்தான் எனும் இரண்டும் தடுப்போம்
நாதன் அடியிணைக்கீழ்க் கிடப்போம்
வஞ்சம் பொறாமை நெஞ்சில் வையோம்
சஞ்சலத்தால் மிஞ்சி நாங்கள் நையோம்
கொஞ்சம் கொஞ்சமாய் மனத்தை வெல்வோம்
கூடாத கூட்டத்தில் நாங்கள் சேரோம்.

—நற்சிந்தனை—

# 16. சம்பந்தர் தேவாரம்

## 1. கோயில்

இறைவன் எழுந்தருளியிருக்கும் இடமெல்லாம் கோயிலாக விளங்கினும் சிதம்பரத் தலமே கோயில் என்று சிறப்பித்துச் சொல்லப்படுகிறது. திருஞானசம்பந்தப் பிள்ளையார் சிதம்பரத்தின் எல்லையை அடைந்தார். அப்போது தில்லை மூவாயிரவர் எனச் சிறப்பிக்கப்படும் அந்தணர்களும் ஏனைய அடியார்களும் அவரை எதிர்கொண்டு வரவேற்றனர். நன்கு அலங்கரிக்கப்பட்ட வீதி வழியே எழுந்தருளிய பிள்ளையார், கோபுரத்தைப் பணிந்தெழுந்து திருவீதி வலம் வந்து கோயிலினுட் சென்ருர்; அங்கே அனவரதமும் ஆனந்தத் திருக்கூத்தாடும் அம்பலத்தரசைக் கும்பிட்டெழுந்தார்; மகிழ்ச்சி பொங்கப் பதிகம் பாடியருளினர். அப்பதிகத்தில் முதலாவது பாட்டுக் கீழே தரப்பட்டுள்ளது.

**கோயில்** **பண்—குறிஞ்சி**

திருச்சிற்றம்பலம்

கற்ருங் கெரியோம்பிக் கலியை வாராமே
செற்ருர் வாழ்தில்லைச் சிற்றம் பலமேய
முற்ரு வேண்டிங்கண் முதல்வன் பாதமே
பற்ரு நின்ருரைப் பற்ரு பாவமே.

திருச்சிற்றம்பலம்

இப்பாடல் தில்லை சிற்றம்பலநாதனின் திருவடியே பற்றுக்கோடாகக் கொண்டவர்களைப் பாவங்கள் பற்ரு என்கின்றது.

வேதாகமங்கள் வகுத்தபடி தீ வளர்த்து, வேள்விகளைச் செய்து, நாட்டிலே வறுமை வராதபடி காக்கின்ற அந்தணர்கள் வாழ்கின்ற தில்லைச் சிற்றம்பலத்தின் கண்ணே எழுந்தருளியவரும், இளம்பிறையைத் தம்முடைய சடையிலே தாங்கியவரும்,

எல்லா உலகங்கட்கும் முதல்வருமாகிய சிவபெருமானது தூக்கிய திருவடியைப் பற்றிக் கொண்டவர்களைப் பாவங்கள் பற்றிவருத்தா.

இப்பாடலில் ஊழிமுதல்வர்க்கு உரிமைத் தொழில் புரியும் தில்லைவாழந்தணர்கள் ''எரி ஓம்பிக் கலியை வாராமே செற்றார்'' என்று சிறப்பிக்கப்பட்டுள்ளனர்.

கற்றாங்கு எரி ஓம்பி – வேதம் ஆகமம் முதலிய நூல்களைக் கற்று, அவைகளிற் சொல்லியபடி வேள்விகளைச் செய்து; கலி துன்பம், வறுமை, கேடு; செற்றார் – ஒழித்தவர்.

## 2. திருக்கோணமலை

நாளும் இன்னிசையினாலே தமிழ் வளர்த்தவராகிய திருஞானசம்பந்த சுவாமிகள், தென்பாண்டி நாட்டிலேயுள்ள பல தலங்களையுந் தரிசித்துப் பாமாலை பாடி, இராமேச்சரத்துக்கு எழுந்தருளினார்; அங்கே கோயில்கொண்ட இறைவனைப் பாடிய பின்பு ஈழ நாட்டின்கண்ணுள்ள திருக்கோணமலையிற் கோயில் கொண்டு எழுந்தருளி உள்ள கோணேச்சரரை உள்ளத்திலே நினைந்து உருகினார்; அத்தலத்தின் பெருமையை அகக்கண்ணாற் கண்டு இராமேச்சரத்தில் இருந்தவாறே இப்பதிகத்தைப் பாடியருளினார். இப்பதிகப் பாடல்கள் அவருடைய ஏனைய பாடல்களைப் போலவே இயற்கை வருணனையும், பத்திச் சுவையும் நிறைந்து விளங்குகின்றன. அவற்றுள் ஒன்றினை இங்கே தருகின்றோம்.

**திருக்கோணமலை** **பண்—புறநீர்மை**

திருச்சிற்றம்பலம்

கடிதென வந்த கரிதனை யுரித்து
அவ்வுரி மேனிமேற் போர்ப்பர்
பிடியன நடையாள் பெய்வளை மடந்தை
பிறைநுத லவளொடு முடனாய்க்
கொடிதெனக் கதறுங் குரைகடல் சூழ்ந்து
கொள்ளமுன் நித்திலஞ் சுமந்து
குடிதனை நெருங்கிப் பெருக்கமாய்த் தோன்றும்
கோணமா மலையமர்ந் தாரே.

திருச்சிற்றம்பலம்

இப்பாடல் இறைவனுடைய அளவிறந்த கருணையைப் புகழ்ந்து கூறுகிறது; திருக்கோணமலையின் சிறப்பையும் விவரிக்கின்றது.

தம்மை நோக்கி மிக வேகமாக யானை வடிவங்கொண்டு வந்த கயாசுரனைக் கொன்று, அவன் தோலைத் தம் திருமேனியிலே ஆடையாகப் போர்த்த சிவபெருமான், பெண் யானை போன்ற நடையினை உடையவரும், வளையல்களை அணிந்தவரும், பிறை போன்ற அழகிய நெற்றியை உடையவருமாகிய மாதுமையாளுடன் கண்டோர் கொடிது என்று கூறும்படி அச்சத்தைத் தருகின்ற இரைச்சல் பொருந்தி, மக்கள் எளிதிலே பெறக்கூடியதாகத் தன் அலைக் கரங்களால் முத்துக்களைக் கொணர்ந்து பரவி, அங்கே வாழ்கின்ற குடியிடங்களை அணுகிப் பெருக்கெடுத்து ஓடும் கடலின் கரையிலே உள்ள திருக்கோணமலை என்னும் திவ்விய தலத்திலே எழுந்தருளியுள்ளார்.

கடிது-விரைவாக; கரி-யானை (கயாசுரன்); உரி-தோல்; பிடி-பெண்யானை; மடந்தை-பெண் (இங்கே மாதுமையாள்); நித்திலம்-முத்து; பெருக்கமாய்-பெருகி.

## யானையுரி போர்த்த வரலாறு

முன்னொரு காலத்திலே கயாசுரன் (கய அசுரன்; கயம் யானை) என்னொரு அசுரன் இருந்தான். அவன் பிரம தேவரை நோக்கிப் பெருந்தவம் செய்து வரங்கள் பலவற்றைப் பெற்றான். பின் தேவர்களைக் கொடுந் துன்பங்களுக்கு உள்ளாக்கினான். அவற்றுக்காற்றாத தேவர்கள் சிவபெருமானிடம் முறையிட, அவர் பல ஆயிரங் கோடி சூரிய ஒளியோடு கூடிய திருமேனியைத் தாங்கிக் கயாசுரனைக் கொன்றழித்தார். இறைவனுடைய பேரொளியைக் கண்டு தேவர்கள் தங்கள் கண்ணொளி மங்கித் துன்புறுவதைக் கண்ட சிவபெருமான் அக்கயாசுரனின் தோலை உரித்துத் தமது திருமேனிப் பேரொளியை மறைத்துத் தேவர்களுக்கு அருள் புரிந்தார்.

## 3. திருக்கழுமலம்

பாலறாவாயராகிய திருஞானசம்பந்தப் பிள்ளையார் மதுரையிலே பாண்டியனைச் சமண சமயத்தினின்றும் மீட்டருளித் திருநீற்றின் பெருமையை விளக்கி எழுந்தருளினார். அப்போது சீர்காழியிலே தந்தையாராகிய சிவபாதவிருதயர் பிள்ளையாருடைய பிரிவுக்கு ஆற்றாது வருந்தி மதுரையை அடைந்து

பிள்ளையாரோடு அளவளாவினர்கள். ஆளுடைய பிள்ளையார் அவரைக் கண்டபோதே திருத்தோணியப்பரதும், பெரியநாயகியாரதும் திருவடிகளைச் சிந்தித்து ''எனை அறியாப் பருவத்தே எடுத்தாட்கொண்ட பெருந்தகை எம்பெருமாட்டியுடன் இருந்ததே'' என்று பதிகம் பாடியருளினர். அப்பதிகத்தின் முதலாவது பாடலை இங்கே படிப்போம்.

**திருக்கழுமலம்** **மண்—கொல்லி**

திருச்சிற்றம்பலம்

மண்ணினல் லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணினல் லகதிக்கு யாதுமோர் குறைவிலைக்
கண்ணினல் லஃதுறுங் கழுமல வளநகர்ப்
பெண்ணினல் லாளொடும் பெருந்தகை யிருந்ததே.

திருச்சிற்றம்பலம்

இப்பாடல் திருக்கழுமலமாகிய சீர்காழியிலே திருத்தோணியப்பர் பெண்ணின் நல்லவளாகிய பெரியநாயகி அம்மையாரோடு எழுந்தருளியிருப்பதால் மக்கள் எப்போதும் இப்பூமியில் நல்ல வண்ணம் வாழலாம்; மறுமையிலே வீட்டின்பத்தையும் பெறலாம் என்கின்றது.

எங்கே பார்த்தாலும் கண்ணில் நல்ல காட்சியே படும் கழுமலம் என்கின்ற செழிப்பு மிக்க நகரின் கண்ணே, பெருந்தகையாளராகிய திருத்தோணியப்பர், பெண்களுள் நல்லாளாகிய உமாதேவியாருடன் இருக்கின்றார். மக்கள், அப்பெருந்தகைமையை உடைய இறைவனை வணங்கினல் அன்னார்க்கு இப்பூவுலகில் யாவரும் போற்ற வாழும் வாழ்வு உண்டாகும். ஆராய்ந்து பார்த்தால், மறுமையிலும் நல்ல கதிக்குச் சிறிதளவேனும் குறைவு உண்டாகாது.

மண்-பூமி; வைகலும்-நாடோறும், எப்போதும்; நல்லகதி-வீடுபேறு; நல்லஃது-நல்லது; கழுமலம்-சீர்காழி; பெண்ணின் நல்லாள்-பெரியநாயகியின் ஒரு திருப்பெயர்; தமக்குத் திருமுலைப்பால் ஊட்டியமையால் இங்ஙனம் கூறினர். யாதும்-சிறிதும்; நல்லவண்ணம் வாழ்வது-இடையூறின்றி இன்ப வாழ்வு பெறுவது.

# 17. அப்பர் தேவாரம்

## 1. திருப்பாதிரிப்புலியூர்

சமணர் கேட்டுக்கொண்டவாறு பல்லவ அரசன் திருநாவுக்கரசரைக் கல்லுடன் கட்டிக் கடலிலே இடும்படி கட்டளையிட்டான். அரசனின் ஆணைப்படி அலையிடை விடப்பட்ட நாவுக்கரசர் ''சொற்றுணை வேதியன்'' என்னும் தொடக்கத்துத் திருப்பதிகம் படி அஞ்செழுத்தைப் போற்றினர். கடலிற் கல் மிதந்தது. மிதந்த அப்பெருங் கல்லே தெப்பமாயிற்று. அது திருப்பாதிரிப்புலியூரை வந்தடைந்தது. அப்போது அடியவர் பலர் வந்துகூடி ''அரகர'' என ஆர்த்தெழுந்தனர். தொழுத கையராகிய ஆளுடைய அரசர் திங்கட் சடையானைக் கும்பிட்டு, அன்புற விழுந்து பணிந்து எழுந்து திருப்பதிகம் பாடினர். அதிலே முதலாவது பாடல் கீழே தரப்பட்டுள்ளது.

**திருப்பாதிரிப்புலியூர்** **திருவிருத்தம்**

திருச்சிற்றம்பலம்

ஈன்றாளு மாயெனக் கெந்தையு மாயுடன் றோன்றினராய்
மூன்றா யுலகம் படைத்துகந் தான்மனத் துள்ளிருக்க
ஏன்றா னிமையவர்க் கன்பன் றிருப்பா திரிப்புலியூர்த்
தோன்றாத் துணையா யிருந்தனன் றன்னடி யோங்களுக்கே.

திருச்சிற்றம்பலம்

இப்பாடல், திருப்பாதிரிப்புலியூரில் எழுந்தருளியிருக்கும் இறைவன், தம் அடியவர்களுக்குத் தோன்றாத் துணையாகியிருந்தனன் என்கின்றது. விண், மண், பாதலம் ஆகிய மூன்று உலகங்களையும் படைத்து மகிழ்ந்தவனும், என் மனத்துள் இருக்க ஏற்றுக் கொண்டவனும், இமையவர்க்கு அன்பனுமாகிய இறைவன், இப்பிறப்பிலே எனக்கு ஈன்றாளுமாய், எந்தையுமாய், உடன்தோன்றினருமாய் அருளியதேயன்றி, இன்று திருப் பாதிரிப்புலியூரிலே தம் அடியோமாகிய எமக்குத் தோன்றாமலே துணையாயிருந்து (கல்லே தோணியாக மிதக்கச்) செய்தான்.

திருப்பாதிரிப்புலியூர்-நடு நாட்டிலுள்ள ஒரு சிவத்தலம். ஈன்றாள்-தாய் (மாதினியார்); எந்தை-எந் தந்தை (புகழனார்); உடன் தோன்றினர்-உடன் பிறந்தவர் (திலகவதியார்); உலகம்-உலகப்பற்று; ஏன்றான்-ஏற்றுக் கொண்டான்; இமையவர்-தேவர்; அடியோங்கள் - தம்மையும் அங்கிருந்த அடியாரையும்.

இப்பதிகத்தினைப் பாடிவருவோர்க்குத் துன்பம் நீங்கும்; இன்பம் ஓங்கும்.

## 2. திருநல்லம்

திருநாவுக்கரசர் திருப்பழையாறையிலுள்ள வடதளி என்னும் ஆலயத்தை வணங்கிக் காவிரியின் இரு கரையிலுமுள்ள சிவத்தலங்களுக்குச் சென்று, சுவாமி தரிசனஞ் செய்து பாடினார். பின் திருவானைக்கா செல்லும் வழியில், திருநல்லம் சென்று பாடியருளிய திருப்பதிகத்தில் உள்ளது இப்பாசுரம் (தேவாரம்).

**திருநல்லம்** **திருக்குறுந்தொகை**

திருச்சிற்றம்பலம்

அல்ல லாகஐம் பூதங்க ளாட்டினும்
வல்ல வாறு சிவாய நமவென்று
நல்லம் மேவிய நாத னடிதொழ
வெல்ல வந்த வினைப்பகை வீடுமே.

திருச்சிற்றம்பலம்

திருநல்லம் என்னும் திருப்பதியிலுள்ள இறைவனைத் திருவைந்தெழுத்து ஓதி வழிபட்டால் பகைகெடும் என்கின்றது இத்திருப்பாடல்.

ஐம்பெரும் பூதங்கள் என்பனவற்றால் துன்பங்கள் உண்டாகி நாம் வருந்தினாலும், திருநல்லத்தில் எழுந்தருளியுள்ள (மங்களநாயகி உடனுறையும்) உமாமகேசுவரரின் திருவடிகளைச் "சிவாய நம" என்னுந் திருவைந்தெழுத்தை இயன்ற அளவு ஓதி வணங்கினால், நம்மை வெல்லுதற்கு வந்த வினைகளாகிய பகை கெடும்.

திருநல்லம் – சோழ நாட்டின்கண் உள்ள ஒரு திருப்பதி.

அல்லலாக-துன்பங்கள் உண்டாக; வல்லவாறு-இயன்ற வளவு; வீடும்-அழியும்; ஐம்பூதங்கள்-நிலம், நீர், தீ, வளி, வான்.

## 3. திருவாவடுதுறை

உழவாரப் படையாளியும், தாண்டக வேந்தருமாகிய அப்பர், திருக்கோடிக்காவிலிருந்து திருவாவடுதுறை என்னும் திருத்தலத்தை அடைந்து, அங்கே எழுந்தருளியிருக்கும் இறைவனுகிய செம்பொற்றியாகேசரைத் தொழுது பல திருப்பதிகங்கள் பாடியருளினர். அவற்றுள் ஒன்றின் முதலாவது பாடலை இங்கே படிப்போம்.

**திருவாவடுதுறை** **திருத்தாண்டகம்**

திருச்சிற்றம்பலம்

திருவேயென் செல்வமே தேனே வானோர்
செழுஞ்சுடரே செழுஞ்சுடர்நற் சோதிமிக்க
உருவேயென் னுறவேயென் னூனே ஊனின்
உள்ளமே உள்ளத்தி னுள்ளே நின்ற
கருவேயென் கற்பகமே கண்ணே கண்ணிற்
கருமணியே மணியாடு பாவாய் காவாய்
அருவாய வல்வினைநோய் அடையா வண்ணம்
ஆவடுதண் டுறையுறையும் அமர ரேறே.

திருச்சிற்றம்பலம்

நாவுக்கரசர் இறைவன்பால் தாம் கொண்ட பத்தியும், ஆராமையும் காரணமாக அவனைப் பலபடப் போற்றி, அடைக்கலமாக அடைந்து, அபயம் வேண்டியருளியது இத்திருப்பாடல்.

திருவே, என் செல்வமே, தேனே, வானோர் செழுஞ்சுடரே, செழுஞ்சுடர் நற்சோதிமிக்க உருவே, என் உறவே, என் ஊனே, ஊனின் உள்ளமே, உள்ளத்தின் உள்ளே நின்ற கருவே, என் கற்பகமே, (என்) கண்ணே, கண்ணின் கருமணியே, மணி ஆடு பாவாய், ஆவடுதுறையில் உறையும் அமரர் ஏறே, அருவாய வல்வினை நோய் (என்னை) அடையாவண்ணம் காவாய் (காத்தருளாய்).

திரு-நல்லூழ்; செல்வம்-உலக இன்பங்கள் எல்லாவற்றையும் தருவது; தேன்-தித்திக்கும் பொருள்; சுடர்-விளக்கு; உறவு-சொந்தம்; ஊன்-உடல்; ஊனின் உள்ளம்-உடலினுள்ளேயுள்ள

சித்தம்; உள்ளத்தின் உள்ளே நின்ற கரு-சித்தத்துள் நின்று உணர்வைத் தோற்றுவித்து நின்ற வித்து; கற்பகம்-தேவ உலக விருட்சம்; பாவை- கண்ணின் மணியினுள்ளே இருக்கும் ஓர் உருவம்; அருவாய வல்வினை நோய்-உருவாய உடலிலே அருவாய் (மறைந்து) நின்று வருத்தும் கொடிய வினையின் பயனாகிய வருத்தம்; அமரர் ஏறு-தேவர் தம் கடவுளாகிய (இறைவன்).

# 18. சுந்தரர் தேவாரம்

## 1. திருப்பாண்டிக்கொடுமுடி

சுந்தரமூர்த்திநாயனர் பல தலங்களை வணங்கிக்கொண்டு, காவிரியாற்றின் தென்னகரையிற் கறையூரிலுள்ள திருப்பாண்டிக் கொடுமுடி என்னுந் திருக்கோவிலை வந்தடைந்தார்; அங்கே பண்மொழியம்மையாரோடு எழுந்தருளியிருக்கும் கொடுமுடிநாதரை வீழ்ந்து வணங்கியெழுந்தார். ''இவர் தம்மை மறக்கவொண்ணுது'' என்று நினைந்து திருவைந்தெழுத்தை அமைத்துத் திருப்பதிகம் பாடினர். ஒவ்வொரு திருப்பாடலின் இறுதியிலும், ''சொல்லும் நா நமச்சிவாயவே'' என்று அருளியிருப்பதால், இதற்கு ''நமச்சிவாயத் திருப்பதிகம்'' என்னும் பெயர் உண்டாயிற்று. இப்பதிகத்தின் முதற் பாடலை இங்கே படிப்போம்.

**திருப்பாண்டிக்கொடுமுடி** **பண் — பழம்பஞ்சுரம்**

## நமச்சிவாயத் திருப்பதிகம்

திருச்சிற்றம்பலம்

மற்றுப் பற்றெனக் கின்றி நின்திருப்
பாத மேமனம் பாவித்தேன்
பெற்ற லும்பிறந் தேன்இ னிப்பிற
வாத தன்மைவந் தெய்தினேன்
கற்ற வர்தொழு தேத்துஞ் சீர்க்கறை
யூரிற் பாண்டிக் கொடுமுடி
நற்ற வாஉனை நான்ம றக்கினுஞ்
சொல்லுநா நமச்சி வாயவே.

திருச்சிற்றம்பலம்

இத்திருப்பாடல், கொடுமுடிக் கோயிலிலுள்ள பெருமானது அழகிய திருமேனியைக் கண்டு கனிந்து எழுந்த பேரன்பால், ''உன்னையான் மறவேன்; நான் மறந்தாலும், என் நா உன் திருநாமமாகிய நமச்சிவாய என்னும் பஞ்சாக்கரத்தைச் சொல்ல மறவாது'' என்கின்றது.

கற்றவர்கள் தொழுது போற்றுகின்ற சிறப்புக்களையுடையது கறையூர்; அங்கு உள்ள ''திருப்பாண்டிக் கொடுமுடி'' என்னும் கோயிலில் எழுந்தருளியிருக்கின்ற நல்ல தவ வடிவினனே, எனக்கு இவ்வுலகத்திலே வேறு பற்று இல்லாமல் உனது திருவடியையே பற்றாக மனத்திற் கொண்டேன். இப்பேற்றை இப்பிறவியிற் பெற்ற யான், மீண்டும் இறந்து பிறவாத நிலையை எய்தப் பெற்றேன்; சிலவேளை அடியேனாகிய நான் உன்னை மறந்தாலும், என்னுடைய நாவானது உனது திருநாமமாகிய நமச்சிவாய என்பதை இடைவிடாது சொல்லும்.

கறையூர் என்பது தலத்தின் பெயர்; பாண்டிக்கொடுமுடி- திருக்கோயிலின் பெயர்; பற்று-துணை; சீர்-சிறப்பு; நற்றவா- நல்ல தவ வடிவம் உடையவனே (உருத்திரனது திருவடிவம்).

## 2. திருக்கோளிலி

சுந்தரமூர்த்தி நாயனார் பரவையாருடன் திருவாரூர் மாளிகையில் வாழ்ந்து வந்தார். அவர்களின் இல்வாழ்க்கைக்கு வேண்டிய நெல் முதலியவற்றைக் குண்டையூர்க் கிழார் என்னுஞ் செல்வர் தினமும் அனுப்பி வந்தார். இவ்வாறு செய்துவருங் காலத்தில் மழை வளஞ் சுருங்கியது. எனவே, சுந்தரருக்கு அனுப்புவதற்கு அச்செல்வரிடம் போதிய நெல் இருக்கவில்லை. அப்பொழுது அச்செல்வர் இறைவனை வேண்டியதனாற் குண்டையூர் முழுவதும் நெல்மலையாகக் குவிந்தது. இதனை மனிதரால் எடுத்துச் செல்ல முடியாது. எனவே, அவர் சுந்தரரிடஞ் சென்று இச்செய்தியை அறிவித்தார். சுந்தரர் குண்டையூருக்கு அருகில் இருந்த திருக்கோளிலி என்னுந் தலத்துக்குச் சென்று பதிகம் பாடினார். அதில் முதலாவது பாட்டுக் கீழே தரப்பட்டுள்ளது.

**திருக்கோளிலி** **பண்—நாட்டராகம்**

திருச்சிற்றம்பலம்

நீள நினைந்தடியேன் உமை நித்தலுங் கைதொழுவேன்
வாளன கண்மடவாள் அவள் வாடி வருந்தாமே
கோளிலி எம்பெருமான் குண்டையூர்ச்சில நெல்லுப்பெற்றேன்
ஆளிலை எம்பெருமான் அவை அட்டித் தரப்பணியே.

திருச்சிற்றம்பலம்

இப்பாடல், குண்டையூரிற் சுந்தரர் தாம் பெற்ற நெல்லைத் திருவாரூருக்குக் கொண்டு செல்ல ஆளில்லை என்பதனுல், அதனைத் திருவாரூரிலே கொண்டு போய்த் தர அருள வேண்டு மென்று அவர் இறைவனை வேண்டுதலைக் கூறுகின்றது.

திருக்கோளிலியில் வீற்றிருக்கும் எம்பெருமானே, உன்னை அடியேன் என்றும் மறவாத சிந்தையனுய், எப்பொழு துங் கைதொழுது வணங்கி வருகின்றேன். இப்பொழுது என் மனைவியாரான பரவையாரின் தேவைக்கு நெல் இல்லை. பசியால் அவர் வாடி வருந்தாமல் இருப்பதற்காக எனக்குக் குண்டையூரில் நெல் கிடைத்தது. அதனைத் திருவாரூருக்கு எடுத்துச் செல்ல ஆள் இல்லை. அதனை அங்குக் கொண்டு வந்து தர நீ அருள் செய்வாயாக.

நீள நினைத்தல் - இடையறுது நினைத்தல், அதாவது தியானித்தல்; வாளன கண் - வாள் போன்ற கூரிய கண்; மடவாள் - பெண்; அட்டித் தருதல் - கொண்டுவந்து சேர்த்தல்.

## 3. திருவாரூர்

சுந்தரமூர்த்தி நாயனுர் திருவொற்றியூரின் எல்லையைத் தாண்டியவுடனே கண் இரண்டும் மறைந்தன. எனவே, அவர் இறைவனிடம் முறையிட்டுப் பதிகம் பாடினுர்; திருவேகம்பத்தில் இடக்கண்ணைப் பெற்றுர்; பின் பல தலங்களையும் தரிசித்துக் கொண்டு திருவாரூரை அடைந்தார். அங்கே பூங்கோயிலினுள்ளே சென்று, பூமியில் வீழ்ந்து எழுந்து வணங்கி, கோயிலினுட் சென்று தியாகேசப் பெருமானை ''மற்றைக் கண் தாரீர்'' எனப் பாடினுர். இறைவனுக்கும் சுந்தரருக்கும் இடையே உள்ள தோழமைச் சிறப்பைக் காட்டுவது இத்திருப்பதிகம். இத்திருப்பதிகத்தின் முதலாவது பாடலை இங்கே படிப்போம்.

**திருவாரூர்** — **பண் — செந்துருத்தி**

திருச்சிற்றம்பலம்

மீளா அடிமை உமக்கே ஆளாய்ப்
பிறரை வேண்டாதே
மூளாத் தீப்போல் உள்ளே கனன்று
முகத்தால் மிகவாடி
ஆளாய் இருக்கும் அடியார் தங்கள்
அல்லல் சொன்னக்கால்
வாளாங் கிருப்பீர் திருவா ரூரீர்
வாழ்ந்து போதிரே.

திருச்சிற்றம்பலம்

அடியார்களது அடிமைத் தன்மையை உணர்ந்து அவர்களது துன்பம் நீங்க அவர்களுக்கு அருள் செய்ய வேண்டும் என்று சுந்தரர் இறைவனை வேண்டுவதைக் காட்டுகிறது இத் திருப்பாடல்.

திருவாரூர் இறைவா, நீங்காத அடிமைத் தொண்டு செய்து என்றும் உமக்கே ஆட்பட்டு நிற்கும் அடியார்கள் பிறரிடம் எதையும் வேண்டமாட்டார்கள். துன்பம் நேரும்பொழுது மூண்டு எரியாது உள்ளே வெந்துகொண்டிருக்கிற நெருப்பைப் போல, மனத்தால் வருந்தி முகம் வாடி நிற்பார்கள். அவர்கள் தம் துன்பத்தை உம்மிடம் வாய் திறந்து சொல்லும்பொழுது நீர் பேசாதிருக்கின்றீர். இது உமது தன்மையாகில் நீர் இனிது வாழ்வீராக!

''உதவி செய்தால் உமக்கென்ன குறைந்து போய்விடும்'' என்ற நண்பரின் முறையீடு இது. இறைவனுடைய தோழமை பெற்றவராகையினால் இவ்வளவு உரிமையோடு அவர் கேட்கின்றார்.

# 19. திருவாசகம்

## மாணிக்கவாசகர்

## 1. திருச்சதகம்

மணிவாசகர் அருளிச் செய்த திருவாசகத்திலே "திருச்சதகம்" என்ருெரு பகுதி இருக்கின்றது. அது பத்துப் பிரிவுகளைக் கொண்டது. அவற்றுள் இங்கே வரும் பாடல், முக்கரணங்களால் இறைவனை வழிபட்ட மணிவாசகருக்கு, இறைவன் தன்னைக் கொடுத்தருளிய திறத்தை விளக்குகின்றது.

திருச்சிற்றம்பலம்

சிந்தனைநின் றனக்காக்கி நாயினேன்றன்
கண்ணிணைநின் திருப்பாதப் போதுக்காக்கி
வந்தனையும் அம்மலர்க்கே யாக்கிவாக்குன்
மணிவார்த்தைக் காக்கிஐம் புலன்கள்ஆர
வந்தனையாட் கொண்டுள்ளே புகுந்தவிச்சை
மாலமுதப் பெருங்கடலே மலையேஉன்னைத்
தந்தனைசெந் தாமரைக்கா டனையமேனித்
தனிச்சுடரே இரண்டுமிலித் தனியனேற்கே.

திருச்சிற்றம்பலம்

அடியேனுடைய சிந்தனையெல்லாம் நின் திருவுருவுக்காக்கினுய். நாய் போன்ற எளியேனுடைய இரு கண்களையும் நின் திருவடித்தாமரைக்கே உரிமையாகக் கொண்டாய். வணங்கல் தொழுதலாகிய வந்தனையையும் அத்திருவடிக்கே ஏற்றுக் கொண்டாய். எனது நாவினையும் பொருள் சேர்ந்த உன் புகழைப் பாடுதற்கேயாக்கினுய். ஐம்புலன்களும் இன்புறும் வண்ணம் வந்து ஆட்கொண்டு அடியேனது உள்ளம் புகுந்த வியத்தகு அமுதப் பெருங்கடலே! மலையே, சிவந்த தாமரைக் காட்டினை ஒத்த அழகிய திருமேனியையுடைய ஒப்பற்ற சுடரே, இரண்டும் கெட்ட தனியேனுக்கு உன்னைத் தந்துகொண்டாய்.

விச்சை-வித்தை, வியத்தகு செயல்.

இரண்டுமிலித் தனியனேன்-முற்றுணர்வாகிய பதியின் தன்மையும் அறிவே இல்லாத மும்மலங்களின் தன்மையும் ஆகிய இரண்டியல்பும் இல்லாது சார்ந்ததன் தன்மையும் வாய்ந்து தனித்து நிற்கும் அடியேன்; தனிச்சுடர்-ஒப்பற்ற ஒளி; தனியன்-பற்றுக்கோடு இல்லாதவன்.

## 2. பிடித்த பத்து

இறைவனைச் சிக்கெனப் பிடித்தமையைக் கூறும் பத்துப் பாடல்களைக் கொண்டமையாற் பிடித்த பத்து எனலாயிற்று. இறைவனை விடாது பற்றி நிற்றலே முத்திப்பேறு. இது சீர்காழி என்னும் தோணிபுரத்தில் அருளிச்செய்யப்பட்டது. ''திருவாசகத்துக்கு உருகாதார் ஒருவாசகத்துக்கும் உருகார்'' என்பதற்கு இப்பிடித்தபத்து ஓர் எடுத்துக்காட்டாகும்.

படிக்கும் எவரது உள்ளத்தையும் உருக்கும் தன்மை பொருந்திய மணிவாசகரின் திருவாசகத்தில் விளங்கும் மணிகளுள்ளே ஒரு சிறந்த மணியாகும் இத்திருப்பாடல்.

திருச்சிற்றம்பலம்

பால்நினைந் தூட்டுந் தாயினும் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவபெரு மானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

திருச்சிற்றம்பலம்

''என் செல்வமே, சிவபெருமானே, யான் உன்னை இறுகப் பிடித்துக்கொண்டேன். இனி எங்ஙனம் என்னைவிட்டு நீங்குவை'' என்கின்றது இத்திருப்பாடல்.

தன் குழந்தையின் பசி வேளையினை அறிந்து பால் ஊட்டுகின்ற தாயினைப் பார்க்கினும் மிகவும் என் மீது இரங்கி, தீவினையேனுடைய உடல் பற்று நீங்குமாறு அதனை உருகுவித்து, உள்ளத்தின் கண்ணே அறிவாகிய ஒளியை வளர்த்து, என்றும்

வற்றுதல் இல்லாத பேரின்பமாகிய தேனினைப் பொழிந்து இடந்தோறும் என்னுடன் திரிந்த செல்வப்பொருளே, சிவபெருமானே, யான் உனனை விடாது இறுகப் பற்றிக்கொண்டேன்; ஆதலால் இனி என்னை விட்டு எங்கு எழுந்தருளிச் செல்வது?

நினைந்து ஊட்டுதல்-பச்சிளங் குழவிக்குத் தாய் காலமறிந்து தானே ஊட்டுதல்; ஊன்-உடம்பு; ஊனினை உருக்கி-உள்ளமேயன்றி உடலும் அன்பினால் உருகப்பண்ணி; உள்ளொளி-ஒளியினுள் ஒளி; ஒளி- உயிரினது அறிவு; அதனுள் ஒளியாய் நிற்பது-சிவம்; உலப்பு-அழிவு, வற்றுதல்; தொடர்ந்து-முயன்று சிந்தித்துத் தெளிந்து; சிக்கென-உறுதியாக.

# 20. திருவிசைப்பா

திருவிசைப்பா (திரு இசை பா) என்பது தெய்வத் தன்மை பொருந்திய இசையுடன் பாடப்படும் பாடல் என்றும் இறைவனின் பொருள்சேர் புகழினைச் சொல்லும் பாடல் என்றும் பொருள்படும். தூய உள்ளமுடைய மெய்யடியார்கள் சிவபெருமான்மீது கொண்ட பத்தியினால் உள்ளங் கசிந்துருகப் பாடிய தோத்திரங்களே தேவாரம், திருவாசகம் முதலியவையாகும். இவை பன்னிரு திருமுறைகளாக வகுக்கப்பட்டுள்ளன. இவற்றுள் ஒன்பதாவதாக (ஒன்பதாந் திருமுறையாக) விளங்குவதே திருவிசைப்பாவும் திருப்பல்லாண்டும் ஆகும்.

திருவிசைப்பாவில் 28 திருப்பதிகங்கள் உண்டு. இவற்றைப் பாடியவர்கள் திருமாளிகைத்தேவர் முதலாய ஒன்பதின்மர். இவர்களுள் முதல்வராகத் திகழ்பவர் திருமாளிகைத் தேவர். இவர் துறவுபூண்டு திருவாவடுதுறையிலுள்ள ஓர் அரசின் கீழிருந்து தவம் புரிந்தார்.

இத்திருப்பாடல் அவர் பாடியவற்றுள் சிறந்ததாகும்; அடியார் பலராலும் பத்தியோடு பாடப்படுவது.

**கோயில்** **பண்—பஞ்சமம்**

திருச்சிற்றம்பலம்

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத் தானந்தக் கனியே
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

திருச்சிற்றம்பலம்

கோயில் என்பது சிறப்பாகச் சிதம்பரத் தலத்தைக் குறிக்கும். 'தரிசிக்க முத்தி தருவது சிதம்பரம்' என்று சைவர்கள் இத்தலத்திலே ஆனந்தத் தாண்டவத்தை விரும்பிச் செய்யும் உன்னை, உன் அடியவனாகிய யான் புகழ்ந்துரைக்கும் நெறியைக் கூறு'' என்று முறையிட்டு இறைவனுடைய புகழை விரித்து உரைக்கின்றது இப்பாடல்.

ஒளி மிகுகின்ற விளக்கே, அழிவில்லாத ஒப்பற்ற பொருளே, சுட்டி அறியும் அறிவுக்கு அப்பால் நின்று சிவஞானத்தால் அறிய நின்ற பேரறிவே, ஒளி பொருந்திய பளிங்கின் பேரொளியினையுடைய மாணிக்க மலையே, உள்ளத்தின்கண்ணே தித்திக்கும் தேனே, அன்பு பெருகும் (மெய்யன்பரது) மனத்தின் கண் பேரானந்தத்தை விளைக்கும் கனியே, (சிதம்பரத்திலுள்ள) பொன்னம்பலத்தையே ஆனந்த நடன அரங்கமாகக் கொண்டு, (ஆதியும் அந்தமுமில்லாத) தெய்வீக நடனத்தைச் செய்யும் உன்னை, அடியவனாகிய யான் புகழ்ந்து வியந்து உரைக்குமாறு உரைத்தருள்வாயாக.

உலப்பு-அழிவு; உணர்வு-சுட்டி அறியும் அறிவு; மணி - மாணிக்கம், இறைவன் செம்மை பொருந்திய பேரொளிப் பிழம்பாய் உள்ளான்; ''செந்தாமரைக் காடனைய மேனி'' என்றார் மணிவாசகரும். உண்ணும் பொருள்களிலே தேன் மிக இனிதாக இருப்பதுடன் உடல் நோயைத் தீர்க்கும் மருந்தாகவும் உள்ளது போன்று, இறைவன் உயிர்களின் மலநோயைத் தீர்க்கும் மருந்தாகவும், மலம் நீங்கின உயிர்களுக்கு நுகரும் இன்பப் பொருளாகவும் இருத்தல் பற்றி இறைவன் ''தித்திக்கும் தேன்'' எனப்பட்டார். ஆனந்தக் கனி-இன்பத்தைத் தருகின்ற கனி; அம்பலம்-சிற்றம்பலம்; அரங்கு-மேடை, சபை; தெய்வக் கூத்து-தெய்வத் தன்மை மிக்க ஆனந்தத் தாண்டவம், ஆனந்த நடனம்; விளம்புமா விளம்பே என்ற சொற்றொடர், 'இறைவன் திருவருள் கைகூடினாலன்றி ஆன்மாவிற்கு யாதொரு செயலும் நிகழாது' என்ற சைவ சித்தாந்தக் கருத்தை விளக்குகிறது.

# 21. திருப்பல்லாண்டு

திருப்பல்லாண்டு (திரு பல் ஆண்டு) என்பது பல்லாண்டு கூறி இறைவனை வாழ்த்துதலாகும். அதாவது சிவனடியார்கள் தம் ஆராக் காதலினால் இறைவனைப் ''பல்லாண்டு வாழ்வாயாக'' என வாழ்த்திப் பாவனை செய்து பாடும் திருப்பாடல்கள் ஆகும்.

ஒன்பதாந் திருமுறையின் இரண்டாம் பகுதியாகிய இத் திருப்பல்லாண்டு ஒரே ஒரு பதிகத்தில் 13 பாடல்களைக் கொண் டுள்ளது; சேந்தனார் என்பவராற் சிதம்பரத்திற் பாடப்பட்டது. இவர் திருவிசைப்பாப் பதிகங்கள் மூன்று பாடியுள்ளார்.

திருப்பல்லாண்டு பாடப்பட்ட வரலாறு சுவையானது. முன்னொருகால், தில்லை நடராசப் பெருமான் தம் அன்பராகிய சேந்தனாரின் அன்பின் திறத்தை உலகோர்க்கு விளக்கிக்காட் டத் திருவுளங்கொண்டார். மார்கழித் திருவாதிரைத் திரு விழாவிலே தாம் தேரில் எழுந்தருளும்போது, அத்தேரின் சில்லுகள் பூமியிற் புதையுமாறு செய்தார். இவ்வாறு தேர் அசையாது நின்றதைக் கண்ட அன்பர்கள் அவதியுற்றனர்; அப்போது யாவரும் காணச் சேந்தனார், ''திருப்பல்லாண்டு'' என்ற இத்திருப்பதிகத்தைப் பாடத் தேர் தானே அசைந்து சென்று நிலையினை அடைந்தது என்பது அவ்வரலாறு.

**கோயில்** **பண்–பஞ்சமம்**

திருச்சிற்றம்பலம்

பாலுக்குப் பாலகன் வேண்டி
அழுதிடப் பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றுஅருள்
செய்தவன் மன்னிய தில்லைதன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற
சிற்றம் பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல்
லானுக்கே பல்லாண்டு கூறுதுமே.

திருச்சிற்றம்பலம்

நடராசப் பெருமானுடைய சிறப்புக்களைக் கூறி அவன் ''பல்லாண்டு வாழ்க'' என வாழ்த்துவதாக அமைந்திருக்கின்றது இப்பாடல்.

வியாக்கிரபாதர் என்னும் புலிக்கால் முனிவரின் குழந்தையாகிய உபமன்னியு பசியினுற் பாலை விரும்பி அழுதலும், அவருக்குப் பாற்கடலையே அழைத்து உண்ணக் கொடுத்தருளிய பிரானும், விட்டுணுவுக்குச் சக்கரப் படையைக் கொடுத்தருளிய இறைவனும், வேதங்களை இடைவிடாமல் ஓதி ஒலிக்கும் அந்தணர்கள் வாழ்கின்றதும், என்றும் நிலைபெற்று இருப்பதுமாகிய சிதம்பரத்தின் கண்ணேயுள்ள சிற்றம்பலம் என்னும் பொற்சபையைத் தமக்கு இடமாகக் கொண்டு (அன்பர்களுக்கு) அருள் புரிந்து ஆனந்தத் தாண்டவம் ஆட வல்லவனும் ஆகிய சிவபெருமானைப் புகழ்ந்து ''பல்லாண்டு வாழ்க'' எனக் கூறி நாம் வாழ்த்துவோமாக.

பாலகன்-வியாக்கிரபாத முனிவரின் குழந்தையாகிய உபமன்னியுவைக் குறிக்கின்றது; வேண்டி-விரும்பி; மன்னிய-நிலைபெற்ற; ஆலிக்கும்-ஆரவாரிக்கின்ற; அந்தணர்-சிதம்பரத்திற் பூசனை வழிபாடுகள் செய்யும் (தீட்சிதர்கள் என்னும்) பிராமணர்கள் மூவாயிரவர்; பாவித்து-அருள் புரிந்து; நட்டம்-நடனம்.

## பாற்கடல் ஈந்தது

வியாக்கிரபாத முனிவரின் குழந்தையாகிய உபமன்னியு, தம் மாமனுராகிய வசிட்ட முனிவரின் ஆசிரமத்தில் வாழ்ந்து வந்தகாலை, அவர்தம் ஆசிரமத்தில் இருந்த தெய்வப் பசுவாகிய காமதேனுவின் பாலை உண்டு வளர்ந்து வந்தார். பின்பு குழந்தை தந்தையின் ஆசிரமம் வந்தபோது, காமதேனுவின் சுவைமிக்க பாலை வேண்டி அழுதது. தந்தை தனயனை நோக்கி, ''குழந்தாய், பால் வேண்டின் எம்பெருமானை நோக்கித் தவம் புரிக'' என்முர். அங்ஙனமே குழந்தை தவம் புரிந்தது. குழந்தையின் பேரன்பைக் கண்ட இறைவன் பாற்கடலையே அழைத்து அவர்க்கு உண்ண அளித்தார்.

## மாலுக்குச் சக்கரம் கொடுத்தது

மகா விட்டுணுமூர்த்தி ஒரு முறை ததீசி முனிவருடன் போர் செய்து தம் சக்கரத்தை இழந்தார். அதனுல் மனம் வருந்திய அவர் சிவபெருமான் சலந்தராசுரனைக் கொல்ல உப

யோகித்த சக்கரத்தைப் பெறுவதற்காக அவரை நோக்கிப் பூசை செய்தார். நாள் தோறும் ஆயிரம் செந்தாமரை மலர்களாற் சிவனை வழிபட்டுவந்தார். ஒரு நாள் ஆயிரத்துக்கு ஒரு மலர் குறைந்திருந்ததைக் கண்ட திருமால் தம் கண் ஒன்றைப் பறித்து மலராகச் சாத்தி வழிபட்டார். அதனால் மகிழ்ந்த சிவபெருமான் திருமாலுக்குச் சக்கராயுதத்தை அருளினார்.

# 22. பெரிய புராணம்

## திருத்தொண்டத்தொகை

சென்ற வகுப்பிற் சுந்தரமூர்த்தி நாயனுர் வரலாற்றைப் படித்தீர்கள். அவர் எட்டாம் நூற்றுண்டில் வாழ்ந்த மெய்யடியார். ஒரு நாள் அவர் திருவாரூர் வன்மீக நாதருடைய கோயிலுக்குள் நுழைந்தபொழுது அங்கே தேவாசிரிய மண்டபத்திற் கூடியிருந்த சிவனடியார்கூட்டத்தைக் கண்டார். இவர்கள் மேல் உண்டான பத்தி மிகுதியினுல் ''இவர்களுக்கு நான் அடியனுகும் நாள் எந்நாளோ'' என்று நினைத்துக்கொண்டு, உள்ளே சென்று புற்றிடங் கொண்ட பெருமானை வணங்கினுர். அப்பொழுது பெருமானுர் திருவருளினுலே நாயனுருக்கு மெய்யடியார்களுடைய வரலாறு தெரிய வந்தது. நாயனுர் உடனே தேவாசிரிய மண்டபத்தை அடைந்து, அடியார்களை வணங்கி, ''தில்லைவாழ் அந்தணர்தம்'' என்று தொடங்குந் திருத்தொண்டத் தொகையைப் பாடியருளினுர். இப்பதிகத்திற் சொல்லப்படும் ஒவ்வொரு அடியாருக்கும் வெவ்வேருக 'அடியேன்' 'அடியேன்' என்று நாயனுர் வணங்குதலைக் காணலாம்.

## திருத்தொண்டர் திருவந்தாதி

திருத்தொண்டத் தொகையை ஆதாரமாகக் கொண்டு நம்பியாண்டார் நம்பி திருத்தொண்டர் திருவந்தாதியைப் பாடினுர்; இவர் கி. பி. 1000 இற்குச் சற்றுப் பிற்பட்ட காலத்தில் வாழ்ந்தவர். சோழப் பெருமன்னன் முதலாம் இராசராசன் காலத்தவர். இவரே முதற் பதினெரு திருமுறைகளையும் வகுத்தவர்.

பெரிய புராணம் என்னுந் திருத்தொண்டர் புராணம் பன்னிரு திருமுறைகளுட் பன்னிரண்டாவது திருமுறையாகும். இதனை இயற்றியவர் 'குன்றத்தூர் அருண்மொழித் தேவர்' என்னுஞ் சேக்கிழார் சுவாமிகளாவர். இவர் பன்னிரண்டாம் நூற்றுண்டிலே வாழ்ந்தவர். சுந்தரர் பாடிய திருத்தொண்டத் தொகையையும் நம்பியாண்டார் நம்பி பாடிய திருத்தொண்

டர் திருவந்தாதியையும் பின்பற்றிச் சுந்தரரைக் காப்பியத் தலைவராகக் கொண்டு சேக்கிழார் இந்நூலை இயற்றினார். அறுபத்து மூன்று அடியார்களின் வரலாற்றைப் பத்திச் சுவை சொட்டப் பாடுகின்ற சைவக் காப்பியமே இந்தத் திருத்தொண்டர் புராணமாகும்.

சேக்கிழார் அநபாயசோழன் எனப்படும் முதலாங் குலோத்துங்கனுக்கு முதல் மந்திரியாகக் கடமை புரிந்து வந்தார். அரசன் சீவக சிந்தாமணி என்ற சமண காவியத்தில் ஈடுபட்டிருப்பதைக் கண்டு அவர் மனம் மிக வருந்தினார். அரசனுடைய மனத்தைத் திருப்புவதற்காகச் சேக்கிழார் திருத்தொண்டத் தொகையை ஓதிப் பொருளை இனிது விளக்கினார். அரசனும் வியப்புற்றுத் திருத்தொண்டர் வரலாற்றைக் காப்பியமாகச் செய்து தரும்படி வேண்டினான்.

சேக்கிழார் அரசனிடம் விடைபெற்றுக் கொண்டு சிதம்பரத்தை அடைந்து, சுவாமி தரிசனஞ் செய்து, ஆயிரங்கால் மண்டபத்தில் அமர்ந்திருந்து, காப்பியம் இயற்றத் தொடங்கினார். சிறிது காலத்தில் நூல் முடிவுற்றது.

இச்செய்தி சோழனுக்கு எட்டியது. சிதம்பரம் வந்து தானே நின்று நூலை அரங்கேற்றுவித்தான். ஒரு சித்திரை மாதத் திருவாதிரை நாளிலே அரங்கேற்றந் தொடங்கியது; அடுத்த சித்திரை மாதத் திருவாதிரை நாளிலே முடிவுற்றது.

சோழ மன்னன் சேக்கிழாரை யானை மேல் ஏற்றி, தானே பின்னிருந்து கவரி வீசி, ஊர்வலஞ் செய்வித்தான். பின்னர் அவர் இயற்றிய காப்பியம் 12ஆந் திருமுறையாக வகுக்கப் பட்டது.

காப்பியத்திற்குச் சேக்கிழார் இட்ட பெயர் 'திருத்தொண்டர் புராணம்' என்பதாகும். செயற்கரிய செயல்கள் செய்த சீரிய அடியார் சரிதையாதலின் இந்நூல் 'பெரிய புராணம்' என்ற பெயரும் உடைத்தாயிற்று. பெரிய புராணத்தையே 'திருப்புராணம்' என்று கூறுவது மரபு.

# திருப்புராணம்

## 1. திருஞானசம்பந்தர் புராணம்

திருத்தொண்டர் புராணத்திலே, திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் புராணம் மிக விரிவாகக் கொடுக்கப்பட்டுள்ளது. அப்புராணத்தில் வரும் செய்யுள் ஒன்று கீழே தரப்பட்டுள்ளது.

மதுரையிலே திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் தங்கியிருந்த மடத்துக்குச் சமணர்கள் வைத்த தீ வெப்பு நோயாகச் சென்று பாண்டியனை வருத்தியது. மன்னவன் நோய் தீரத் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரை அழைத்து வருவதற்கு மந்திரி குலச்சிறையாரும் மங்கையர்க்கரசியாரும் நாயனார் இருந்த மடத்தை அடைந்தனர். அங்கே நின்ற அடியார்கள் அவர்கள் இருவரினதும் வரவை நாயனாருக்கு அறிவிக்க, அவரும் அவர்களை "வருக" என்றருளிச் செய்தார். மடத்தினுள்ளே அழைத்துச் செல்லப்பட்ட பாண்டிமாதேவியாரான மங்கையர்க்கரசியாரும், மந்திரி குலச்சிறையாரும் முதன்முதலாக நாயனாரைக் கண்ட காட்சியைச் சேக்கிழார் இத்திருப்பாடலிலே விளக்குகின்றார்.

திருச்சிற்றம்பலம்

ஞானத்தின் திருவுருவை நான்மறையின் தனித்துணையை
வானத்தின் மிசையன்றி மண்ணில்வளர் மதிக்கொழுந்தைத்
தேனக்க மலர்க்கொன்றைச் செஞ்சடையார் சீர்தொடுக்குங்
கானத்தி னெழுபிறப்பைக் கண்களிப்பக் கண்டார்கள்.

திருச்சிற்றம்பலம்

ஞானத்தாலாய திருவருவம் போல்வாரை, நான்கு வேதங்களுக்கும் ஒப்பில்லாத துணையாயுள்ளாரை, விண்ணிலன்றி மண்ணுலகில் வளர்கின்ற இளஞ் சந்திரனை, தேன் விளங்கும் கொன்றைப் பூமாலையை அணிந்த சிவந்த சடையையுடைய சிவபிரானது மிகு புகழைப் பாடும் ஏழிசையாலாகிய ஒரு பிறப்பு விசேடத்தை, (இருவரும்) கண் களிக்கும்படி தரிசித்தார்கள்.

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரை (ஞானப்பால் உண்டமையின்) ''ஞானத்தின் திருவுரு'' என்றார். நான்கு வேதங்களிற் கூறிய அறங்களை வளர்த்தலின், ''நான்மறையின் துணை'' என்றார். நாளும் இன்னிசையால் இறைவன் புகழ் பாடியமையினால், ''கானத்தின் எழு பிறப்பு'' என்றார்.

## 2. திருநாவுக்கரசர் புராணம்

திருத்தொண்டர் புராணத்திலே திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் புராணத்தோடு ஒத்த சிறப்பு வாய்ந்தது திருநாவுக்கரசு நாயனார் புராணமாகும். இது ஆளுடைய அரசின் வாழ்க்கையினை மிகவும் சிறப்பாக எடுத்துக்கூறுகின்றது.

திருவாவடுதுறையிலே தாண்டக வேந்தர் தங்கியிருந்த நாள்களிலே திருத்தாண்டகம், திருக்குறுந்தொகை, திருநேரிசை முதலாய பதிகங்கள் பல பாடிக் கைத்தொண்டு புரிவாராயினார். பின்பு அங்கிருந்து புறப்பட்டுப் பல தலங்களைத் தரிசித்துக்கொண்டு, சிவபெருமானை உமாதேவியார் வழிபட்ட சிறந்த தலமாகிய திருச்சத்திமுற்றத்தை அடைந்தார். அங்கே எழுந்தருளிய சிவக்கொழுந்தை அடிபணிந்து பரவி, ''இயமன் வந்து என்னை வருத்துவதன் முன் நின் தாமரை மலர் போலுந் திருவடிகளை என் சிரசின்மேற் சூட்டி வைப்பாய்'' என்னும் கருத்துப்படக் ''கோவாய் முடுகி அடுதிறற் கூற்றம் குமைப்பதன் முன், பூவார் அடிச்சுவடு என்மேற் பொறித்துவை'' என்னும் திருவிருத்தத்தைப் பாடினார். அப்பொழுது இறைவன் ''நல்லூருக்கு வா'' என்றருளிச் செய்தார்.

இறைவன் இட்ட கட்டளையைத் தலைமேற்றாங்கிய உழவாரப்படையாளி திருநல்லூர் என்னும் தலத்துக்குச் சென்று, அங்கே எழுந்தருளியுள்ள பெரிய ஆண்டவரைப் பணிந்தெழும்போது, ''உன்னுடைய நினைப்பதனை முடிக்கின்றோம்'' என்றருளித் தம்முடைய திருவடிகளை அரசின் சிரசின் மேலே சூட்டியருளினார்.

திருநல்லூர்ப் பதியிற் சில நாள் வதிந்த பின்னர் நாவுக்கரசர் திருவாரூர் செல்ல நினைந்து, நல்லூர்ப் பெருமானிடம் விடை பெற்றுப் புறப்பட்டார். இடையிலே பல பதிகளை வணங்கித் திருவாரூர் வந்தடைந்தார். அவர் வருகையை அறிந்த அப்பதியிலுள்ளார் யாவரும் ஊர்ப்புறஞ் சென்று அவரை எதிர்கொண்டனர். நாயனார் ''தொண்டர்க்குத்

தொண்டராம் புண்ணியமே'' என்ற முடிபையுடைய பாடலைப் பாடிக்கொண்டு, அடியார் குழாத்துடன் கோயிலுக்குச் சென்ருர்; அங்கே புற்றிடங் கொண்ட பெருமானைக் கண்ணுரக் கண்டு தொழுதார். பின்னர் அங்குச் சிலநாள் இருந்து மன மொழி மெய்களால் அவர் தமது தொண்டினைச் செய்து வந்தார்.

தமக்கு இன்னருள் செய்த இறைவனைத் தொழாமல் இளமையிலே புறச்சமயம் புக்குப் பன்ளுட் கழித்ததை எண்ணி நாயஞர் இரங்கினுர்; அத்தகைய தம்மை ஆட்கொண்ட கடவுளின் அளப்பரிய கருணையை நினைந்து உருகினுர்; அவருடைய கண்களிலிருந்து கண்ணீர் மழையாகப் பொழிந்து, மார்பின் வழியே ஒழுகி வழிகின்றது; இறைவன் புகழ் பாடும் இனிய வாயிலிருந்து தீந்தமிழ்ப் பாமாலைகள் சொரிந்த வண்ணம் இருக்கின்றன; அவருடைய மனம் இறைவனுடைய திருத்தாளையே பற்றி நிற்கின்றது; கையிற் பிடித்த உழவாரத் திருப்படையுந் தாமுமாகக் காட்சி தருகின்ருர்; உழவாரப் படையை அவர் சும்மா வைத்திருக்கவில்லை. திருவீதிப் பணி செய்வதற்கே அதனை வைத்திருக்கின்றனர். திருக்கோயிலைத் தொழ வரும் அடியார்களுக்குக் கல்லும் முள்ளும் புற்பூண்டுகளும் காலில் உறுத்தாமல் இருப்பதற்காகவே நாவரசர் திருவீதிப் பணி செய்து வந்தார். பார் வாழ வேண்டும் என்ற பரந்த நோக்கத்தோடே— சமூக உணர்வோடே —நம் நாயஞர் பணி செய்தார் என்பதைச் சேக்கிழார் விதந்து பாடுகின்ருர். அப்பாடலைப் படிப்போம்.

திருச்சிற்றம்பலம்

மார்பாரப் பொழிகண்ணீர் மழைவாருந்
திருவடிவு மதுர வாக்கிற்
சேர்வாகுந் திருவாயிற் றீந்தமிழின்
மாலைகளுஞ் செம்பொற் றுளே
சார்வான திருமனமு முழவாரத்
தனிப்படையுந் தாமு மாகிப்
பார்வாழத் திருவீதிப் பணிசெய்து
பணிந்தேத்திப் பரவிச் செல்வார்.

திருச்சிற்றம்பலம்

மார்பு முற்றுக நனையும் வண்ணம் இடையருது பொழியும் கண்ணீர், மழை போல ஒழுகிக்கொண்டிருக்கும் நாவுக்கர

சரின் திருவடிவு இங்கே சித்திரிக்கப்பட்டுள்ளது; மதுர வாக்கு-இனிய மொழி; தீந்தமிழ் மாலைகள்-தித்திக்கும் தமிழில் இயன்ற தேவாரப் பதிகங்கள்; பார்-உலகம்; அது உலகிலுள்ள உயிர்களைக் குறிக்கின்றது. 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்று பாடிய நம் நாயனுர் இவ்வாறே தமது கூற்றுக்கு எடுத்துக்காட்டாக வாழ்ந்து, பார் வாழப் பணி செய்தார்.

# 23. கந்த புராணம்

கந்த புராணத்தை இயற்றியவர் கச்சியப்ப சிவாசாரியார். இவர் பதினன்காம் நூற்றுண்டிற் காஞ்சி நகரில் வாழ்ந்தவர். இவர் அங்குள்ள முருகன் கோயிலுக்குப் பூசை செய்து வந்தவர். இவருக்கு ஒரு நாள் முருகன் கனவிலே தரிசனங் கொடுத்தான்; அப்பொழுது 'தன் சரிதத்தைச் செந்தமிழிலே பாடவேண்டும்' என்று கச்சியப்பருக்குக் கட்டளை இட்டான். அதுமட்டுமன்றி, 'திகடசக்கர' என்று அடியும் எடுத்துக் கொடுத்தான். இவ்வாறு பாடப்பட்டதே கந்த புராணம். இதிற் பதினேராயிரம் பாடல்கள் உள்ளன. அவற்றுள் இரண்டு பாடல்களை இங்கே படிப்போம்.

ஞானமே உருவானவன் முருகன். அவன் தன்னை அடைந்தவர்களுக்கு ஞானம் வழங்குபவன்; ஈசனேடு ஞானமொழி பேசியவன்; பகைவனுகிய சூரனையே ஞானமுறச் செய்தவன். ஒரு காலத்திலே தேவர்கள் இன்பக் களிப்பு மிகுதியால் ஈசனையும் மறந்து வாழ்ந்தனர். இதன் காரணமாக அவர்கள் அசுரர்களின் கையிலே துன்பங்கள் அனுபவிக்க வேண்டி நேர்ந்தது.

அசுரர்களுடைய தலைவன் சூரன். அவன் சகல புருட இலட்சணங்களும் அமையப்பெற்றவன்; ஆயிரத்தெட்டு அண்டங்களையும் நூற்றெட்டு யுகங்களுக்கு ஆட்சி செய்ய இறைவனிடம் வரம் பெற்றிருந்தான். அவனுடைய தலைமையில் அசுரர்கள் தேவர்களுக்குச் செய்த கொடுமைகள் எண்ணிறந்தன. அவர்களுக்கு அஞ்சித் தேவர்கள் தலைகுனிந்து வாழ்ந்தனர். அவர்கள் இட்ட கட்டளைப்படி ஊழியஞ் செய்யலாயினர். சூரன் தேவர்களைச் சிறையில் அடைத்தான்.

தீயோரைத் தண்டித்து நல்வழிப்படுத்தலும் அடியாரின் துன்பந்துடைத்து அவர்களைக் காத்தலுந் திருவருளின் செயலாகும். இதனை விளக்குமுகமாக 'எல்லாம் வல்ல இறைவனே முருகனுக வந்து தோன்றினன்' என்று கச்சியப்பர் கூறுகின்றுர். முருக உதயத்தைக் கூறும் பாடல் கீழே தரப்பட்டுள்ளது.

அருவமும் உருவு மாகி
அநாதியாய்ப் பலவாய் ஒன்றாய்
பிரமமாய் நின்ற சோதிப்
பிழம்பதோர் மேனி யாகக்
கருணைகூர் முகங்கள் ஆறுங்
கரங்கள்பன் னிரண்டுங் கொண்டே
ஒருதிரு முருகன் வந்தாங்கு
உதித்தனன் உலக முய்ய.

அருவமாகவும் உருவமாகவும் அநாதியாகவும் பலவாகவும் ஒன்றாகவும் பிரமமாகவும் நின்ற ஒளிப் பிழம்பு ஓர் உடம்பாக அமைந்து இரக்கம் மிகுந்த ஆறு முகங்களும் பன்னிரண்டு கைகளுங் கொண்டு, உலகம் உய்யும்பொருட்டு ஒப்பற்ற திருமுருகனாக வந்து தோன்றியது.

முருகன் தேவ சேனாபதியாகத் தேவர் துயர் துடைக்கத் திருவுளங் கொண்டான். முருகன் முதலிலே தாரகனை எதிர்ப்பதற்குச் சித்தங் கொண்டான். தாரகன் என்பவன் சூரனின் தம்பி. அவன் தன் வழியாற் செல்வோரை மயக்கிக் கிரௌஞ்சம் என்னும் மலையினுள்ளே மறைத்து வைத்தான். அவனை எதிர்ப்பதற்கு வீரவாகு தேவர் போர்க்கோலம் பூண்டு சென்றபோது அவரையும் அவருடைய படைகளையும் அவன் மயக்கிவிட்டான். எனவே இறுதியில் முருகன் தானே தாரகனை எதிர்க்க நேரிற் செல்கின்றான். முருகனுடைய அழகிய கோலத்தைக் காண்கின்றான் தாரகன். இதனைக் கச்சியப்பர் கீழே வரும் பாடலில் வருணிக்கின்றார்.

முழுமதி யன்ன ஆறு
முகங்களும் முந்நான் காகும்
விழிகளின் அருளும் வேலும்
வேறுள படையின் சீரும்
அழகிய கரமீர் ஆறும்
அணிமணித் தண்டை ஆர்க்கும்
செழுமலர் அடியும் கண்டான்
அவன்தவம் செப்பற் பாற்றே.

பூரண சந்திரனை ஒத்த ஆறு முகங்களையும், அருள் ஒழுகும் பன்னிரண்டு கண்களையும், ஞான சத்தியாகிய வேலையும், மற்றைய திவ்விய படைகளையும், அவற்றைத் தாங்கும் பன்னிரண்டு கைகளையும், அழகிய தண்டை ஒலிக்கின்ற திருவடிகளையும் காணும் பேறுபெற்றான் தாரகன். அவன் செய்த தவம்தான் என்னே!

# 24. திருப்புகழ்

முருகன் அடியார்களில் முதல்வராக வைத்து எண்ணப்படுபவர் அருணகிரிநாதர். ''வாக்குக்கு அருணகிரி'' என்று மக்கள் அவரைச் சிறப்பித்துக் கூறுவார்கள். அவருடைய பாடல்கள் திருப்புகழ், கந்தரனுபூதி, கந்தரலங்காரம் முதலியவைகளாகும். இவற்றுள்ளே, திருப்புகழ்ப் பாடல்கள் வேறு எங்கணும் காண முடியாத சந்தச் சிறப்பும் தாளச் சிறப்பும் அமையப்பெற்றவை. அவர் கதிர்காமக் கந்தன்மீது பாடிய திருப்புகழ் ஒன்றினை ஏழாம் ஆண்டிற் படித்தீர்கள். இன்னும் ஒன்றை இப்பொழுது படிப்பீர்கள்.

**தனதனன தான தனதனன தான**
**தனதனன தானத் தனதான**

திருமகளு லாவு மிருபுயமு ராரி
திருமுருக நாமப் பெருமாள்காண்
செகதலமும் வானு மிகுதிபெறு பாடல்
தெரிதருகு மாரப் பெருமாள்காண்
மருவுமடி யார்கள் மனதில்விளை யாடு
மரகதம யூரப் பெருமாள்காண்
மணிதரளம் வீசி யணியருவி சூழ
மருவுகதிர் காமப் பெருமாள் காண்
அருவரைகள் நீறு படஅசுரர் மாள
அமர்பொருத வீரப் பெருமாள்காண்
அரவுபிறை வாரி விரவுசடை வேணி
அமலர்குரு நாதப் பெருமாள்காண்
இருவினையி லாத தருவினைவி டாத
இமையவர்கு லேசப் பெருமாள்காண்
இலகுசிலை வேடர் கொடியினதி பார
இருதனவி நோதப் பெருமாளே.

திருமாலுக்கு மருகனாகவும் அடியார்கள் மனத்தில் விளையாடும் மயில்வாகனனாகவும், அசுரரைக் கொன்ற வீரனாகவும் சிவகுருநாதனாகவும், இமையவர் குலேசனாகவும், பிறவுமாக வுள்ள முருகன் புகழை அருணகிரிநாதர் பலபடக் கூறி மகிழுகின்றார்.

இச்செய்யுளிற் கூறப்படுவன; திருமகள் வீற்றிருக்கும் இரண்டு தோள்களையுடைய திருமாலின் திருமருகன்; மண்ணுலகத்தவரும் விண்ணுலகத்தவரும் மேலாகப் போற்றுகின்ற வேத உபநிடதங்களை ஆராய்ந்து தெளியப்பெறும் இளையோனாகிய குமாரன்; அடியார்களுடைய மனத்தில் விளையாடுகின்றவன்; பச்சை நிற மயிலை வாகனமாகவுடையவன்; இரத்தினங்களையும் முத்துக்களையும் எறிந்து வீசும் அழகிய மாணிக்க கங்கை பாயும் கதிர்காமத்தில் எழுந்தருளியிருப்பவன்; அடைதற்கரிய மலைகள் பொடிபடவும் சூரபதுமன் முதலாய அசுரர்கள் அழிந்தொழியவும் போர் புரிந்த வீரன்; பாம்பு, பிறைச் சந்திரன், கங்கை என்னும் மூன்றும் கலந்திலங்கும் சடா பாரத்தையுடைய அமலராகிய சிவபெருமானுக்குப் பிரணவப் பொருளை உபதேசித்த குருநாதன்; புண்ணியம் பாவம் ஆகிய இருவினையும் இல்லாதவரும், கற்பக தருவாகிய விருட்சத்தை விட்டு நீங்காதவருமாகிய தேவர்கள் கூட்டத்துக்கு அதிபதி; விளங்குகின்ற வில்லையுடைய வேடுவர்களது மகளாகிய வள்ளிநாயகியாருக்கு ஞானத்தை விளக்குவதையே பொழுதுபோக்காகவுடையவன். இவ்வாறாக முருகப்பெருமானைப் புகழ்ந்து மகிழ்கின்றார் அருணகிரிநாதர்.

திருமகள்-இலக்குமி; முராரி (முரு அரி) முராசுரன் என்பவன் நரகாசுரனின் தமையன். இவனைக் கிருஷ்ணர் கொன்றமையால் முராரி எனும் நாமம் பெற்றார்; செகதலம்-மண்ணுலகம்; வான்-விண்ணுலகம்; மரகதம்-பச்சைநிறம்; மயூரம்-மயில்; மணி-இரத்தினம்; தரளம்-முத்து; அருவி-மலையிலிருந்து விழும் நீர்ப் பெருக்கு; அருவரை- அடைதற்கரிய மலை; அரவு-பாம்பு; வாரி-கங்கை; இமையவர்-கண் இமைத்தல் இல்லாத தேவர்; குலேசர்-(குல ஈசர்) தேவர் குலத்துக்குத் தலைவன்; இலகுசிலை-விளங்குகின்ற வில்; கொடி-கொடி போன்றாள் (இங்கே வள்ளிநாயகி).

இத்தகையனாகிய முருகனை அனுதினமும் மனமொழி மெய்களால் வணங்கினால் இம்மையிலும் மறுமையிலும் இன்பம் பெறலாம்.

# 25. திருக்குறள்

## அறன் வலியுறுத்தல்

1. மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்துஅறன்
ஆகுல நீர பிற (4.4)

ஒருவன் தன் மனத்திற் குற்றம் இல்லாதவனுக இருத்தல் வேண்டும். அதுதான் அறம் எனப்படும். மனத்தூய்மை இல்லாத மற்றவை ஆரவாரம் உடையவையே. அகத் தூய்மை இல்லாமல் ஆடம்பரமான உடை அணிந்து கோயிலுக்குப் போதல் ஆரவாரம் ஆகும். இறைவன் பூசலார் என்ற மெய்யடியார் கட்டிய மனக்கோயிலிற் குடிகொள்வதற்காக, அரசன் கட்டிய கற்கோயிலின் கும்பாபிடேகம் தள்ளிப்போடப்பட்டது.

## வாழ்க்கைத் துணைநலம்

2. மனைத்தக்க மாண்புடையள் ஆகித்தற் கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை (6.1)

இல்வாழ்க்கைக்கு ஏற்ற நற்பண்பு உடையவளாகித் தன் கணவனுடைய பொருள் வளத்துக்குத் தக்க வாழ்வு நடத்துகின்றவளே வாழ்க்கைத் துணை ஆவாள்.

இதற்கு ஓர் உதாரணமாய் விளங்குகின்முர் இளையான்குடி மாறநாயனுரின் மனைவியார். வந்த சிவனடியாருக்கு அமுதிடுவது எங்ஙனம் என்று மாறனுருக்கு வழி கூறுகின்முர் மனைவியார். விதைத்த நெல்லையுங் குப்பைக் கீரையையும் பக்குவப்படுத்தி இனிய உணவு படைக்கின்முர்.

இவ்வாறே குசேலருடைய மனைவியாரான சுசீலையாரும் வறுமையிற் செம்மையாக வாழ்ந்தார். குசேலர் கொண்டு வரும் புல்லரிசியிலும் சிறிதளவைச் சேமித்து வைத்து, மிகுதியைக் கஞ்சியாக்கிக் கணவருக்கும் பிள்ளைகளுக்கும் கொடுத்து எஞ்சியதைத் தாம் உண்பார். மிடியெனும் கடலுள் மூழ்கியிருந்தபோதும் கணவரை வெறுத்துரையார். முடிவிலே கணவரைக் கண்ணபிரானிடம் அனுப்பியபோது, கையுறையாகக்

கொண்டுசெல்வதற்கு, முன்பு சேமித்து வைத்த புல்லரிசியையே அவலாக்கிக் கொடுக்கிறார். குசேலரைக் குசலம் விசாரித்த கண்ணபிரான் சுசீலையாரின் மனைமாட்சியை-நின்னுடைய மனைக் கிழத்தி .............. உன்னுடைய வருவாய்க்குத் தக்க செலவு உஞற்றுவளே' என்று பாராட்டுகின்றார்.

## அன்புடைமை

3. அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு (8.2)

அன்பு இல்லாதவர்கள் எல்லாப் பொருளையும் தமக்கே உரிமையாகக் கொண்டு வாழ்வர். அன்பு உடையவர்கள் தம் உடம்பையும் பிறர்க்கு உரிமையாக்கி வாழ்வர்.

அன்பே உருவமான அடியார் கண்ணப்பர்தம் கண்ணையே அன்பின் காணிக்கையாக்குகிறார். சிபி என்ற அரசன் கேவலம் ஒரு பறவைக்காகத் தனது உடலை அரிந்து கொடுக்கின்றான். ததீசி என்ற முனிபுங்கவர் தமது முதுகெலும்பை இந்திரனுக்குக் கொடுக்கிறார். பிள்ளைகளிடமுள்ள அன்புக்காகப் பெற்றோர் எந்தத் தியாகத்தையுஞ் செய்யச் சித்தமாக இருக்கிறார்கள். குடும்பத்தினிடம் அன்பு செலுத்தப் பழகிக்கொள்ளும்போது சமுதாயத்திடம் அன்பு செலுத்தும் பழக்கம் கைவரும். ஆண்டவனிடம் அன்பு செலுத்தும் அறிவு பிறக்கும்.

## செய்ந்நன்றி அறிதல்

4. எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு (11.10)

எந்த அறத்தை அழித்தவர்க்கும் தப்பிப்பிழைக்க வழி உண்டாகும்; ஒருவர் செய்த உதவியை மறந்து அழித்தவனுக்கு உய்வு இல்லை.

சமூகத்தில் வாழும் நாம் பலருடைய உதவியைப் பெற்று வாழ்கின்றோம்; பலருடைய உழைப்பின் பயனை அனுபவிக்கின்றோம். நம்மை வளர்த்து ஆளாக்குவதற்கு நம் பெற்றோர் நமக்கு எவ்வளவு உதவி செய்கின்றனர்? நம்பொருட்டு எவ்வளவு தியாகம் செய்கின்றனர்? பெற்றோர் செய்த இந்த நன்றியை நாம் ஒருபோதுமே மறத்தலாகாது.

இவ்வாறே நாம் நல்வாழ்வு வாழ்வதற்குச் சமூகத்தவர் எத்தனையோ வழிகளில் நமக்கு உதவி செய்கின்றனர். அவ்வுத வியை அனுபவிக்கும் நாமும் சமூகத்துக்கு நமது நன்றிக் கடனைச் செய்ய வேண்டுந்தானே! சமூக வாழ்க்கையில் எமது பங்கை நாம் சரிவரச் செய்வோமானால், அதுவே நாம் சமூகத் துக்குச் செய்யும் உதவியாகும்.

இனி, நமக்கு அறியத்தக்க பொறிகளோடு கூடிய உடம் பைத் தந்துதவிய இறைவன் செய்த நன்றிக்கு நாம் என்ன கைம்மாறு செய்ய வல்லேம்? அத்தகைய இறைவனது அருட் செயலை உணர்ந்து, அவன்பால் அன்பு வைத்து, அன்பு நெறியில் ஒழுகுவதே நாம் செய்யத்தக்கது. அந்த நன்றியை நாம் மறந் தால் நமக்கு ஈடேற்றமே இல்லையாகும்.

## தீவினையச்சம்

5. தீயவை தீய பயத்தலால் தீயவை
தீயினும் அஞ்சப் படும். (21.12)

தீயசெயல்கள் தீமையை விளைவிக்கும் தன்மை உடையன வாக இருக்கின்றபடியால், அந்தத் தீய செயல்கள் தீயைவிடக் கொடியனவாகக் கருதி அஞ்சப்படும். ''நீ ஒரு பொய் கூறினால் உனக்கு ஒரு துன்பமும் வராமற் காப்பேன்'' என்றார் விசுவா மித்திரர். அரிச்சந்திரன் மறுக்கின்றான்.

மகாத்மா காந்தி இந்திய நாட்டு விடுதலைக்காகச் சட்ட மறுப்புப் போர் தொடங்கினார். ஆனால் அதிற் கலந்துகொண்ட சிலர் ஒழுங்கீனமாக நடந்துகொண்டபடியால் அவர் அதை நிறுத்திவிட்டார்; நேர்மையில்லாத தீய வழியிற் செல்லுதல் தீயைவிடக் கொடியதெனக் கருதினார்.

## தவம்

6. உற்றநோய் நோன்றல் உயிர்க்குஉறுகண் செய்யாமை
அற்றே தவத்திற்கு உரு. (27.1)

தனக்கு உற்ற துன்பத்தைப் பொறுத்துக்கொள்ளுதலும் மற்ற உயிர்க்குத் துன்பம் செய்யாமலிருத்தலும் ஆகிய தன்மையே தவத்திற்கு வடிவமாகும்.

இதைக் காந்தியடிகள் அகிம்சை விரதம் என்று குறிப்பிட்டார்; இதையே எல்லோரிடமும் அன்பு கொள்ளும் ஆற்றலை வளர்க்குங் கருவியாகப் பயன்படுத்தினர்.

7. கூற்றம் குதித்தலும் கைகூடும் நோற்றலின்
ஆற்றல் தலைப்பட்ட வர்க்கு. (27.9)

தவம் செய்வதாற் பெறத்தக்க ஆற்றலைப் பெற்றவர்க்கு (ஓர் இடையூறும் இல்லாமையால்) யமனை வெல்லுதலும் கைகூடும்.

மார்க்கண்டேயருக்குப் பதினறு வயது நிறைந்ததும் அவர் ஆயுள் முடிந்துவிடுமேயென்று தாய் தந்தையர் ஆருத் துயரில் மூழ்கியிருந்தனர். பெற்றோரின் கவலையைப் போக்குவதற்காக மார்க்கண்டேயர் சிவலிங்கந் தாபித்து அருந் தவம் புரிந்து வந்தார். அந்நிலையிலே மார்க்கண்டேயரின் உயிரைக் கவர முயன்ற யமனை, சிவலிங்கத்திடமாகத் தோன்றிய இறைவன் காலால் உதைத்துக் கொன்ருர். மார்க்கண்டேயருக்கும் முடிவிலா வாழ்நாளைக் கொடுத்தார். ''மார்க்கண்டற் காக மறலி பட்ட பாட்டையுன்னிப் பார்க்கிலன்பர்க் கென்ன பயங்காண் பராபரமே'' என்று தாயுமானவர் இதனைப் பாடுகின்ருர்.

இவ்வாறே கற்பிற் சிறந்த சாவித்திரியும் தனது நோன்பின் ஆற்றலால் யமனை வென்றுள்ளாள். மணஞ்செய்த ஓராண்டிலே கணவன் இறந்துவிடுவான் என்று அறிந்திருந்தும், சத்தியவானை மணந்தாள் சாவித்திரி. அன்று முதல் அவள் 'சாவித்திரி' நோன்பை நோற்று வந்தாள். குறித்த நாளிலே கணவன் உயிரைக் காலன்கவர்ந்து செல்வதைத் தனது நோன்பின் திறத்தால் அறிந்த சாவித்திரி, காலனைப் பின்ருெடர்ந்து சென்று பலவாறு இரந்து வேண்டினுள். முடிவிலே காலன் தோற்ருன். சாவித்திரி தன் கணவன் உயிரை மீட்டுக்கொண்டாள்.

## வாய்மை

8. உள்ளத்தால் பொய்யா தொழுகின் உலகத்தார்
உள்ளத்துள் எல்லாம் உளன். (30.4)

ஒருவன் தன் உள்ளம் அறியப் பொய் இல்லாமல் நடப்பானுல் அத்தகையவன் உலகத்தாரின் உள்ளங்களிலெல்லாம் இருப்பவனுகிருன்.

அரிச்சந்திரன் உண்மையை நிலைநாட்டுவதற்காகச் சொல்லொணுத் துன்பத்தை அடைந்தான்; நாடு நகரம் யாவற்றையும் இழந்தான்; மனைவியையும் மகனையும் விற்ருன்; சுடுகாட்டிற் பிணம் சுடும் தொழிலை ஏற்ருன்; பொய் கூற மறுத்தான். அவனது சரித்திரம் மக்கள் மனத்தினின்றும் என்றும் நீங்காததாக விளங்குகின்றது. அரிச்சந்திரன் நாடகம் பார்த்த மோகனதாஸ் என்ற சிறுவன் உள்ளத்தால் பொய்யாது ஒழுகலை, வாய்மையைத் தனது வாழ்வின் ஆதாரமாகக் கொண்டான். அச்சிறுவனே பிற்காலத்தில் உலகத்தார் உள்ளத்துள் எல்லாம் நிலைத்து வாழும் மகாத்மா காந்தி.

## இன்ஞசெய்யாமை

9. இன்ஞசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல். (32.4)

தமக்குத் துன்பம் விளைத்தவர்களுக்கு அளிக்கும் தண்டனை யாவது அவர்களே வெட்கும்படியாக நன்மை செய்து தான் செய்த நன்மையையும் அவர் செய்த தீமையையும் ஒருங்கே மறந்துவிடுவதேயாகும்.

மெய்யடியாராம் மெய்ப்பொருள் நாயனுருடைய வரலாறு இக்குறளுக்கு ஒரு விளக்கமாக அமைந்துள்ளது. தம்மிடம் வந்த தவ வேடத்தவனை அடிபணிகிருர் மெய்ப்பொருள். வந்த வேடதாரி, அவரைக் கொல்ல வந்த பகைவன்; அவரைக் குத்திவிடுகிருன்; மெய்க்காப்பாளன் ஓடி வருகிருன். சாகும் தறுவாயிலுள்ள மெய்ப்பொருள் அவனைத் தடுத்து நிறுத்துகிருர். ''இவர் நம்மவர், இவரை அழைத்துப்போய் ஊரெல்லையில் விட்டுவா'' என்று ஆணை பிறப்பிக்கிருர். இன்ஞ செய்த பகைவனுக்கு நன்மை செய்துவிட்டதே அவர் அவனை ஒறுத்த முறை.

10. அறிவிஞன் ஆகுவ துண்டோ பிறிதின்நோய்
தந்நோய்போல் போற்ருக் கடை.

மற்ற உயிரின் துன்பத்தைத் தம் துன்பம் போலக் கருதிக் காப்பாற்ருவிட்டால் பெற்றுள்ள அறிவிஞல் ஆகும் பயன் உண்டோ?

அருளாளர்களுடைய சரித்திரங்களைப் படிக்கும்போது இக்குறளின் உண்மை தெரியவருகிறது. திருஞானசம்பந்தர் சென்ற இடங்களிளெல்லாம் துயர்கண்டால் அதைத் துடைக்கும் அருள்

நிரம்பியவராயிருந்தார். கொல்லிமழவனுடைய மகள் வருந்தியபோதும், தம் பரிசனங்கள் குளிர்ச் சுரத்தாலே துன்புற்ற போதும், இளைஞன் ஒருவன் பாம்பு தீண்டியிறக்க அவன் மணக்க விருந்த மங்கை கதறியபோதும் அவர்களின் துன்பத்தைத் தம் துன்பம் போலக் கருதி அவர்களைக் காப்பாற்றுகிறார். காந்தியடிகளுக்கு ஒரு சோடிக் காலணிகளை ஒருவன் அன்பளிப்பாக வழங்கினான். அவர் ஏற்றுக்கொள்ளவில்லை. நாற்பது இலட்சம் மக்கள் காலணியின்றி இடர்ப்படத் தாம் மட்டும் காலணி அணிய அவர்தம் அன்பு மனம் ஏற்கவில்லை.

# அனுபந்தம்

## (அ) இந்து சமயப் பண்டிகைகள்

இவ்வுலக வாழ்க்கை இனிமையாக அமைய வேண்டும்; அது மறுமை வாழ்வுக்கும் உதவவேண்டும். இதுவே இந்து சமயப் பேரறிஞர் கருத்து. இக்கருத்தை அடிப்படையாகக் கொண்டே இந்துக்கள் சமயப் பண்டிகைகளை வகுத்திருக்கின்றனர்.

ஆண்டுதோறும் பல பண்டிகைகளை இந்துக்கள் கொண் டாடுகிறார்கள். அவற்றுள் இந்நாட்டில் முக்கியமானவை தைப் பொங்கல், தீபாவளி, புத்தாண்டு, நவராத்திரி என்பனவாகும்.

### 1. தைப்பொங்கல்

தமிழ்த் தை மாதப் பிறப்பன்று சூரியனுக்குப் பொங்கல் படைத்து வழிபடுங் கொண்டாட்டம் ''பொங்கற் பண்டிகை'' எனப்படும். உணவு உற்பத்திக்கும் உயிர்களின் வளர்ச்சிக்கும் சூரியன் வேண்டிய சத்தியை வழங்குகிறான். அதனாற் புதுப் பயிர் அறுவடையானதும் நன்றிக் கடன் செலுத்துமுகமாக மக்கள் பொங்கிப் படைத்துச் சூரியனை வழிபடுகின்றனர். இவ் வாறு செய்வதன் மூலம் தம் நன்றி உணர்ச்சியை வளர்த்துக் கொள்ளுகின்றனர்.

பொங்கல் தினத்தன்று யாவரும் காலை நான்கு மணியள விலே துயிலெழுந்துவிடுவர்; தம்மையும் தம் வீட்டையும் சுத்தஞ் செய்து அலங்கரித்துக் கொள்வர். வீட்டு முற்றத்திலே மஞ்சள் தூள், அரிசி மா ஆகியவற்றைக் கொண்டு அழகிய கோலம் போடப்பட்டிருக்கும். அதன் மத்தியிலே நிறைகுடமும் புனித விளக்கும் அழகுடன் மிளிரும். அங்கே பொங்கல் பொங் கிச் சூரியன் உதயமாகும்பொழுது, பொங்கலைப் படைத்து, அவனை வரவேற்பர். வளமையையுஞ் செழுமையையுங் குறிக் கும் பால், பழம், கரும்பு, இளநீர், மஞ்சள், பயறு முதலிய விவசாயப் பொருள்களும் பொங்கலுடன் காட்சியளிக்கும்.

படைத்த பொங்கலையும் பிற உணவு வகைகளையும் உற்றுருறவினர், அயலார் விருந்தினருடன் அவர்கள் பகிர்ந்துண்டு இன்புறுவர். பொங்கல் தினத்தன்று மக்களுடைய மனத்தில் அன்பும் இன்பமும் பொங்கி வழியும்.

சூரியனுக்கு நன்றி பாராட்டும் மக்கள் தமக்கும் தம் உழவுத் தொழிலுக்கும் உறுதுணையான பசுக்கள் எருதுகளையும் மறப்பதில்லை. பொங்கலுக்கு அடுத்த நாள் கால்நடைகளைக் குளிப்பாட்டி அலங்கரித்து, மாட்டுப் பட்டியிற் பொங்கி அவற்றிற்குங் கொடுத்துத் தாமும் உண்பர். சூரியனிலும் கால்நடையிலும் இறைவனின் திருவருளைக் கண்டு நன்றி பாராட்டுவோர் மக்கள் செய்யும் நன்றியை மறப்பரோ!

## 2. புத்தாண்டு

தமிழ் மக்கள் பெருந் தொகையாக வாழும் பிரதேசங்களிலே பசியும் பிணியும் நீங்கி வசியும் வளனும் பெருகும் மகிழ்ச்சிக்குரிய காலம் இளவேனிற் காலம். அக்காலத்திலேயே பூமி மேடராசியிற் புகும். அந்தக் கணத்திலே தமிழ்ப் புத்தாண்டு பிறக்கிறது. அதே கணத்தில், தமிழகத்தின் மையமாக விளங்கும் மதுரை மீனாட்சியம்மன் கோவிலின் மூலத்தானத்தை வடக்கு நோக்கிச் செல்லும் சூரியன் கடக்கிறது. இது வானியற் கலையும் சமயமும் ஒத்தியங்குவதைக் காட்டுகிறது.

புத்தாண்டுத் தினத்தில் மக்கள் மருத்து நீர் வைத்து, மங்கலநீராடி புத்தாடை அணிந்து. திருக்கோயிலுக்கு மங்கலப் பொருள்களுடன் சென்று வழிபடுவர். வீட்டுக்குத் திரும்பியதும், விசேடமாகச் சமைக்கப்பட்ட உணவை உற்றுருறவினருடன் உண்பர். பெரியோர் கைவிசேடம் வழங்கி ஆசீர்வதிப்பர். அதன்பின் நண்பர் உறவினர் வீடுகளுக்குச் சென்று விருந்து கொண்டாடி இன்புறுவர்.

கொண்டாட்டம் புத்தாண்டுத் தினத்தோடு முடியவில்லை. தொடர்ந்து சில நாட்கள் நடைபெறும். ஊஞ்சல் ஆடுதல், போர்த் தேங்காய் அடித்தல், கிளித்தட்டு மறித்தல் முதலிய விளையாட்டுக்கள் கொண்டாட்டத்தில் இடம்பெறும்.

சிங்கள மக்களுக்கும் இதேதினம் புத்தாண்டுத் தினமாகும். அவர்களும் புத்தாண்டுத் தினத்தைத் தொடர்ந்து ஒரு மாத காலம் வெகு குதூகலமாகக் கொண்டாடுவர்.

## 3. தீபாவளி

இந்துக்கள் வாழும் இடம் எங்கனும் தீபாவளிப் பண்டிகை வெகு விமரிசையாகக் கொண்டாடப்படுகிறது. ஐப்பசி மாதத்து (அதாவது ஒக்டோபர்- நவம்பர் மாத) அமாவாசைக்கு முதனுளாகிய சதுர்த்தியன்று அதிகாலேயில் எண்ணெய் தேய்த்து, முழுகி புத்தாடையணிந்து காத்தல் தெய்வமாகிய விஷ்ணுமூர்த்தியை வழிபட்டு மனைவி மக்களோடு இன்புற்று அளவளாவி மகிழ்தல் மரபு. தீபாவளி (தீபம் - விளக்கு; ஆவளி- வரிசை) என்ற சொல்லின் பொருளுக்கமைய இன்றும் வட பாரதத்திலே தீபாவளி அன்று தீபங்களை வரிசைவரிசையாக ஏற்றி இன்புறுவர். மனத்தில் இருளை அகற்றி ஒளியைப் பெருக்குவதே இவ்விழாவின் பொருளும் நோக்கமும் ஆகும்.

தீபாவளியையொட்டிப் புராணக் கதையொன்று உண்டு. முன்னொரு காலத்திலே நரகாசுரன் என்றொரு துட்டன் இருந்தான். அவன் மகா பராக்கிரமசாலி. ''நானே பெரியவன்'' என்ற இறுமாப்புக் கொண்டான். நல்லவர்களை எல்லாம் வதைத்தான். நல்லவர்களின் முறையீட்டை இறைவன் கருத்திற் கொண்டான். காத்தற் கடவுளாகிய விஷ்ணுமூர்த்தியாகத் தோன்றி அசுரனைக் கொல்லத் திருவுளங் கொண்டான். மூர்த்தியின் கையால் இறக்குந் தறுவாயில் அவன் உண்மையை உணர்ந்தான். இறப்பதற்கு முன் ஒருவரம் மூர்த்தியிடம் வேண்டினுன்.

''சுவாமி, நான் இறக்கும் இத்தினத்தில் என்னை அருச்சித்து வழிபடுவோருக்குக் கருணை வழங்க வேண்டும்'' என்பதே அந்த வரம். அவ்வரம் வழங்கப்பட்டது. அன்றுதொட்டுத் தீபாவளியும் கொண்டாடப்படுகிறது.

கதை ஒருபுறம்; அதன் கருத்தென்ன? இறைவன் துட்டர்களை வதைத்து அடியார்களைப் பேணுவான். இரண்டு செயல்களும் அவரவர் நன்மையைக் கருதியே என்பதாம்.

## 4. நவராத்திரி

உலகங்களையும் அங்குள்ள உயிர்வகைகளையும் சடப்பொருள்களையும், இறைவன் தன் சத்தியினுலே தோற்றுவிக்கின்றுன். அச்சத்தியை உலக மாதாவாக இந்துக்கள் வணங்குகின்றனர்.

சத்திக்கு வழிபாடு இயற்றும் விசேட விழா நவராத்திரி (ஒன்பது இரவு) எனப்படும். தமிழ் மாதமாகிய புரட்டாதி

(செப்டம்பர்—ஒக்டோபரில்) அமாவாசைக்கு அடுத்த நாள், தொட்டு ஒன்பது இரவுகள் நவராத்திரி எனப்படும். நவராத்திரியில் வீடுகளிலும் ஆலயங்களிலும் பள்ளிக்கூடங்களிலும் தொழுவங்களிலும் சத்தியைக் கொலு வைத்து விழா விமரிசையாகக் கொண்டாடப்படும்.

வீரத்தைத் தருஞ் சத்தியைத் துர்க்கை எனவும், செல்வத்தைத் தருஞ் சத்தியை இலக்குமி எனவும், ஞானத்தைத் தருஞ் சத்தியைச் சரஸ்வதி எனவும் இந்துக்கள் வணங்குகின்றனர். நவராத்திரிக் காலத்தில் முதல் மூன்று இரவும் துர்க்கை வழிபாட்டிலும், அடுத்த மூன்று இரவும் திருமகள் வழிபாட்டிலும், இறுதி மூன்று இரவும் கலைமகள் வழிபாட்டிலும் ஈடுபடுவர். ஒன்பதாம் நாள் இரவு தமது தொழில் செய்வதற்குரிய ஆயுதங்கள், கருவிகள், நூல்கள் முதலியவற்றைப் பூசையில் வைத்து, ''செய்யுந் தொழிலே தெய்வம்'' என நினைந்து வழிபடுவர்.

பத்தாம் நாள் விஜய தசமி எனப்படும். அன்று இந்துக்கள் தமது தொழில்களை வெற்றிகரமாக நடத்துவதற்குப் புண்ணிய நாளாகக் கருதி வித்தியாரம்பம், ஏர்ப்பூட்டல், புதுக் கணக்குப் பதிதல் ஆகிய தொழில்களை மேற்கொள்வர். நவராத்திரி தசரா என்னும் பெயரிற் பாரதத்தில் மைசூரிலும், பிற இடங்களிலும் சிறப்பாகக் கொண்டாடப்பெற்று வருகிறது.

இவை தவிர, சிவராத்திரி, திருக்கார்த்திகை முதலிய விசேட நாள்கள் பலவற்றையும் இந்துக்கள் சிறப்பாகக் கொண்டாடுவர். இந்து சமய பண்டிகைகள் சமய அடிப்படையில் அமைந்த வாழ்க்கை முறையை வலியுறுத்துவனவேயன்றி வேறல்ல. பண்டிகைகளைக் கொண்டாடும்பொழுது இந்து மக்களிடையே ''யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்'' என்ற பரந்த மனப்பான்மை நிலவுவதைக் காணலாம்.

## (ஆ) இலங்கையின் பௌத்தப் பெருநாட்கள்

போசன் மாதத்துப் பௌர்ணமி இரவு, முழு நிலவு எறிக்கின்றது. தூரத்தேயிருந்து பௌத்த விகாரையின் மணி ஓசையும், மத்தளத்தின் ஓசையும், சாது சாது என்ற கோஷமும் காற்றிற் கலந்து வருகின்றன. சாந்தம் தவழும் வதனங்களுடன் பக்தர்கள் விகாரையை நோக்கி விரைகின்றார்கள். விகாரையில் நடக்கும் சமய காரியங்கள்தான் எத்தனை? அவற்றையெல்லாம் துறவிகள் நின்று வழிநடத்துகிறார்கள். ஒரு பௌத்த விகாரைக்குப் பௌர்ணமி தினத்தன்று செல்லும் போது நாம் காணும் காட்சி இது.

நீங்கள் போசன் விழா ஊர்வலத்தைக் கண்டிருப்பீர்கள். இலங்கையின் பல பாகங்களிலும் இந்த ஊர்வலம் நடைபெறுகிறது. பௌத்த விகாரை ஒன்றிலிருந்து இந்த ஊர்வலம் புறப்படும். பௌத்தத் துறவி ஒருவரின் சிலையை மக்கள் தூக்கிச் செல்லுவார்கள். இந்த ஊர்வலத்துக்கு மகிந்து பெரஹரா என்று பெயர். மகிந்த தேரரது இலங்கை வருகையைக் குறிப்பதாக இவ்விழா அமைந்துள்ளது.

மகிந்த தேரர் இங்ஙனம் சிறப்பிக்கப்படுவதன் காரணம் என்ன? அவரே புத்த மதத்தை கி. மு. 247 இல் இலங்கைக்குக் கொண்டுவந்தவர். அவர் அங்ஙனம் வந்த நாள் ஆடி மாதத்தில் வரும் பௌர்ணமி தினமாகும். ஆண்டுதோறும் இத்தினம் விழாக்கோலம் பூண்டு விளங்கும்.

புத்தர் பெருமான் பரிநிர்வாணம் அடைந்து 250 வருடங்கள் கழிந்த பின் அப்போது இந்தியப் பேரரசனாக விளங்கிய அசோகப் பெருமன்னனது குமாரராகிய மகிந்தர். இலங்கைக்குப் பௌத்த கோஷ்டியுடன் வந்து சேர்ந்தார். அப்பொழுது இலங்கை அரசனாக விளங்கியவன் தேவநம்பிய தீசன். அவன் மகிந்த தேரரை முதன்முதலாகச் சந்திக்கின்றான். அனுராதபுரத்துக்கு அருகிலுள்ள மிகிந்தலைக் குன்றில், அரசனும் அவனது பரிவாரமும் வேட்டையாடும் பொருட்டு மிகிந்தலைக் காட்டுக்கு வந்திருக்கிறார்கள். அங்கே தான் அந்தச் சந்திப்பு நிகழ்

கிறது. இருவரும் உரையாட ஆரம்பிக்கின்றார்கள். அரசனது அறிவாற்றலைப் பரீட்சை செய்து பார்க்க விரும்பினார் மகிந்தர்; கேள்விகள் சில கேட்கின்றார். அரசனும் பதிலளிக்கின்றான்.

மகிந்தர்: ''அரசே, அதோ காணப்படுகிறதே, அந்த மரத்தின் பெயரைச் சொல்லுவீரா?''

அரசன்: ''பெருமானே, அது ஒரு மா மரம்''

மகிந்தர்: ''அரசே இதைத் தவிர வேறு மாமரங்கள் உள்ளனவா?

அரசன்: ''ஆம், ஐயனே இதைத் தவிர வேறு மாமரங்கள் பல உண்டு.''

மகிந்தர்: ''அந்த மா மரங்கள், இந்த மாமரம் இவற்றைத் தவிர வேறு மரங்கள் உண்டா?''

அரசன்: ''ஆம், பெருமானே வேறு பல மரங்கள் உண்டு; ஆனால் அவை மாமரங்களல்ல.''

மகிந்தர்: ''அந்த மா மரங்கள், மா மரங்களல்லாத வேறு மரங்கள்—இவை தவிர வேறு மரங்கள் இருக்கின்றனவா?

அரசன்: ''இருக்கின்றது ஐயனே, இங்குள்ள மா மரம்.''

அரசனது பதில்கள் மகிந்தருக்குத் திருப்தியளித்தன. இவனுக்கு அறிவுரை ஒன்றை அருளினார். அவ்வுபதேசத்தைச் செவிமடுத்த மன்னன் புத்த மதத்தைத் தழுவினான். மகிந்த தேரரை அனுராதபுரம் வரும்படி வேண்டினான். அரசப் பூங்காவாகிய '' மகாமெவுனு''வைத் தூய்மையே வடிவமான அந்தத் துறவியர் கோமானுக்கு இருப்பிடமாக அமைத்தான். அங்கு விகாரை ஒன்றையும் அமைத்தான். அது மகாவிகாரை என்று வழங்கப்படுகிறது. அப்பொழுதிலிருந்து புத்த மதம் இலங்கை முழுவதும் பரவிற்று. நாட்டு மக்கள் விருப்பத்துடன் புத்த மதத்தை ஏற்றுக்கொண்டனர். சிலர் துறவறம் பூண்டு பௌத்த சங்கம் என்ற திருக்கூட்டத்தைச் சேர்ந்தார்கள். சமயப் பிரசாரம் செய்வதும் அவர்தம் பொறுப்பாயிற்று. இங்ஙனம் இலங்கையிற் புத்த சாசனம் தோன்றி நிலைபெறலாயிற்று.

இலங்கைக்குப் பௌத்தம் வரக் காரணமாயிருந்த மகிந்த தேரர் அக்காலத்தில் இந்தியாவில் விளங்கிய பௌத்தக் கலை, கலாசாரம், சமயக் கிரியைகள் ஆகியவற்றில் நன்கு தேர்ந்திருந்தார். இலங்கைப் பௌத்தர்களும் மகிந்தரது கண்காணிப்பிலே அவற்றையெல்லாம் நன்கு கற்றனர்.

நீங்கள் பௌத்தர்தம் புனித நகராகிய அநுராதபுரத்துக்குப் போனால், அபயவாவிக்கு அருகிலுள்ள ஒரு தாதுகோபத்தைக் காணுவீர்கள். அவ்வாவியை இப்பொழுது பசவக் குளம் என்று குறிப்பிடுகிறார்கள். அதற்கருகிலுள்ளது, தூபாராம தாதுகோபம். நேரே காணாவிட்டாலும் படத்திலாவது அதைக் கண்டிருப்பீர்கள். தேவநம்பிய தீசனாற் கட்டப்பட்ட முதல் தூபி அது. மகிந்ததேரரின் ஆலோசனையுடன் கட்டப்பட்டது. பிறகு அநுராதபுரத்தை ஆண்ட சிங்கள பௌத்த மன்னர்கள் பல விகாரைகளையும் தாதுகோபுரங்களையும் கட்டினார்கள். அவற்றுள் புகழ்பெற்றவை ரூவான்வெலிசய, அபயகிரிதாகப முதலியனவாகும். தாதுகோபங்கள் வழிபாட்டிடத்தின் முக்கியமான இன்றியமையாத ஓர் அம்சமாகக் கருதப்பட்டு வந்தன. எனவே, புத்தகோயில்கள் ஒவ்வொன்றிலும் ஒரு தாதுகோபத்தை நிறுவுவது மரபாகிவிட்டது. புத்தர் பெருமானுடைய எச்சங்கள் (தாதுக்கள்) தாது கோபங்களிற் பாதுகாத்து வைக்கப்பட்டிருக்கின்றன. எனவே, தாதுகோபங்களை வழிபடுவது புத்தரை வழிபடுவதற்கொக்கும் என்பது பௌத்தர்களுடைய திடமான நம்பிக்கை.

பௌத்த விகாரைகளில், உள்ளோ புறத்தோ நீங்கள் அரச மரத்தைக் கண்டிருப்பீர்கள். அதைச் சுற்றி ஒரு பலிபீடம் அமைக்கப்பட்டிருக்கும். வழிபட வருவோர் பூக்களை அப்பீடத்தில் வைப்பார்கள். ''அரச மரம் ஆராதனைக்குரியதாகிய தன் காரணம் யாது?'' என்று நீங்கள் வினவக்கூடும். அரச மரத்துக்குப் பௌத்த மதத்திற் தனிச் சிறப்பு உண்டு. அம்மரத்தின் அடியிலேயே புத்தர் பெருமான் ஞானோதயம் பெற்றார். தமக்கு நிழல் தந்து குளிர்வித்துத் தமக்குப் போதம் ஏற்படக் காரணமாக இருந்த போதி மரத்தைப் பார்த்தபடி ஏழு நாட்கள் அதன் எதிரில் இன்புற்று வீற்றிருந்தார் அவர் என்பதும் அம்மரத்திற்குப் பெருமையை அளிக்கிறது.

போதி மர வழிபாடும் மகிந்தரால் ஆரம்பிக்கப்பட்டதாகும். அவரது ஆலோசனையின் பேரிற் புத்த காயாவில் உள்ள போதி மரத்தின் கிளையொன்று இலங்கைக்குக் கொண்டு வரப்பட்டு அநுராதபுரத்தில் நாட்டப்பட்டது. இது இன்று பழம்பெரும் விருட்சமாக அங்கு காட்சி அளிக்கின்றது; ''மகா போதி'' என்று அழைக்கப்பட்டு, வந்தனைக்குரிய புனித எச்சமாகக் கருதப்படுகிறது

ஒவ்வொரு விகாரையிலும் ஒரு புத்த அறை (புதுகே) உண்டு. அங்கு புத்தர் சிலைகள் வைக்கப்பட்டிருக்கும். புத்தப்

பிரதிமை வழிபாடு மகிந்தர் காலத்திலேயே ஏற்பட்டது என்பர். இங்ஙனம் தாதுகோபம், புத்தர், புனித போதி மரம் ஆகிய மூன்றும் விகாரையோடு சேர்ந்த வழிபாட்டுக்குரிய புனிதப் பொருள்களாகக் கருதப்படுகின்றன.

மகிந்தர் காலத்திலிருந்து, பௌத்தத் துறவியரே (பிக்குகளே) புத்த சாசனத்தைப் பாதுகாத்து வந்துள்ளனர். புத்த தத்துவத்தின் தூய்மையைப் பேணிப் பௌத்தர்கள் வாழ்வின் வழிகாட்டிகளாக விளங்கியவர்களும் அவர்களே. சாதாரண மக்களின் நாளாந்த வாழ்க்கையை நெறிப்படுத்திவரும் பணியை மேற்கொண்டவர்கள் போற்றுதலுக்குரியவர்களானுர்கள்.

பிக்குமாரே புத்தமதச் சடங்குகளேயும் விழாக்களேயும் வளர்த்தார்கள். போசன் மாதத்துப் பௌர்ணமி விழா அவற்றுள் ஒன்று. அதைப் போலப் பல விழாக்கள் பௌத்தர்களுக்கு உண்டு. அவற்றில் மிக முக்கியமான இரண்டு விழாக்கள் விசாகப் பண்டிகையும் எசலத் திருவிழாவும் ஆகும்.

விசாகத் தினத்தன்று வீடுகளும் தோட்டங்களும் கொடிகளாலும் விளக்குகளாலும் தோரணங்களாலும் அலங்கரிக்கப் பட்டிருப்பதை நீங்கள் கண்டிருப்பீர்கள். விசாக இரவில் ஒளிகளாலும் அலங்காரப் பந்தல்களாலும் வண்ண வண்ண விளக்குகளாலும் சோதிமயமாக நாடெங்கும் காட்சியளிக்கும். நீங்கள் அவற்றைப் பார்த்து மகிழ்ந்திருப்பீர்கள். பௌத்த அடியார்கள் அந்த இரவில் மேற்கொள்ளும் முக்கியமானதொரு பணி அன்னதானப் பணி. பௌத்த மதத்தவர்கள் பெருந்திரளாகத் தமது கோயில்களுக்குச் சென்று அட்டசீல நோன்பு நோற்பார்கள். நாள் முழுவதையும் அங்கேயே தியானத்திலும் சமய உபன்னியாசங்களேச் செவி மடுப்பதிலும் கழிப்பார்கள்.

பௌத்தர்தம் விசாகத் திருநாள் புத்தர் பெருமானது பிறப்பு, அவரது ஞானேதயம், பரிநிர்வாணம் ஆகிய மூன்று சம்பவங்களே நினைவுறுத்தும் புனிதத் திருநாளாகும். 2500 ஆண்டுகளுக்கு முன் வட இந்தியாவிலே லும்பினி வனத்திற் புத்தர் பிறந்தார்; எண்பது ஆண்டுகள் வாழ்ந்தார். குசிநாரா நகரத்திலுள்ள உபவர்த்தனம் என்ற பூங்காவிற் பரிநிர்வாணம் அடைந்தார். இங்ஙனம் வைகாசி மாதப் பௌர்ணமியில் இம் மூன்று சம்பவங்களும் நடந்ததைக் குறித்தே விசாகத் திருவிழா கொண்டாடப்படுகிறது.

ஆடிமாதம் நடக்கும் எசல விழாவும் இன்னொரு முக்கிய விழாவாகும். தாயின் உதரத்தில் புகுந்த நாளும் அபிநிக்மன நாளுமாக இந்த நாள் விளங்குகின்றது. சித்தார்த்தர் துறவு பூண்டு உண்மையைத் தேடி வெளியேறிய நாளே அபிநிக்மன நாள் எனப்படுவது. சித்தார்த்தர் தமது 20 ஆவது வயதில் இங்ஙனம் வெளியேறினர். புத்தர் பெருமானுகித் தமது சீடருக்கு உபதேச மொழி பகர்ந்த முதல்நாளும் இதுவே. இம்மூன்று நிகழ்ச்சிகளின் வழிபாடே எசலத் திருவிழாவாகும்.

கோலாகலமாக எசலத் திருவிழா கொண்டாடப்படுவதைக் கண்டியில் காணலாம். நீங்களும் தலதாப் பெரஹெறாவைப் பார்த்திருப்பீர்கள். புனித தலதா மாளிகையில் வைத்துப் பேணிப் போற்றப்பட்டு வரும் தாதுவாகிய புத்த தந்தத்தின் ஊர்வலமே இது.

புத்தரது புனித தந்தம் அனுராதபுரக் காலத்திலேயே கொண்டுவரப்பட்டதாகத் தெரிகிறது. தலதா மாளிகையும், நாத, விஷ்ணு, கதிர்காம, பத்தினி தேவாலயங்களும் இணைந்தே தலதாப் பெரஹெறாவை நடத்துகின்றன. சிங்கள பௌத்த கலாச்சாரம், நடனம், இசை ஆகியவற்றின் பெரு விழாவாகக் கண்டி பெரஹெரா விளங்குகிறதெனலாம்.

விசாகம், போசன், எசல முதலிய தேசிய சமயப் பண்டிகைகளுக்குப் புத்த சாசனமே அடிப்படையாக விளங்குகின்றதெனலாம். வழிபாட்டிற்குரியவற்றை வழிபடுவதற்காகவே பௌத்தர்கள் இங்ஙனம் விழாக்கள் எடுக்கின்ருர்கள். சிறந்த மனிதப் பண்புக்கு அடையாளமாக இச்செயல் விளங்கின்றது.

## (இ) முஸ்லிம் பெருநாள்கள்

விழாக்கள், பொதுவான நம்பிக்கைகள், பாரம்பரியங்கள், சடங்குகள் என்பன ஒரு சமுதாயத்தை ஒன்றிணைக்கும் சக்திகளுள் சிலவாகும். இன்று உலகில் வாழும் பல்வேறுபட்ட இனங்களையும், நாடுகளையும், குழுக்களையும் சார்ந்த 90 கோடி முஸ்லிம்களை இஸ்லாம் சமயம் ஒன்றிணைக்கிறது. இஸ்லாத்தின் இறுதி நபியான முஹம்மத் (ஸல்) அவர்கள் மனித இனத்துக்குச் சிறந்த நெறிகளை எடுத்துக்காட்டினூர்கள். சகல உலகங்களையும் படைத்தவனும், போஷிப்பவனும், காப்பாற்றுபவனும் ஆகிய அல்லாஹ் தஆலா ஒருவனே என்றும் முஹம்மத் (ஸல்) அவர்கள் அவனது தூதர் என்றும் இஸ்லாம் போதிக்கின்றது. எல்லா வணக்கங்களும் இறைவனுக்கு மட்டுமே உரியவை. முஸ்லிம்கள் கொண்டாடும் விழாக்களும் இறை வணக்கமாக இருந்து வருக்கின்றன.

உலகெங்கும் வாழும் முஸ்லிம்கள் பொதுவாக மூன்று விழாக்களைக் கொண்டாடுகின்றனர்— அவை:

(அ) **ஈதுல்–பித்ர்** (ஈகைப் பெருநாள்) :
இது ''நோன்புப் பெருநாள்'' எனப் பொதுவாக அழைக்கப்படுகிறது.

(ஆ) **ஈதுல்–அழ்ஹா** (தியாகப் பெருநாள்)
இதை ''ஹஜ்ஜுப் பெருநாள்'' எனவும் அழைக்கிறூர்கள்.

(இ) **மீலாதுன்–நபி** முஹம்மத் நபி (ஸல்) அவர்களின் பிறந்த நாள்.

**ஈதுல்–பித்ர்**

ஒரு மாத காலம் நீடிக்கும் றம்ழான் நோன்பின் முடிவில் இப்பெருநாள் கொண்டாடப்படுகின்றது. இஸ்லாத்தின் கட்டளைப்படி சகல முஸ்லிம் ஆண், பெண்களும் றம்ழான் மாதம் முழுவதும் நோன்பு அனுட்டிக்க வேண்டும். இக்கடமையை நிறைவேற்ற முடியாத நோயாளர், சிறுவர், பயணிகள் என்போர் அக்கடமையை நிறைவேற்றுவதிலிருந்து விலக்களிக்கப் பட்டுள்ளனர். இப்புனித நோன்பின்போது உண்பது, பருகுவது,

உடல் இன்பங்களை அனுபவிப்பது விலக்கப்பட்டுள்ளன. இவ்வாறு உடலின்பங்களைத் துறந்து நோன்பு அனுட்டிப்பதால் மனிதன் தன் இழிந்த இயல்புகளை விட்டுச் சீர்பெறுகிறன். தன்னடக்கம், பொதுநலம் பேணல் என்னும் பண்புகள் அவனில் வளர்க்கின்றன. வாய்ப்பும், வசதியும் குறைந்தவர்களின் மீது அன்பும் பரிவும் ஏற்படுகின்றன. நல்ல நோக்கமும், தியாக சிந்தையும், பிறர்க்குதவும் மனப்பான்மையும் இந்நோன்பின் மூலமாக மனிதனுக்கு ஏற்படுகின்றன. இதனுல் ஈதுல் பித்ர் தினத்திலே ''பித்ரு'' என்ற உணவுக்கொடை அளிக்கிறன். வேறு பல சன்மானங்களையும் வழங்குகிறன்.

நோன்புக் கால முடிவில் இவ்வாறு ஏழைகளுக்கு உணவு, உடை, பானம் என்பன வழங்கப்படுவதால் சமுதாயத்திலுள்ள வறியோரும், பணம் படைத்தோரைப் போன்று மகிழ்ச்சியுடன் ஈதுல்-பித்ர் பெருநாளைக் கொண்டாட வழி ஏற்படுகிறது. ஏழை, பணக்காரர் என்ற பேதமின்றி சகலரும் சமத்துவமாக அந்நாளை மகிழ்ச்சியுடன் கொண்டாடுகின்றனர். செல்வந்தர் தமது சொத்தின் ஒரு பாகத்தை ஏழைகளுக்குப் பகிர்ந்தளித்தல் ''ஸக்காத்'' என அழைக்கப்படும். இது வாய்ப்புப் பெற்ற முஸ்லிம்களுக்குக் கட்டாயக் கடமையானதொரு சேமநல வரியாகும். இது ஆண்டு தோறும் றம்ழான் மாதத்தில் வழங்கப்படுகின்றது.

அல்லாஹ் தஆலாவின் அருட் கொடைகளுக்கு நன்றி செலுத்தும் முகமாக ஈதுல்-பித்ர் பெருநாள் தொழுகை அனுட்டிக்கப்படுகின்றது. பள்ளிவாசல்களில் முஸ்லிம்கள் ஒன்று சேர்ந்து அத்தொழுகையைச் சிறப்பாக நடாத்துவர். அத்தோடு இனசனத்தார், அயலார், நண்பர்கள் என்போரின் இல்லங்களையும் அன்றைய நாளில் தரிசிப்பர்.

**ஈதுல் – அழ்ஹா**

அறபு மாதமான துல்ஹஜ்ஜு மாதத்திலேயே இஸ்லாத்தின் ஐம்பெரும் கடமைகளுள் ஒன்ருன ஹஜ்ஜு வணக்கம் மக்காவில் நடைபெறுகின்றது. அம்மாதத்தின் பத்தாம் நாளன்று ஈதுல்-அழ்ஹாப் பெருநாளை முஸ்லிம்கள் கொண்டாடுவர். இப்பெருநாள், நபி இப்ருஹீம் (அலை) அவர்கள், தமது மகன் இஸ்மாஈல் (அலை) அவர்களை அல்லாஹ் தஆலாவின் கட்டளைக்குப் பணிந்து தியாகம் செய்ய முனைந்த நிகழ்ச்சிகளை நினைவு கூரும் நாளாகும். ஏறக்குறைய நாலாயிரத்தைந்நூறு ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த நபி இப்ருஹீம் (அலை) அவர்

கள் தமது எண்பத்தைந்தாவது வயதில் பிள்ளைப் பாக்கியத்தைப் பெற்றார்கள். தள்ளாத வயதில் தமது தந்தையின் பரம்பரையைக் காக்க வந்த ஒரே மகனை அல்லாஹ் தஆலாவின் ஆணைக்கு அர்ப்பணித்து தியாகம் செய்ய முன்வந்தார்கள் நபி இப்றாஹீம் (அலை) அவர்கள். அல்லாஹ் தஆலாவின் மீது அன்னவர்களுக்கு அளவில்லாத பற்றிருந்தது என்பதற்கு இந்த நிகழ்ச்சி தக்க சான்றாகும். எனினும், அல்லாஹ் தஆலா அவர்களது மகனைப் பலியாக்குதைத் தடுத்து, அதற்குப் பதிலாக ஒரு ஆட்டைப் பலியிடுமாறு கட்டளையிட்டான். இப்பெரு நிகழ்ச்சியின் நினைவாகவே முஸ்லிம்கள் ஈதுல்-அழ்ஹா தினத்தில் மிருகங்களை இறைவனின் பெயரில் அறுத்து, அவற்றின் இறைச்சியை இனத்தவர்களுக்கும், அயலவர்களுக்கும், வறியவர்களுக்கும் பகிர்ந்து கொடுக்கின்றனர். மேலும் மனிதனில் உள்ள மிருகத் தன்மையானது மறைய வேண்டுமென்பதையும் இந்நிகழ்ச்சியின் மூலம் முஸ்லிம்கள் உணர்ந்துகொள்கின்றனர்.

ஈதுல்-பித்ர் பெருநாளைப் போன்று ஈதுல்-அழ்ஹா பெருநாளன்றும் பள்ளிவாசல்களில் சிறப்பான தொழுகைகள் நடைபெறுகின்றன. அத்தினத்தில் உற்றார், உறவினர், அயலார், நண்பர்கள் என்போரின் இல்லங்களைத் தரிசித்தலும் முஸ்லிம்களின் பெருவழக்காகும்.

மீலாதுன் – நபி

முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் பிறந்த நினைவு தினம் இதுவாகும். உலகில் தோன்றிய முன்னைய நபிமார்களால் முன்னுரைக்கப்பட்ட இறுதி நபியான முஹம்மத் (ஸல்) அவர்களை நினைவு கூர்ந்து கண்ணியப்படுத்துதல் இந்நாளின் முதன்நோக்கமாகும். இரண்டாவதாக, அகில உலகுக்கும் ஏற்ற சகோதரத்துவத்தையும், சமாதானத்தையும், சமத்துவத்தையும் போதித்த நபி என்ற முறையில் இப்பெருநாள் கொண்டாடப்படுகின்றது. (படைத்தவனுக்குக் கட்டுப்படுதலும் படைப்புகளுடன் சமாதானமும், சகோதரத்துவமும் என்பன அவர்கள் போதித்தாகும்). மீலாதுன்-நபி நிகழ்ச்சிகள் ஒரு மாத காலம் நீடிக்கின்றன. இதன் சிறப்புக்களில் பின்வருவன குறிப்பிடத்தக்கன. அவை :-

(அ) முஹம்மத் நபி (ஸல்) அவர்களின் வாழ்வையும், பணியையும் அடிப்படையாகக் கொண்ட ''மௌலூத்'' என்னும் நல்லுரைகளை முஸ்லிம்கள் தம் வீடுகளிலும் பொது இடங்களிலும், பள்ளிவாசல்களிலும் ஓதி, ஏழைகளுக்கு இலவச உணவு வழங்குவர்.

(ஆ) பொதுக் கூட்டங்களை ஒழுங்குபடுத்தி, அவற்றில் முஸ்லிம் அறிஞர்களையும், பெரியார்களையும் கொண்டு அண்ணல் நபி (ஸல்) அவர்களின் முன் மாதிரிகளை விளக்கி அவ்வழியில் நடக்கும்படி முஸ்லிம்களைத் தூண்டுவர். அறபு மாதமான றபீஉல் அவ்வல் மாதத்தின் எல்லா நாட்களிலும் அவ்வித நிகழ்ச்சிகள் இடம்பெற்றபோதிலும் விசேடமாக முதற் பன்னிரு நாட்களிலும், அதிவிசேடமாகப் பன்னிரண்டாம் நாளிலும் அந்நிகழ்ச்சிகள் அதிகம் இடம்பெறும். அந்நிகழ்ச்சிகளில் பிற மதத்தினரும் கலந்துகொள்வதை நாம் சாதாரணமாக அவதானிக்கலாம். நபி (ஸல்) அவர்கள் பிறந்த மாதமான றபீஉல் அவ்வல் வரும்போது மனிதர்களிடையே அவர்களின் நினைப்பும், அன்புணர்வும் தலையெடுக்கின்றன. அவர்கள் மனித சமுதாயத்துக்கு ஆற்றிய அரும்பணிகளையும், அவர்களிற் காணப்பட்ட உயர் பண்புகளையும் முஸ்லிம்கள் நினைவிற் கொள்ளுகின்றனர். அவர்கள் மனித வாழ்வைச் சீர்திருத்தினார்கள். வாழ்வில் அமைதி, அன்பு, கருணை, நீதி, சமாதானம், சகோதரத்துவம், சகிப்புத்தன்மை என்பவற்றைக் கடைப்பிடிக்க வேண்டுமெனப் போதித்தார்கள். அவர்களது பணியால் முரடராக வாழ்ந்த அறபிகள் முற்போக்கானவர்களாக மாறினர். மிருகத் தன்மையை விட்டுப் புனிதத் தன்மையைப் பெற்றனர். தீய குணங்கள், செயல்களிலிருந்து விடுபட்டுத் தூய வாழ்க்கை வாழ முன்வந்தனர். அவர்கள் செய்த சேவைகளால் இன்று உலகம் உன்னத நிலையை அடைந்துள்ளது என்பதால் அவர்களது பிறந்த தினம் உலக மக்கள் எல்லோராலும் கௌரவிக்கப்படுகிறது.

முஸ்லிம் பெருநாட்கள் அவற்றின் தன்மையிலும், உருவத்திலும், தனித்துவம் வாய்ந்தவையாகும். ஆன்மீகத் துறையில் அக்கறை கொள்ளுதலே இப்பெருநாட்களின் முக்கிய சிறப்பாகும். இப்பெருநாட்களின் மூலம் படைத்தவன் மீதும், படைப்புக்களின் மீதும் ஆழ்ந்த பற்று உண்டாகின்றது. இப்பெருநாள் தினங்கள் வசதி குறைந்தோருக்கு உணவு, உடை, பணம் என்பன வழங்குவதன் மூலம் அன்பு, கருணை, சகோதரத்துவம் என்பவற்றையும் தியாக சிந்தையையும் செயலில் காட்ட உதவுகின்றன. இப்பெருநாட்களில் வீண் ஆடம்பரங்களுக்கும், கேளிக்கைகளுக்கும் இஸ்லாம் இடமளிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## (ஈ) கிறிஸ்தவ திருவிழாக்கள்

கிறிஸ்மஸ் அல்லது நத்தார் என்பது பலரும் அறிந்த சொல். ''கடவுள்-மனிதன்'' ஆன இயேசுக் கிறிஸ்துவின் பிறப்பை இந்நாள் குறிக்கிறது. இந்நிகழ்ச்சியை அனைத்துலக மக்களும் பெரு விழாவாகக் கொண்டாடுகின்றனர். இது கிறிஸ்தவர்களுக்கு அதிமுக்கியம் வாய்ந்த பெருவிழாவாகும். ஏறத்தாழ 2000 ஆண்டுகளுக்கு முன்னர் கிறிஸ்து பெருமான் பிறந்தார். ஆனால் கி. பி. 300 ஆண்டுகளின் பின்னரே கிறிஸ்மஸ் விழா இடம்பெறத் தொடங்கியது.

ஆதிகால உரோமர் ''மித்திராஸ்'' என அழைக்கப்பட்ட சூரியக் கடவுளை வணங்கிவந்தனர். ஆனால் அவர்கள் கிறிஸ்தவ முறையைத் தழுவிய பின், உலகின் பாவ இருளைப் போக்குபவர் கிறிஸ்துவே என்பதை ஏற்றுக்கொண்டனர். இதன் பின்னர் சூரிய விழா கிறிஸ்மஸ் விழாவாக மாற்றம் பெற்று ஆண்டுதோறும் மார்கழி மாதம் 25-ஆம் திகதி கொண்டாடப்பட்டுவருகிறது.

ஈழநாட்டில் கிறிஸ்மஸ் விழா ஆரம்பித்தது 16 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலிருந்தாகும். மனித உரு எடுத்த கிறிஸ்துவைக் கௌரவிக்கும் முகமாக இலங்கை வாழ் கிறிஸ்தவர்கள் அன்பும் பணிவும் கொண்ட மனத்தினராய் மார்கழித் திங்கள் 24 ஆம் திகதி நடுநிசி வேளையில் ஒன்று கூடுகின்றனர். உலகெங்கும் பரந்து வாழும் கிறிஸ்தவ மக்கள் இப்புனித இரவில் இறைவனை வழிபடுகின்றனர்; அவரைப் புகழ்கின்றனர். இன்பம் பொங்கும் இரவு இது...... அமைதியின் இரவு...... அமைதியின் அரசரான இயேசுக் கிறிஸ்துவுக்கு அர்ப்பணிக்கப்பட்ட இரவு.

மனித சமுதாயத்தின் அடிப்படைக் கூறாக அமைவது குடும்பம். குடும்பத்தின் விழா கிறிஸ்மஸ். கிறிஸ்தவ இல்லங்களில், மக்கள் மதித்துப் போற்றும் பல வழக்கங்கள் இடம்பெற்றுள்ளன. நன்மனத்தோரிடையே அன்பையும், மதிப்பையும், அமைதியையும் குறிக்கும் அடையாளமாக இலங்கையில் கிறிஸ்மஸ் விளங்குகிறது. கிறிஸ்மஸ் அன்று பிள்ளைகள் தம் பெற்றோரை வணங்குவர். நன்கொடை வழங்கலும், கைவிசேடம் பரிமாறு

தலும் இடம்பெறும். உற்றார் உறவினர் ஒன்றுகூடி நத்தார் வாழ்த்துக்களைத் தெரிவிப்பர். தூர இடங்களில் வதியும் இன சனத்தவருக்கு நத்தார் வாழ்த்து மடல்களை அனுப்புவர்.

கிறிஸ்மஸ் காலப் பகுதி கிறிஸ்தவர்கள் புத்துயிர் பெறும் பருவம் ஆகும். நத்தார் கேக், பல வகையான பலகாரங்கள், அறுசுவை உண்டி என்பவற்றை ஆக்கி ஒன்றுகூடி உண்டு மகிழ்வர். இல்லங்களை அழகுற அலங்கரித்தலும் இவ்விழாவின் ஓர் அமிசமாகும். பல வர்ண வெளிச்சக் கூடுகள், கிறிஸ்மஸ் மர அலங்காரம், வெடி, வாணவேடிக்கை என்பன கிறிஸ்மஸ் கிட்டிவிட்டதை எடுத்துக்காட்டும். இக்காலத்தில் இளைஞர் கேளிக்கைகளிலும், விளையாட்டுக்களிலும் ஈடுபட்டு இன்புறுவர். கிறிஸ்தவர்கள் இறைமகன் இயேசுவைச் செல்லமாக ''பாலன்'' என அழைப்பர். மாட்டுத்தொழுவத்தில் யேசு பிறந்த நிகழ்ச்சியைச் சித்திரிக்கும் ''பாலன் பிறப்பு'' உருவங்களை வீடுகளில் ஆக்கி, பத்திப் பாடல்களையும், ''கரோல்'' கீதங்களையும் இசைப்பர். இவ்வித வழக்கங்கள் கிறிஸ்தவர் இலங்கைக்கு வழங்கிய பண்பாட்டு முதுசொத்து ஆகும். பல்வேறு மதத்தவர் மத்தியில் நல்லுறவை வளர்க்கும் சாதனமாகவும் நத்தார் திகழ்கிறது. பௌத்தர்கள், இந்துக்கள், முஸ்லிம்கள், கிறிஸ்தவர்கள் என்போர் கிறிஸ்து பிறந்த காட்சியை அமைப்பதிலும், கரோல் பாடல்களைப் பாடுவதிலும் ஒன்றுபடுவர். இங்ஙனம் கிறிஸ்தவ சமூகப் பண்பாடு படிப்படியாகத் தேசியப் பண்பாடாக மாற்றம் பெறுகிறது. அமைதியின் அரசர் இயேசு பெருமான் அனைத்து உலகுக்கும் ஆசி அருளி அமைதி அளிப்பாராக.

**ஈஸ்டர் அல்லது பாஸ்கா விழா**

இது மிகவும் பழமை வாய்ந்த விழாவாகும். வரலாற்றில் இடம்பெற்ற நிகழ்ச்சி ஒன்றை இது குறிக்கிறது. பாஸ்கா என்ற சொல் கடந்து செல்லுதல் அல்லது கடத்தல் என்ற பொருள் உடையது. அடிமைத் தனத்தில் இருந்து விடுதலைக்குக் கடந்து செல்லுதல், சாவில் இருந்து வாழ்வுக்குக் கடத்தல் எனும் ஆழ்ந்த பொருளைப் பாஸ்கா குறிக்கிறது. எகிப்து நாட்டில் அடிமைகளாக வாழ்ந்த இஸ்ரவேல் மக்கள் கி. மு. 1225 இல் அரசியல் சுதந்திரம் பெற்றனர். விடுதலை அடைந்த இஸ்ரவேலர் பாலும், தேனும் வழிந்தோடும் வளநாடான கானுவுக்கு இடம்பெயர்ந்து சென்றனர். இந்நிகழ்ச்சி அவர்களின் தேசிய விழாவாக மட்டுமன்றி யூத மத விழாவாகவும் படிப்படியாக

மாற்றம் பெற்றது. பாஸ்கா, செம்மறி, புளியாத அப்பம், கசப்பான செடி என்பன போன்ற அடையாளங்கள் இவ்விழா வில் இருந்து தோன்றின.

சாவை வென்று உயிர்த்த கிறிஸ்து, தமது உயிர்ப்பின் வழி யாக இவ்விழாவுக்குப் புத்துயிரும் கருத்தும் கொடுத்தார். இது வே பாஸ்கா மறைபொருள் என அழைக்கப்படுகிறது. மனிதனுல் விளங்கமுடியாத மறைபொருள் இது.

அநீதி முதலிய ஒழுக்கமற்ற அடிமைத்தனங்களிலிருந்து மனித இனத்தை மீட்பதற்காகக் கிறிஸ்து வாழ்ந்து உயிர் நீத்தார். அவரது பாடுகளும், மரணமும் இதற்குச் சான்ருகும். மீட் பரான இயேசு கிறிஸ்துவின் தெய்விகப் பணி இதுவாகும். அன் பின் அடையாளமாகத் தமது உயிரை அளித்து, தமது நல்லுரை களுக்குச் சான்ருக மிளிர்ந்தார். ''தனது நண்பனுக்காக உயி ரைக் கொடுப்பதிலும் மேலான அன்பு வேறு எதுவும் இல்லை''.

கிறிஸ்துவின் உயிர்ப்பானது நீதி, அமைதி, உண்மை, அன்பு என்பன இறுதியில் வெல்லும் என்பதற்குச் சான்ருக அமைகிறது. ஈஸ்டர் அல்லது கடத்தல் என அழைக்கப்படும் உன்னத மீட்பின் மறைபொருளைக் கிறிஸ்தவர்கள் இன்று கொண்டாடுகின்றனர். துன்ப வேதனைகளில் தொடங்கி, இறப் பின் புதுவாழ்வுக்கு இட்டுச் செல்லும் விழா இதுவாகும்.

பெரிய வியாழன் அன்று கிறிஸ்தவ ஆலயங்களில் ஏழை களின் பாதங்களைக் கழுவுதலும், அன்பின் உணவான திருவிருந்தும் இடம்பெறும். அடுத்த நாளான பெரிய வெள்ளி யன்று கிறிஸ்துவின் திருப்பாடுகளும், திருமரணமும் நினைவு கூரப்படும். ஆசி நீர் அல்லது தீர்த்தம், தைலம், மெழுகுவர்த்தி என்பனவற்றை மந்திரிக்கும் சடங்கு பெரிய சனியன்று நடை பெறும். தொடர்ந்துவரும் நாளான உயிர்த்த ஞாயிறன்று ஈஸ்டர் பலியில் கிறிஸ்தவர்கள் பங்குகொள்வர். விடுதலை அடைதலின் அர்த்தமுள்ள அடையாளங்களாக இவை விளங்கு கின்றன.

கிறிஸ்துவின் இறப்புடன் அவரது வாழ்வு முடிந்திருந்தால் கிறிஸ்தவம் அத்திவாரமில்லாத மதமாக இருந்திருக்கும். கருத் தற்ற ஒரு வெற்றுக் கோட்பாடாகக் கருதப்பட்டிருக்கும். ஆனல் ''கிறிஸ்து சாவில் நின்று உயிர்த்தெழுந்தார். அனைத்து மனித இனத்துக்கும் மீட்புப் பெற்றுத் தந்தார்'' எனக் கிறிஸ்த வர்கள் விசுவாசிக்கின்றனர். இது கிறிஸ்தவ மறையின் அடிப்

படையான மறை பொருளாகும். இதை நம்பி வாழ்வோர் கிறிஸ்துவுக்குச் சான்று பகரத் தம்மால் ஆனவையெல்லாம் செய்கின்றனர்.

இலங்கை வாழ் கிறிஸ்தவ மக்கள் வாழ்வின் பல பகுதிகளி லும் கிறிஸ்துவின் பாடுகளையும், மரணத்தையும் விளக்கும் திருப் பாடுகளின் காட்சிகளை மேடையேற்றுகின்றனர். இதனால் அமை தியின் செய்தியைச் சாதாரண மக்களும் அறியும் வண்ணம் உழைக்கின்றனர். இன்னும் தேசிய நாடகம், பண்பாடு என் பனவற்றுக்கும் உதவுகின்றனர்.

உயிர்த்த கிறிஸ்து இன்றும் எம்முடன் வாழ்கிறார். அவர் எமக்குப் புத்துயிர் அளிக்கிறார். புதுவாழ்வில் அவர் மரணத்தை வென்று முடிவில்லா வாழ்வைப் பெற வலுவும் அளிக்கிறார்.

**பெந்திக்கோஸ்து விழா**

கிறிஸ்தவர்களுக்குரிய சிறப்பான விழா இதுவாகும். சாவை வென்ற சத்தியனை கிறிஸ்து உயிர்நீத்த பின்னர் தமது சீடர்களுடன் நாற்பது நாள்கள் வாழ்ந்து தமது தந்தையாகிய இறைவனிடம் விண்ணேகினார். பத்து நாட்களின் பின்னர் அதாவது உயிர்த்த நாளிலிருந்து ஐம்பது நாட்களின் பின்னர் பரிசுத்த ஆவியானவரை அப்போஸ்தலர் மேல் இறங்கச்செய் தார். அப்போது சீடர்கள் செபக் கூடத்தில் அமர்ந்து செபித் துக்கொண்டிருந்தனர். அப்போஸ்தலர்களை ஒளிபெறச் செய்த அதே பரிசுத்த ஆவியானவர் இன்றும் அன்னை திருச்சபைக்கு உயிரும் வலுவும் அளித்து அவர் மேற்கொண்ட நித்திய வாழ் வுப் பயணத்துக்கு வழிகாட்டியும் வருகிறார்.

பெந்திக்கோஸ்துவிழா மத நிகழ்ச்சி மட்டும் அன்றி வரலாற்று நிகழ்ச்சியுமாகும். விவிலியத்தின் பழைய ஏற்பாட்டுக் காலத்தி லும் பெந்திக்கோஸ்து விழா இடம்பெற்றது. எகிப்தில் இருந்து கடந்து சென்ற 50 வது நாளில் சீனாய் மலையில் பத்துக் கட்டளை களை இறைவன் மோயீசனுக்கு அளித்த நிகழ்ச்சியையும், இறை வனுக்கும் அவரால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களுக்கும் இடை யிலான உடன்படிக்கையைப் புதுப்பித்ததையும் இந்நிகழ்ச்சி குறித்து நின்றது. புதிய ஏற்பாட்டின்படி கிறிஸ்து உயிர்த்த திலிருந்து 50 வது நாள் அன்றே பரிசுத்த ஆவியானவர் அப் போஸ்தலர் மேல் இறங்கினார். எனவே ஐம்பது என்று பொருள் படும் ''பெந்திக்கோஸ்து'' என்ற பெயர் இவ்விழாவுக்கு மிகவும் பொருத்தமானதே.

RELIGION
(HINDUSAM)
சமயம்

நம் நாட்டு இளஞ் சந்ததியினரின் நன்மைகருதி நம் அரசாங்கம் உங்களுக்கு வழங்கும் இந்நூலை அடுத்த ஆண்டும் உங்கள் சகோதரர்களுக்கு வழங்கத் தக்கமுறையில் கவனமாக வைத்துப் படிக்க.

பாடசாலைப் பெயர் : ..............................

| | மாணவர் பெயர் | ஆண்டு | வகுப்பு ஆசிரியரின் கையொப்பம் |
|---|---|---|---|
| 1987 | | | |
| 1988 | | | |
| 1989 | | | |
| 1990 | | | |
| 1991 | | | |
| 1992 | | | |